விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 06 ஞாயிற்றுக்கிழமை (22.08.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 246

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா வருவார்

## ஒக்டோபரில் பேச்சு நடக்கும்



(டில்லி)

இலங்கை இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வைக் காண்பதற்கான பேச்சு வார்த்தைகளை முன்னெடுப்பதற்காக எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## மாற்றுக் கொள்கையாளர் மீது அரசு அடக்குமுறை செய்கிறது

### கரு ஜெயசூரிய காட்டம்

(கொழும்பு)

மாற்றுக் கொள்கையாளர்களை இந்த அரசாங்கம் அடக்கு முறைக்கு உட்படுத்துவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

கடுமையான வன்முறைகள் மற்றும் அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விட்டு எதிர்க்கட்சிகளுக்கு அரசாங்கம் நெருக்கடி கொடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கிடையில் முறுகல்களை ஏற்படுத்தி அதன் மூலம் அரசியல் இலாபம் ஈட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஜே.வி.பியின் (20 ஆம் பக்கம் பார்க்க)

வாழ்த்துகிறோம்

இன்று நடைபெறும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் வெற்றிகரமாகப் பரீட்சையில் சித்தி அடைய மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வலம்புரியின் கல்விப் பகுதி

## 13 ஆவது திருத்தச் சட்டமூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வல்ல

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்து

(யாழ்ப்பாணம்)

13-வது திருத்தச் சட்ட மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வல்ல. அது இனப்பிரச்சினைக்குத் தீர்வினைக் காண்பதற்கு நடைமுறைச் சாத்தியமான ஓர் ஆரம்பப் புள்ளியாகும்.

இவ்வாறு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தில் நேற்று நடைபெற்ற 13-வது அரசியல் யாப்புத் திருத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பான செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், 13-வது திருத்தச்சட்ட மூலம் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நுழைவாயில். அந்த நுழைவாயிலின் ஊடாகச் சென்று இனப்பிரச்சினைக்கான தீர்வை அடைய வேண்டும்.

அதுவே நடை (20 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பயிற்சிக்கு உதவுமாறு ஒஸ்ரின் என்னிடம் கேட்டார்

### முன்னாள் கடற்படைத் தளபதி தயா சந்தகிரி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் பயிற்சிகளை மேற்கொள்ள திருகோணமலைக் கடற்பரப்பில் ஒரு பகுதியை வழங்குமாறு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ தன்னிடம் கேட்டதாகவும் தான் அதனை மறுத்துவிட்டதாகவும் முன்னாள் கடற்படைத் தளபதி தயா சந்தகிரி கூறியுள்ளார்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ உண்மைகளைக் கண்டறியும் ஆணைக்குழுவிடம் அளித்த சாட்சியம் உண்மைக்குப் புறம்பானதாகும் எனத் தெரிவித்த கடற்படைத் தளபதி தயா சந்தகிரி மேலும் தெரிவிக்கையில்,

யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்பில் ஒஸ்ரின் பெர்னாண்டோ உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவிடம் அளித்த சாட்சியம் உண்மைக்குப் புறம்பானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் யுத்த நிறுத்த உடன் (20 ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.எஸ்.பி. வரிச் சலுகை அரசுடன் பேச ஐரோ. தயார்

(கொழும்பு)

ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகைத் திட்டத்தை வழங்குவது தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சு நடத்தத் தயார் என ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

2005 ஆம் ஆண்டில் இலங்கைக்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் சலுகைத் திட்டத்தை மீளவும் நீடிப்பது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

2005 ஆம் ஆண்டு இலங்கைக்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகளும் அண்மையில் விதிக்கப்பட்ட 15 நிபந்தனைகளுக்கும் இடையில் இணைத் தொடர்பு (20 ஆம் பக்கம் பார்க்க)

வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...

சிங்கர் எயார்கண்டிஷனர்கள்

• உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை • இலகு தவணைக் கொடுப்பனவு

SLMO

யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்



SINGER®

யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 05.08.2010 வியாழக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**சுப்பிரமணியம் கணேசபிள்ளை**

அவர்களின் ஆத்மசாந்திப் பிரர்த்தனைகள் இன்று 22.08.2010 ஞாயிற்றுக்கிழமை முற்பகல்10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்வதுடன் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

134, இராசாவின் தோட்டம்
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(2231)


## நெற்செய்கைக்கான பதிவை மேற்கொள்க

(சாவகச்சேரி)

தனங்கிளப்பு பகுதியில் கடந்த வருடம் நெற்செய்கைக்கு அனுமதிக் கப்படாத விவசாயிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்குபின்னர் சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் தமது விபரங்களைபதிவுசெய்துகொள்ளுமாறுதனங்கிளப்பு விவசாயசம்மேளனசெயலாளர் கெ.வனதாஸ்அறிவித்துள்ளார். (ந-29)

## விசேட கருத்துரை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட் சியின் அங்கத்தவர்களுக்கான சமகால அரசியல் என்ற விடயம் பற்றி விசேட கருத்துரை இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் இல.43, 3ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் தலைமை செயலகத்தில் நடைபெறும் இக்கலந்துரையாடலில் கட் சியின் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு காங்கிரஸின் நிர்வாக செயலாளர் க.தங்கராஜசிங்கம் கேட்டுள்ளார். (ந)





## சிவகாளி ஜோதிடம

அன்பான யாழ்.குடி மக்களே!

உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். நீங்கள் பல சோதிடர்களை அணுகி இருந்த போதும் சரியான பலனை அறிய முடியாது உள்ளீர்களா?

இதோ இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல
கைரேகை ஜோதிட வல்லுனர்

## மஞ்சநாத சுவாமி

உங்கள் ஜாதக பலன்கள், கைரேகை, நாம நட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்து சாஸ்திரம், வெளிநாட்டுப் பயணம், எதிரிகள் கண்திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள் ஆகியவற்றுக்குச் சரியான முறையில் தீர்வு பெற்றுத் தருவார்.

உடனே நாடுங்கள்:
வெலிங்டன் சந்தி அருகாமையில்
No. 382, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோவில் வீதி)

(2237) கைரேகை, ஜோதிடம் பார்க்கும் நேரம் காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை


## சந்நிதியானுக்கு இன்று சப்பறம்

(வல்வெட்டித்துறை)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவத்தில் இன்று ஞாயிறு மாலை 6 மணிக்கு சப்பறத்திருவிழாவும், நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறு நாள் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும். (ந-63)


## UK,CANADA

ஆகிய நாடுகளுக்கு

**Student Visa**

முன்னோடிகளாக
இலங்கையில்
திகழும்



European College of higer Studies

- மீண்டும் ஒரு மைல் தடம் பதிக்கிறார்கள்
இல, 315 1/2 பலாலி வீதி, பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி.
- IELTS அவசியமற்ற, விமான நிலைய சட்ட ஆலோசகர்களைக்கொண்டு இயங்கும் ஒரே நிறுவனம்

முந்துங்கள் - பதிவுகளுக்கு

தரமான சேவை அது எம்மிடமிருந்து வரும்

Tell - 0772289882
0773537378
0213734747
email - asmy-echs@yahoo.com
web - www.europeancollege1.com

(2233)






## மைசூர் சாமுண்டீஸ்வரி ஜோதிட நிலையம்

இந்தியாவில் மந்திராலயத்திலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை ஜோதிட வல்லுனர்

**கங்காதரன் சாஸ்திரி**
**077 0712537**

கைரேகை மூலம் துல்லியமாக நடப்பவை மற்றும் நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை, பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.

**துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்**

கை ரேகை, நாம நட்சத்திரம், ஜாதகம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வீட்டில் வதிவிடப்பிரச்சினை, விஷேட பயணம், எதிரிகள் கண் திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் ஒற்றுமையாக நிலைத்திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல் இவைகள் அனைத்தும் செய்து தரப்படும்

**இவற்றினைத் தெரிந்து கொள்ள ஒருமுறை எங்களைச் சந்தித்து பயன் பெறுங்கள்**

121 A, கஸ்தூரியர் வீதி,
யாழ்ப்பாணம்.
(லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகாமையில்)

(2199)

கைரேகை பார்க்கும் நேரம்:
காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை பார்க்கப்படும்



## காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை வட்டுக் கிழக்கில் 12 பரப்பு பனை மரங்கள்,வேம்பு மரங்கள் கொண்ட வீடுகட்டும் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : நா.மனோகரன்
0773013652

(2209)

## காணி விற்பனைக்குண்டு

கொக்குவில்கிழக்கு அம்மன் வீதியில் (இராமகிருஸ்ணா பாடசாலைக்கு அருகில்) சுற்றுமதிலிடப்பட்ட 5 பரப்பு சதுரக் காணி விற்பனைக் குண்டு.

தொடர்பிற்கு :-
0777531445

(2236)

## வீடும் காணியும் விற்பனைக்கு

இல.10, தாவடி வீதி, மானிப்பாயில் (IDM கணனிநிறுவனத்துக்கு எதிராக) அமைந்துள்ள 05 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு.

தொலைபேசி இலக்கம்
0772389864

(2210)

## சாரதி நேர்முகத் தேர்வு

31.07.2010 சனிக்கிழமை விளம்பரத்தின்படி தொடர்பு கொண்டவர்களும் தொடர்பு கொள்ளாதவர்களும் வருகின்ற 24.08.2010 செவ்வாய் காலை 10.00 மணி தொடக்கம் மாலை 1.30 மணிவரை உடுப்பிட்டி தெற்கு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறும் நேர்முகத் தேர்வுக்கு வரவும். வருபவர் கள் சாரதி அனுமதிப்பத்திர நிழற்பிரதி, கிராம சேவையாளர் சான்றிதழ், சாரதியாக சேவையாற்றிய சான்றிதழ்களுடன் சமுகம் தரவும். யாழ். வீதி 15ம் கட்டை உடுப்பிட்டி சனசமுக நிலையத்துக்கு அண்மையில். (2219)



PROLINK Atom Netbook



1 Year Warranty

Pcst PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD
OUR STRENGTH IS YOUR SATISFACTION

Dialog 3.5 Mbps High Speed Broadband Available

Intel Atom 1.66MHz Processor
Mobile Intel NM10 Chipset
1GB DDR Ram, 250GB HDD
10.1" LED, 3.75G HSPA,
WiFi, 1.3Mb Web Cam, LAN, Mic,
Stereo Speakers, 3-cell Battery, 1.11kg
Only Rs.46,900/=

Dialog இன்அதிவேக Internet இணைப்பினையும் இதற்கான அதிவேக Multi Dongleயும் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.



**PCST 1**
Intel 2.7Ghz Dual Core
Intel Chipset Mother Board
320GB Harddisk
Kingston 1GB Ram
DVD Writer, Atx Casing
15.6" LCD Monitor
650VA UPS, Keyboard
Mouse, Speaker
3 Years Warranty
Only Rs48,000./=

**PCST 2**
Intel 2.7Ghz Dual Core
Intel Mother Board
500GB Harddisk
Kingston 2GB Ram
DVD Writer, Atx Casing
19' LCD Monitor
650VA UPS, Keyboard
Mouse, Speaker
3 Years Warranty
Only Rs.55,700/=

நல்லூர் கந்தனின் உற்சவ கால
மாபெரும் விலைக் கழிவுகள்
~சந்தர்ப்பத்தை பயன்படுத்துங்கள்~

**PCST 3**
Intel 2.93 Ghz Core 2 Dou
Intel Chipset Mother Board
320GB Harddisk
Kingston 1GB Ram
DVD Writer, Atx Casing
15.6" LCD Monitor
650VA UPS, Keyboard
Mouse, Speaker
3 Years Warranty
Only Rs.53,700/=

**PCST 4**
Intel 2.93 Ghz Core 2 Dou
Intel Mother Board
500GB Harddisk
Kingston 2GB Ram
DVD Writer, Atx Casing
19' LCD Monitor
650VA UPS, Keyboard
Mouse, Speaker
3 Years Warranty
Only Rs.61,600/=

M.M.V Road, Nelliady.
T.P: 021 226 4999

305, Kasthuriyar Road, Jaffna.
T.P: 021 222 1101, 021 222 9644
E.Mail: pcsjaffna@sltnet.lk

No:5, Kanakapuram Road, Kilinochchi.




20.08.2010 முதல்

சூர்யா, ஸ்ருதிகா, வடிவேல், விஜயகுமார் மற்றும் பலர் நடித்த



ஸ்ரீ

செல்லா சினிமா (நாதன்ஸ்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.00, 9.0


LOLC
imagine the possibilities
"டக்காலா லீசிங்" ஒன்றை பெற்றுக்கொள்ளுங்கள்
டக் காலா Leasing
நீங்களும் LOLC "டக்காலா" leasing ஒன்றை பெற்று "ரூம்ம்ம்" என்று காரில் செல்லுங்கள்
• உங்களுக்கேற்ற வாடகைகள்
• விரைவு மற்றும் சினேகபூர்வமான சேவை
• நிறுவனத்தாலேயே காப்புறுதி மற்றும் மதிப்பீடு
• நாடளாவிய ரீதியில் கிளைகள் வலையமைப்பு
011 5 880 600
inquiries@lankaorix.com
Rediffusion-Y&R


தற்போது, வங்கியொன்று
அடகிற்கு வழங்கும்
அதி கூடிய
தொகையை சம்பத்
வங்கி வழங்குகின்றது
கெரட் 24ற்கு 30,000/-
கெரட் 22ற்கு 27,000/-
வியாபாரச்சந்தையின் அதிகுறைந்த
மாதாந்த 1.17% வட்டிக்கு
சம்பத்
றண்திரிய
அடகுச் சேவை
அழையுங்கள்: 0112 30 30 50
සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
SampathBank


நொதேர்ன் சென்றல் ஹொஸ்பிற்றல் (பிறைவேற்) லிமிட்டெட்
புதிய கட்டிடத் தொகுதி அடிக்கல் நாட்டுவிழா
NORTHERN CENTRAL HOSPITAL
நொதேர்ன் சென்றல் ஹொஸ்பிற்றல் (பிறைவேற் ) லிமிட்டெட்
அடிக்கல் நாட்டுவிழா
இன்று ஞாயிற்றுக்கிழமை 22 ஆகஸ்ட் 2010 முற்பகல் 9.00 - 9.45 சுபவேளையில்
யாழ்ப்பாணம், பலாலி வீதி, 342 ஆம் இலக்கத்தில் நடைபெறும்.


S.P.N. Motors
உங்களது நன்மதிப்புப் பெற்ற
Safari Motor Cycle தற்போது விற்பனையில்
எஸ்.பி.என்
மோட்டர்ஸ்
171, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி தெற்கு அருள்மிகு வட பத்திர காளி அம்பாள் ஆலயத்தின் புனரா வர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ மகா கும்பா பிஷேக விழா நாளை திங்கட் கிழமை காலை 8.30. மணிமுதல் நடைபெ றவுள்ளது.

இந்நிகழ்வில் கும்பாபிஷேக மகத்துவம் எனும் தலைப்பில் யாழ். ஸ்ரான்லிக்கல்லூரி ஆசிரியர் மதுரகவி காரை எம்.பி. அருளா னந் தன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள் ளார். (6)

# திறப்பு விழாக்கள்

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேய பெருமான் ஆலய சிரஞ்சீவி அன்னதான மண்டபம், அறநெறிப் பாடசாலை ஆகியவற் றின் திறப்பு விழா நாளை திங்கட்கிழமை நண்பகல் 12.05 மணிக்கு நடைபெறவுள் ளது.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திரு முகன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல் கலைக்கழக வணிக பீட முகாமைத்துவ பீடா திபதி பேராசிரியர் எஸ்.தேவராஜா கலந்து கொள்ளவுள்ளதுடன் சிறப்பு விருந் தினர்களாக உடுவில் பிரதேச செயலாளர் திருமதி எஸ். மஞ்சுளாதேவி, வலி.தெற்கு பிரதேச சபை செயலாளர் செல்வி மு. சுலோச்சனா, இணு வில் மேற்கு கிராம சேவையாளர் எஸ். ரவீந் திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். ( 6)

# விசேட பொதுக்கூட்டம்

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொது க்கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9. 30 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் தலைவர் நா.மகேந்திரன் தலைமையில் நடை பெற வுள்ளது.

இவ்விசேட பொதுக்கூட்டத்திற்கு அங்கத் தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு கால்நடை வளர்ப்போர் கூட் டுறவுச் சங் கத்தின் தலைவர் நா. மகேந்திரன் அறிவித் துள்ளார். (6-2)

# கிராமிய மட்டத்தில் பயிற்சிக் கருத்தரங்கு

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனமா னது கிராமிய மட்டத்தில் மக்களிடம் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக பயிற்சிக் கருத்தரங்கை நடத்தி வருகின்றது.

மாதம் ஒரு பயிற்சி கருத்தரங்கு கிராமிய மட்டத்தில் நடத்தப்பட்டு வருகின்றது.

இதன் ஊடாக பயிற்சி பெற்றவர்கள் அவரவர் சங்கங்கள் மூலம் தொழில் முயற்சியை ஆரம்பிக்க கடன் பெறமுடியுமென நல் லொழுக நிறுவன இணைப்பாளர் ஆ.குல நாதன் தெரிவித்துள்ளார். (6-2-10)

# நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்ட நிகழ்வுகள்

(நல்லூர்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத் தின் அனுசரணையுடன் துர்க்கா மணிமண் டபத்தில் நடைபெற்று வரும் தெய்வீக இசை அரங்கில் எட்டாம் நாளான இன்று செல்வி தாரணி ரஞ்சன் (பாட்டு), செல்வி பாக்கிய லட்சுமி நடராஜா (வயலின்), வி. ரமணா (மிருதங்கம்), கே. நந்தகுமார் (கெஞ்சிரா) ஆகியோர் வழங்கும் திருமுறைக்கச்சேரி இடம்பெறவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவக்காலத்தில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஆத்மீக சிந்த னையுடன் நடைபெற்று வரும் சமய சொற் பொழிவு கலைநிகழ்வுகள் இன்றும் பி.ப. 3 மணி முதல் 6 மணிவரை நடைபெறவுள் ளது.

இதில் அருணகிரி நாதரும் திருப்புகழும் எனும் விடயம் பற்றி சிதம்பரநாதன் சசீவன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து நீர்வேலி ஸ்ரீகணேசா அறநெறிப்பாடசாலை, இணுவில் பரராஜ சேகரப்பிள்ளையார் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வு களும் இடம்பெறவுள்ளன. (6)

# வாரம் ஒரு தகவல்

## யோக நித்திரை

"ஐயா,யோகாசனம் பற்றி ஒரு சந்தேகம்..."

"கேளுங்கள்"

"யோக நித்திரை என்று சொல்கிறார்களே... அப்படி என்றால் என்ன?"

"நித்திரையில் இருவகை உண்டு.ஒன்று தமோநித்ரா.இது நம்மைப் போன்ற சாமானியர்களின் உறக்கம். இன் னொன்று யோகநித்ரா. இது தூக்கம்போன்ற அனுபவம். பரமாத்மாவுடன் இணைந்திருக்கும் நிலை"

"எனக்கு இது சாத்தியப்படுமா?"

"இது எல்லோராலும் இயலாது.மேலை நாடுகளில் கூட இதற்கான வகுப்புக்கள் எல்லாம் நடத்துகிறார்கள்.அங்கே இது ரொம்பப் பிரபலமாக இருக்கிறது என்றாலும் கூட அவர்கள் இந்தப் பெயரில் ஒரு 'ரிலாக்சேஷன்' சொல்லித் தருகிறார்கள் அவ்வளவு தான்"

"ஐயா, எனக்கு இன்னொரு சந்தேகம்.அதையும் கேட்கத் தாங்கள் அனுமதி தர வேண்டும்"

"கேளுங்கள்"

"நான் இந்த ஆச்சிரமத்துக்குள் நுழைந்த சமயத்தில் தாங்கள் கண்மூடிய நிலையில் ஆழ்ந்திருந்தீர்களே, அது கூட யோக நித்திரை தானா...?

"இல்லை.அது ஜால நித்திரை"

"அப்படி என்றால்...?"

"வழக்கமாக இந்த நேரத்தில் என் மனைவி என்முன்னால் வந்து நின்று கொண்டு வீட்டுச் செலவுக்கு பணம் கேட்டு நச்சரிப்பாள். அவளிடமிருந்து தப்பிப் பதற்காகத்தான் இப்படி"

"அது அவ்வளவு சுலபமில்லை என்பது என்னுடைய தாழ்மையான கருத்து"

"என்ன சொல்கிறீர்கள்?"

"தற்போது என்னை உள்ளே அனுப்பி, தங்களிடம் பேச் சுக் கொடுத்து, தங்களை விழித்த நிலையில் வைத்திருக்கச் சொன்னதே தங்கள் மனைவிதான். வாசற்புறத்தைப் பாருங் கள். அதோ அவர்களே வந்து கொண்டிருக்கிறார்கள்".

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# மீளாய்வுக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடை பெறவிருந்த யாழ். மாவட்டத்தில் நடை முறைப்படுத்தப்படுகின்ற அபிவிருத்தித் திட் ங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி மீளாய்வுக்கூட்டமானது எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதி வெள் ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறும் என யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார். (6-2)

# இராசி பலன்

22-08-2010
(ஆவணி06, ஞாயிற்றுக்கிழமை)
திரயோதசி முன்னிரவு7.09 மணிவரை
உத்தராடம் பிற்பகல் 5.19 மணிவரை
இராகுகாலம் 4.35-6.05 மணிவரை
சுபநேரம் 9.05-10.35 மணிவரை
பிரதோசவிரதம்,
முதலாம் ஆவணி ஞாயிறு.

**மேடம்** தொலைபேசி மூலம் பொன்னான செய்தி வந்து சேரும்,பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும், தடைப்பட்ட பணியை மீண்டும் தொடர்வீர்கள்,வரவு திருப்தி தரும்.

**இடபம்** பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், எதிர்ப்பாக இருந்தகூட்டாளிகள் இணக்கத்துடன் நடந்து கொள்வர்.

**மிதுனம்** சூரியவழிபாட்டால சுகம் காண வேண்டிய நாள், நட்பு பகையாகா மல் இருக்க கவனமாக நடந்து கொள்ள வேண்டிய நிலை,சிறுசிறு தடைகள் ஏற்படலாம்.

**கடகம்** எண்ணியது நிறைவேறும் நாள், திருமணப் பேச்சுக்கள் நல்ல முடிவு களைத் தரலாம், முன்னேற்றம் கருதி நல்ல பயணம் ஒன்றை மேற்கொள் வீர்கள்.

**சிங்கம்** நன்மைகள் நாடி வரும் நாள், அயல் நாட்டுத் தொடர்புகள் அனுகூலம் தரும், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், மறைமுகப் போட்டிகள் மாறும்.

**கன்னி** தொட்டகாரியம் வெற்றி பெறும் நாள், எதிர்பார்த்த தனவருவாய் இல் லம் தேடி வரலாம், பொதுநலத்தில் வழிபாடு அதிகரிக்கும், சொத்து தொடர் பான பகை சுமுகமாக மாறும்.

**துலாம்** யோகமான நாள், வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முன்வருவீர் கள், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும், உறவினர் மூலம் அனுகூலம் கிட்டும்.

**விருச்சிகம்** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பக்குவமாகப் பேசி காரியத்தை சாதித்துக் கொள்வீர்கள், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

**தனுசு** சுப செய்தி வந்து சேரும் நாள், வீட்டுக்குத் தேவையான பொருட்கள் வாங்கும் அமைப்புண்டு, புதிய தொழில் தொடங்கும் சிந்தனை உருவாகும்.

**மகரம்** திடீர் பயணம் உண்டு, ஆற்றல் மிக்கவர்களின் தொடர்பால் ஏற்றம் காண்பீர்கள், வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டிய நாள்.

**கும்பம்** மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும் நாள், உறவினர்கள் வருகையுண்டு, விருந்துபசாரத்தில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள், தனவருவாயுண்டு.

**மீனம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், பயணங்கள் விரும்பியபடி நடைபெறலாம்,பிரியமான வர்களின் சந்திப்பு இடம்பெறும்.

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 100 | 80 |
| தக்காளி | 70 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | -- | 60 |
| கோவா | 80 | 80 |
| கரட் | 90 | 90 |
| பூசணி | 40 | 40 |
| புடோல் | 30 | 30 |
| வாழைக்காய் | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 |
| பாகற்காய் | 80 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 50 |
| கரணைக்கிழங்கு | 50 | 60 |
| பயிற்றங்காய் | 160 | 80 |
| லீக்ஸ் | 160 | 100 |
| பீற்றூட் | 40 | 30 |
| கறிமிளகாய் | 80 | 90 |
| முருங்கைக்காய் | 70 | 100 |
| போஞ்சி | 150 | 100 |
| கத்தரி தம்புள்ள | 55 | 50 |
| கீரை - 1 பிடி | 15 | 25 |
| தேசிக்காய் | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 35 |

# தொண்டைமானாறு -பருத்தித்துறை வரை 'வாண் பகுதி' ஆழமாக்கும் பணி

(பருத்தித்துறை)

வடமராட்சி கடற்பகுதியில் தொண்டைமானாறு முதல் பருத்தித்துறை வரை மீனவர்கள் வள்ளங்களைக் கட்டும்" வாண் பகுதி" ஆழமாக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

பாரம்பரிய கைத்தொழில் அமைச்சரான கே.என் டக்ளஸ் தேவானந்தாவின் அனுசரணையுடன் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வேலையானது தற்போது தொண்டைமானாற்றிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு , பொலிகண்டி கடற்கரைப் பகுதிவரை பூர்த்தியாகி விட்டதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.மேலும் இப்பணியானது பருத்தித்துறை வரை நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (6-2-10)

# மாகாண மட்ட போட்டியில் முதலிடம் பெற்று சாதனை


குடத்தனை வடக்கைச் சேர்ந்த ரவி ரஜிகரன் மாகாண மட்ட தடகளப் போட்டிகளில் பல சாதனைகளைப் படைத்துள்ளார்.



இவர் பத்தாயிரம் மீற்றர் தூரத்தை 34 நிமிடம் 43 செக்கன் 7 விநாடிகளில் ஓடி முடித்து முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டதுடன் 5ஆயிரம் மீற்றர் தூரத்தை 16 நிமிடம் 32 செக்கன் 7 வினாடிகளில் ஓடிமுடித்து முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.அத்துடன் 1500 மீற்றர் ஓட்டத்தில் 3ஆம் இடத்தையும் பெற்றுள்ளார். மேலும் பல வருடங்களாக முறியடிக்கப்படாத சாதனையை சமன் செய்துள்ளதுடன் நவம்பர் மாத முற்பகுதியில் நடக்கவுள்ள தேசிய மட்ட போட்டியில் இவர் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# நிலவு சுருங்குகிறதா? விஞ்ஞானிகள் ஆய்வு

நிலவு சுருங்கி வருவதாக புதிய ஆய்வு முடிபுகள் குறிப்புணர்த்துகின்றன.



சைன்ஸ் என்ற விஞ்ஞான சஞ்சிகையானது நிலவின் மேற்பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ள பிளவுகள் மையப்படுத்தி புகைப்படம் வெளியிட்டுள்ளது.

நிலவின் உட்பகுதி குளிர்ந்து வருவதால் அதன் ஒட்டுமொத்த அளவும் சுருங்கி வருவதாக விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

பொருட்கள் குளிர்வடையும் போது அவை சுருங்கும் இயல்பை கொண்டிருக்கும் என்ற போதிலும் சந்திரனில் இந்த மாற்றம் எவ்வளவு காலமாக நீடிக்கின்றது. என்பதை உறுதிப்படுத்த முடியாதிருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஆனால் சாதாரண கண்களால் பார்க்க முடியாத நிலவில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்தை படம்பிடித்துள்ள கருவிகள் 14 புதிய பிளவுகளை கண்டறிந்துள்ளன.

கடந்து சென்ற பில்லியன் ஆண்டுகளில் நிலவும் 100 மீற்றர் அளவு சுருங்கியுள்ளதாக நம்பப்படுகின்றது.

நிலவின் இந்த மாற்றம் சமீபகாலமாக ஏற்பட்டு வருகிறது என்றும் இது ஒரு தொடர் நிகழ்வு என்று கூறும் விஞ்ஞானிகள் இது பூமியை எந்தவிதத்திலும் பாதிக்காது என்று தெரிவிக்கின்றனர். (6-2)

# பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் சிறைக் கைதி உயிரிழப்பு

தப்பிச் செல்ல முற்பட்ட சிறைக்கைதி ஒருவர் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. கண்டி, போகம்பரை சிறைச் சாலையில் இந்த சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

நேற்று அதிகாலை கைதிகள் இருவர் தப்பிச் செல்ல முற்பட்ட போது, சிறைச்சாலை பாதுகாப்புக் கடமையில் ஈடு பட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் குறித்த நபர் உயிரிழந்துள்ளதாகவும் சிறைச் சாலைகள் ஆணையாளர் வீ.ஆர் .டி.சில்வா தெரிவித்துள்ளார். அத்துடன்,தப்பிச் செல்ல முற்பட்ட மற்றைய கைதிகளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

உயிரிழந்த கைதியின் பெயர் விபரங்களோ அல்லது என்ன குற்றச்சாட்டிற்காக அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்பது குறித்த தகவல்களோ இதுவரையில் வெளியிடப்படவில்லை. (6-2)

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி

இலங்கை வங்கி ,
இரண்டாம் மேற்தரக்கிளை,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பான வாடிக்கையாளர்களே !

வாடிக்கையாளர் தமது வங்கிச் செயற்பாடுகளை மேற்கொள்வதை இலகுவாக்கும் பொருட்டும் அவர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டும் வங்கிக்கிளை சகல சனிக்கிழமைகளிலும் திறந்திருக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். வார நாட்களைப் போல பணக்கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள் அடகுசேவை போன்றவற்றை இவ் விடுமுறை நாட்களிலும் மேற்கொள்ளலாம்.

நன்றி

(C-910) முகாமையாளர்

## அழைப்பிதழ்

மக்கள் வங்கி
அச்சுவேலிக் கிளையின் புத்தூர் விரிவாக்கற் கிளை

திறப்பு விழா

வடக்கின் வசந்தம்
அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிராமங்கள் தோறும்
வங்கிச் சேவைகளை விரிவுபடுத்தும் வகையில்
மக்கள் வங்கியின் கிளை திறந்து வைத்தல்

இடம் : பருத்தித்துறை வீதி, ஆவரங்கால், புத்தூர்.
காலம் : 22.08.2010 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.00மணி

தலைவர் : திரு.இ.யோகராஜா அவர்கள்
(முகாமையாளர், மக்கள் வங்கி, அச்சுவேலி)

பிரதம விருந்தினர்: கௌரவ திரு. W.கருணாஜீவ அவர்கள்
(தலைவர், மக்கள் வங்கி)

சிறப்பு விருந்தினர்கள் : திரு.P.V. பத்திரண அவர்கள்
(பிரதம நிறைவேற்று அதிகாரியும் பொதுமுகாமையாளரும்)
திரு.D.P குமாரகே அவர்கள்
(பிரதம நிறைவேற்று அதிகாரி, பீப்பிள்ஸ் லீசிங் கம்பனி)
திரு.K. ஆரியரத்ன அவர்கள்
(பிரதிப் பொதுமுகாமையாளர்)
திரு.S. பத்மநாதன் அவர்கள்
(பிராந்திய முகாமையாளர், யாழ். பிராந்தியம்)

கௌரவ விருந்தினர்கள் : திரு C.A. மோகன்றாஸ் அவர்கள்
( பிரதேச செயலர் – வலி கிழக்குப் பிரதேச செயலகம்)
திரு T. நடராஜா அவர்கள்
( செயலாளர் – வலி கிழக்குப் பிரதேச சபை)

மக்கள் வங்கியின் உயரதிகாரிகள் பலரும் இந்நிகழ்விற் கலந்து சிறப்பிப்பர்.
"வங்கியோடு இணைந்து வளம்பல பெருக்கிட
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்"

நன்றி

முகாமையாளரும்
ஊழியர்களும்
மக்கள் வங்கி - அச்சுவேலி

(சி-905)

## அழைப்பிதழ்

மக்கள் வங்கி
வல்வெட்டித்துறை கிளையின் உடுப்பிட்டி சேவை நிலையம்

திறப்பு விழா

வடக்கின் வசந்தம்
அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிராமங்கள் தோறும்
வங்கிச் சேவைகளை விரிவுபடுத்தும் வகையில்
மக்கள் வங்கியின் கிளை திறந்து வைத்தல்

இடம் : வதிரி வீதி, உடுப்பிட்டி.
காலம் : 22.08.2010 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 11.00மணி

தலைவர் : திரு.பி.கிருஷ்ணானந்தன் அவர்கள்
(முகாமையாளர், மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)

பிரதம விருந்தினர்: கௌரவ திரு. W.கருணாஜீவ அவர்கள்
(தலைவர், மக்கள் வங்கி.)

சிறப்பு விருந்தினர்கள் : திரு.P.V. பத்திரண அவர்கள்
(பிரதம நிறைவேற்று அதிகாரியும் பொதுமுகாமையாளரும்)
திரு.D.P குமாரகே அவர்கள்
(பிரதம நிறைவேற்று அதிகாரி, பீப்பிள்ஸ் லீசிங் கம்பனி)
திரு.K. ஆரியரத்ன அவர்கள்
(பிரதிப் பொதுமுகாமையாளர்)
திரு.S. பத்மநாதன் அவர்கள்
(பிராந்திய முகாமையாளர், யாழ். பிராந்தியம்)

கௌரவ விருந்தினர்கள் : திரு S. சத்தியசீலன் அவர்கள்
( பிரதேச செயலர் – கரவெட்டி)
திரு D.S.I அத்துல அமரசிங்க அவர்கள்
( பொலிஸ் பொறுப்பதிகாரி, வல்வெட்டித்துறை)

மக்கள் வங்கியின் உயரதிகாரிகள் பலரும் இந்நிகழ்விற் கலந்து சிறப்பிப்பர்.

"வங்கியோடு இணைந்து வளம்பல பெருக்கிட
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்"

நன்றி

முகாமையாளரும்
ஊழியர்களும்
மக்கள் வங்கி - வல்வெட்டித்துறை

# தமிழகம் வந்து கதறிய ஈழத்தமிழ் மீனவர்கள்


# உரிமைக்கு உதவவில்லை; உயிருக்கு உதவுங்கள்

"உரிமைகேட்டுப் போராடிய போது தான் உதவவில்லை. உயிர் வாழ்வதற் காகவாவது உதவுங்கள்" என்ற வேண்டு கோளுடன் தமிழக மண்ணில் கால் பதித்திருக்கிறார்கள், நம் தொப்புள் கொடி உறவுகளான இலங்கைத் தமிழ் மீனவர்கள்!

ஈழத் தமிழ்ப் போராட்டத்தில், உயிர்களையும் உடைமைகளையும் மட்டுமன்றி, தங்கள் குலத் தொழில் களையும் இழந்து நிற்கின்றனர் இலங் கைத் தமிழ் மீனவர்கள். அதில் ஒன்று தான் மீன்பிடித் தொழில்!

கடல் தொழிலையே நம்பி இருந்த இந்த வடபகுதித் தமிழர்களை இலங்கை அரசு பாதுகாப்பு என்ற பெயரில், கடலில் படகு ஓட்டத் தடை விதித்தது. இதனால், 1980களில் மீன்பிடித் தொழிலில் நவீனத்தைப் புகுத்திய இலங்கைத் தமிழ் மீனவர்கள், முற்றி லுமாகப் பாதிக்கப்பட்டு மீன் பிடித் தொழிலில் கற்றுக்குட்டிகளாகிவிட்ட னர். போர்முடிவுக்கு வந்த நிலை யில், தங்கள் குலத்தொழில்களில் மீண்டும் ஈடுபட இலங்கை மீனவர்களுக்குப் பல்வேறு கட்டுப்பாடுகளுடன் அனு மதி தந்திருக்கிறது ராஜபக்ஷ அரசு.



விவேகானந்தன்



என்.ஜே.போஸ்

மீன்பிடிக்க அனுமதி கிடைத் தாலும், தமிழக மீனவர்களால் தங்களுக்கு இடையூறுகள் ஏற்படாமல் இருக்கும் வழி வகை குறித்து ஆலோசிக்க இலங்கைத் தமிழ் மீனவர் குழு ஒன்று, கடந்த 17 ஆம் திகதி இராமேஸ் வரம் வந்தது. இந்தக் கலந்தாய் வில் பங்கேற்க யாழ்ப்பாணம், வடமராட்சி, வன்னி, மன்னார் பகுதிகளைச் சேர்ந்த மீனவ அமைப் புக்களின் நிர்வாகிகள், பேசாலை பங்குத் தந்தை புஷ்பராஜ், இலங்கை மீன்துறை இணை இயக்குநர் லால் டி சில்வா மற்றும் தொண்டு நிறுவன நிர்வாகிகள் உள்ளிட்ட 21 பேர் வந் தனர்.

இராமேஸ்வரம் தீவு மீனவர்களால் வரவேற்கப்பட்ட இவர்கள், மறுநாள் காலை பாம்பன், இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகங்களுக்குச் சென்று, அங்கு இருந்த தமிழக மீனவர் களின் படகுகளைப் பார்த்து வியந்த துடன், மீன்பிடி முறைகளையும் கேட் டனர். அன்று மாலை தங்கச்சிமடத்தில் நடந்த கலந்தாய்வுக் கூட்டத்துக்கு முன், இதற்கான முயற்சிகளை மேற் கொண்ட 'நிரபராதி மீனவர்களின் விடுதலைக்கான கூட்டமைப்பு' நிர் வாகிகளான விவேகானந்தன், யு. அரு ளானந்தம் ஆகியோரிடம் பேசி னோம்.

"83 ஆம் ஆண்டில் இருந்தே இரு நாட்டு மீனவர்களுக்கும் இடையே மீன்பிடிப்பதில் பிரச்சினைகள் உள்ளன. அங்கே போர்முடிவுக்கு வந்த நிலை யில், இனி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் என நம்புகிறோம். மத்திய அரசு, தமிழக அரசு மற்றும் இலங்கை அரசு ஆகியவை இந்தப் பிரச்சி னையில் இருநாட்டு மீனவர் களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை எட்ட வேண்டும். மீனவர்கள் ஏற்றுக் கொள்ளாத திட்டத்தால் ஏதும் செய்ய முடியாது. தற்போது, மீன்பிடித் தொழி லில் ஈடுபடும் இலங்கை மீனவர்கள் நம்மால் பாதிக்கப்படாமல் இருக்க வும் நமது மீனவர்களும் பாதிக் கப்படாத வகையிலும் இருக்க இந்தப் பேச்சுவார்த்தை வழிவகுக்கும்!" என்ற னர்.


மீனவர்கள் சந்திப்பில்...


இலங்கை மீனவர்கள்...

## மீனுக்கும் மீனவனுக்கும் கடலில் எல்லை கிடையாது

கலந்தாய்வுக்கூட்டத்தை தொட க்கி வைத்துப் பேசிய இலங்கை மீனவர் குழுத்தலைவர் சூரியகுமரன், " பரஸ்பரமாக மீன்பிடித்த நமக்குள் கால மாற்றமும், தொழில் மாற்றமும் பிரச்சினைகளை ஏற்படுத்திவிட்டன.!

உங்கள் பகுதியில் இருக்கும் ஆயிரம் படகுகளைப் பார்த்து எங்க ளுக்கு வருத்தமும் அதிர்ச்சியும் ஏற் பட்டது. இப்போதே இங்கு மீன் வளம் நீர்த்துவிட்டது. இனி எதிர்கால சந்ததிகளின் நிலை கவலை அளிப் பதாக உள்ளது.




இதுபோன்ற நிலையில் நீங்கள் எங்கள் பிரதேசத்துக்குள் மீன்பிடிக்க வருகிறீர்கள். நீங்கள் வரும் றோலர் கள் எங்கள் மக்களின் சிறுவலை களை நாசப்படுத்துகிறது. எங்கள் கரையில் இருந்து பார்த்தால், உங்கள் றோலர்களின் வெளிச்சம் தெரியும் அளவுக்கு எல்லைதாண்டி வருகிறீர் கள். மீன் வளத்தை அழிக்கும் தங்கூசி (நைலோன்) வலைகளைப் பயன்படுத் தித் தொழில் செய்கிறீர்கள். இதனால் எங்கள் பிரதேசமும் மீன் இல்லாப் பிரதேசமாக மாறிவிடும் என்ற அச்சம் ஏற் படுகிறது. ஏற்கனவே, எல்லாம் இழந்து தவித்து எஞ்சி இருக்கும் மக்களின் வாழ்க்கைக்கு ஊறு ஏற் படுத்த வேண்டாம் என முறையிடவே வந்துள்ளோம். எங்கள் கஷ்டத்தைப் புரிந்துகொள்ளுங்கள். எல்லைதாண்டி வந்தாலும் எங்கள் கட்டுப்பாட்டை மீறாதீர்கள்!" என தாங்கள் வந்த நோக் கத்தை விவரித்தார்.


இதற்குப் பதில் அளித்துப் பேசிய இராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலை வர்கள் என்.ஜே.போஸ், அந்தோனி ஆகியோர், "குறைந்த கடல் பரப்பைக் கொண்ட நாங்கள் எல்லை தாண்டு வது தவிர்க்க முடியாதது. மீனுக்கும் மீனவனுக்கும் எல்லைகள் கிடையாது. எங்களை நவீன மீன்பிடிப்புக்குத் தள்ளியது எங்கள் அரசுதான். அதன் படி ஆண்டுக்கு 70 நாட்கள் மட்டுமே நாங்கள் தொழில் செய்கிறோம். இதை நம்பி ஆயிரக் கணக்கான குடும்பங்கள் ஆண்டு முழுவதும் உயிர் வாழ்கின் றன.

அதனால் தான் 50 ஆயிரம் ரூபாய் முதலீட்டில் தொடங்கிய இந்தத் தொழில் இப்போது 50 இலட்சம் வரை உயர்ந்துவிட்டது. இந்த நிலை யில், உடனடியாக எங்கள் தொழி லை மாற்றச் சொல்லி முறையிடுவது ஏற்கக் கூடியதாக இல்லை.

ஆனாலும், உங்கள் கஷ்டங்க ளையும் நாங்கள் புரிந்துகொண்டு, காலப்போக்கில் எங்கள் மீன்பிடி முறை களை மாற்றிக் கொள்வோம் " என உறுதியளித்தனர்.

இலங்கையில் இருந்து வருகை தந்துள்ள மீனவர்களிடம் பிரபாகரன் தொடர்பான மர்மம் குறித்தும் கேட்டோம். "இறுதிப்போர் நடந்த போது தப்பி ஓடிய பிரபாகரனை இராணுவம் சுட்டுக்கொன்றது என்றும், நந்திக்கடல் பகுதியில் நடந்த தாக்குதலில் அவர் கொல்லப்பட்டார் எனவும் இராணுவத் தளபதியும், ராஜபக்ஷவும் ஆளா ளுக்கு ஒரு தகவல் வெளியிட்டாங்க. அத்துடன் பிரபாகரனைக் கொன்னுட் டதா ஏதோ ஒரு படத்தையும் காட்டினாங்க. அதை எங்கட மக்கள் நம்ப வில்லை. அது பிரபாகர னோட உடம்பு அல்ல. அவரை மாதிரி யான ஒரு ஆளோ, பொம் மையோ தான் அது.


சூரியகுமரன்


அருளானந்தம்

ஆனாலும், பிரபாகரனைக் கொன்னுட் டோம்னு திரும் பத் திரும்ப ராஜ பக்ஷ கதைக் கிறார்.

அப்படியே பிரபாகரன் கொல்லப்பட்டிருந்தா, அவ ரோட உடலை ஏன் சர்வதேச மீடியாக்களுக் கோ, சிங்கள அரசுக்குத் துணைபோன நாட்டுத் தலைவர்களுக்கோ காட்டா மல் மறைத்ததின் நோக்கம் என்ன? இது எல்லாமே அரசாங்கத்தின் நாடகம் தான்.

**ஜூனியர் விகடன்**

பிரபாகரன் விடயத்தில் எதையோ இந்த அரசாங்கம் மறைக்குது. அந்த உண்மை வெளிவர சில ஆண்டுகள் ஆகலாம். ஆனா, உண்மை செத்து டாது!" என நம்பிக்கையுடன் முடிக்கி றார்கள்!

**இரா.மோகன்**

# பளையை அண்டிய பகுதிகளில் காணிகளின் விலை உயர்வு

(பொற்பதி)

பளை நகரப்பகுதியிலும் அதனை அண்டிய ஏ-9 பாதை இருமருங்கிலுள்ள காணிகளின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது.

யுத்தம் இடம்பெறுவதற்கு முன்பு இந்தப் பகுதிகளில் ஒரு பரப்புக் காணியின் விலை மூன்று இலட்சமாக விற்கப்பட்டது.

தற்போது இந்தக் காணிகளின் விலை நான்கு இலட்சம் தொடக்கம் நான்கரை இலட்சம் வரை விலை போகிறது.

இவ்விலை அதிகரிப்பிற்கு இவ்விடத்திற்கு வருகின்ற பெரிய வர்த்தகர்களும் வர்த்தக நிறுவனங்களும் காணிகளை பெரும் தொகைப் பணம் கொடுத்து வாங்குவதே காரணம் எனக்குறிப்பிடுகிறது.

இதனால் இப் பகுதியில் உள்ள அரச காணிகளை மக்கள் சட்டவிரோதமாக அபகரித்து தமக்கான எல்லைகள் அமைத்து வாழ்விடங்கள் அமைத்து வருகின்றனர்.

எனவே, எதிர்காலத்தில் அரச திணைக்களங்களுக்கான அலுவலகங்கள் அமைப்பதற்கு அரச காணிகள் இல்லாமல் போகுமென புத்திஜீவிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (6-2)

# புத்தூர் கிழக்கு வரிக்கொம்பரைக்குளம் 25 ஆண்டுகளின் பின் புனரமைப்பு

(புத்தூர்)

புத்தூர் கிழக்குப் பகுதியிலுள்ள வரிக்கொம்பரைக்குளமானது 25 ஆண்டுகளுக்குப் பின் தற்போது புனரமைக் கப்பட்டு வருகின்றது.

ஜப்பான் நாட்டு ஜெசிக்கா நிறுவனத்தின் நிதியுதவியினால், வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், விவசாய அபிவிருத்தி கமநல சேவை நிலையத்தின் அனுசரணையுடன் இப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறன.

இக்குளமானது சுமார் 25 வருட காலங்களுக்கு மேலாக திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாது, கவனிப்பாரற்ற நிலையில் இருந்தது.

தற்போது நடைபெற்று வரும் புனரமைப்பினால் நூற்றுக்கணக்கான விவசாயிகள் பயனடையவுள்ளனர்.

இக் குளமானது நான்கு துருசுக் கிணறுகளைக் கொண்டதும் பெரிய நிலப்பரப்பை உள்ளடக்கியதுமாகக் காணப்படுகிறது.

மாரி காலங்களில் இக் குளத்தில் சேமித்து வைக்கப்படும் நீரினை கொண்டு நூற்றுக்கணக்கான ஏக்கரில் மேட்டு நிலப் பயிர்ச் செய்கையை விவசாயிகள் மேற்கொள்ளலாம் எனத் தெரிய வருகிறது.

மேலும் தினமும் 75 வீதமான வேலையாட்கள் இக் குள புனர்நிர்மாண வேலையில் ஈடுபட்டு வருவதாக சம்மேளனத்தின் தலைவர் செ. பத்மநாதன் தெரிவித்துள்ளார். (6-2)

# உயர்தரப் பரீட்சை எழுதவில்லையாயினும் மேர்வின் சில்வா கலாநிதியாவார்

## பௌத்த தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா, கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தவில்லை எனினும் அவர் கலாநிதி பட்டத்தை பெற்றுக் கொண்டார் என பௌத்த பிக்கு ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேர்வின் சில்வாவை மீண்டும் பிரதிய மைச்சராக ஏற்றுக்கொள்ளவேண்டும் எனக் கோரி, நேற்று முன்தினம் பௌத்த பிக்குகளின் சம்மேளனக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

அங்கு உரையாற்றிய பௌத்த பிக்குவான தேவாலகம தம்மசேன தேரர் தெரிவிக்கையில்,

மேர்வின் சில்வா, கலாநிதி என்றாலும் அவர் துட்டகைமுனுவைப் போன்றவர் என தெரிவித்துள்ளார்.

மேர்வின் சில்வா எஸ்.எஸ்.சி.பரீட்சை எழுதிக்கொண்டிருந்த போது அதனை விட்டுவிட்டு விண்வெளிக்கு சென்ற முதல் ரஷ்யர் யூரி ககாரின் வந்த ஹெலி கொப்டரை பார்க்கச் சென்றுவிட்டார்.அதன் காரணமாக பரீட்சையை எழுதாமல் சிறப்பான சித்தியை பெறத்தவறி விட்டார் என்றும் தேரர் மேலும் குறிப்பிட்டார். (6-2)

# ஜப்பான் கனகாவா சர்வதேச அமைப்பு நடாத்தும் சித்திரப் போட்டிகள்

(அல்வாய்)

ஜப்பான் கனகாவா சர்வதேச அமைப்பினால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடாத்தப்படும் சித்திரப்போட்டிகள் தற்போது 16 ஆவது தடவையாக நடைபெறவுள்ளது.


இப்போட்டி தொடர்பாக சகல வலயங்களிலும் சித்திரம் தொடர்பாக ஆற்றல் மற்றும் ஆர்வம் காண்பிக்கும் சிறார்களை அறிவுறுத்தி போட்டியில் பங்கேற்கச் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் இப்போட்டிக்கான சித்திரங்கள் யாவும் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

இப்போட்டிக்கான சித்திரங்கள் தங்களுக்கு விரும்பிய எந்தவொரு தொனிப் பொருளிலும் வரையலாம் என தெரிவிக்கப் பட்டுள்ளதுடன் 4 தொடக்கம் 15 வயதுவரை உடையவர்கள் பங்குபற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சித்திரங்கள் யாவும் 54X38 cm அளவுதாளில் வரையப்பட வேண் டும்.

மேலும் போட்டியாளர்கள் தாங்கள் வரையும் சித்திரத்திற்கு Title of piece எனப் பெயரிடப்பட்டு சித்திரம் தொடர்பாக 3 வாக்கியங்களை சுருக்கமாகக் குறிப்பிடுதல் வேண்டும். அத்துடன் பிறிதொரு காகிதத்தில் விண்ணப்பப் படிவத்தை தெளிவாக ஆங்கில பெரிய எழுத்தில் பூர்த்தி செய்து சித்திரத்தின் பின்பக்கம் ஒட்டி செயலாளர் நாயகம் , இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழுசபை , பத்திரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஏ. பிரசன்ன சந்தித் தெரிவித்துள்ளார். (6-19)

# நல்லூரான் திருவடிக்கு இன்று 8ஆம் திருவிழா

08ம் திருவிழா



## கருவான நல்லூரின் தருவே !

உருவாகி , குருவாகி உளத்திருக்கும்
உமை மைந்தா, யாழின் .
கருவான நல்லூரின் தருவே
கான மயில் வாகனத்தில் காட்சி தரும்
பெருமானே பேரழகின் மாட்சியுடன்
பீடு நிறைப் பொலிவுளனே, எம்
அருள்நிதியே அகங்காரம் களைந்து
ஆறுதல் தருவாய் அருட்குமரா!

அரியாலையூர் வே. ஐ.வரதராஜன்

## நாளும் எமைக் காத்திடய்யா

அகங்காரங்களை
அழித்திடும் அழகுக் கந்தனே...!
அலங்காரமாய் - நீ
வீதியுலா வருகையிலே
நல்லூரே நயக்குதய்யா
நம்முள்ளம் களிக்குதய்யா
நலம் ஈந்து நம்மை
நாளும் காத்திடய்யா
நிலமிழந்த சொந்தங்கள்
நிரந்தரமாய் நித்தமும்
நம் மண்ணில் வாழ்ந்திடவே
நிந்திக் கின்றோம் நினையே
நின் கழல் பற்றியே...

க.நாகேஸ்வரா, சண்டிலிப்பாய்

## மண்ணார் நல்லூரில் மகிழ்ந்துறை மன்னவனே

விண்ணாளும் வேலவனே விரிதோகை விரும்பினேனே
பண்ணார் இன்மொழிப் பாவையர் பரிபாலகனே
அண்ணா ஆரமுதே ஆர்துணை நீயலதேல்
மண்ணார் நல்லூரில் மகிழ்ந்துறை மன்னவனே

சிவ.சண்முகவடிவேல் , ஏழாலை

## தரணி போற்ற வாழ்ந்திடடா


சிந்தையில் நிறுத்திவிடு நல்லூரானை
நொந்த உன் உள்ளம் சுகமாகும்
வந்த வினை விலகிடுமே
வையகமும் தழைத்திடுமே - அவன்
தந்த அருள் போதுமென்று
தரணி போற்ற வாழ்ந்திடடா

மயிலையூரான்

நல்லைப் பதியில் வீற்றிருக்கும் வேலவா
நல்லருள் புரிவாய் நீயே!
வெங்கடேஸ்வரா
ரான்ஸ் போட் சேவிஸ்
இல.125,127 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P- 021 222 8306


# யாழ்.நகரில் சர்வதேச தரத்தில்

# Northern Central Hospital




யாழ்.நகரில் நிர்மாணிக்கப்படவுள்ள 'NCH' (Northern Central Hospital) மருத்துவமனை சர்வதேச தரம் வாய்ந்ததாக அமையுமென அம் மருத்துவமனையின் ஆலோசகராப் பணிபுரியும் டாக்டர் கீர்த்திசிறி எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைதி திரும்பியுள்ள நிலையில் அங்கு பரவலாக அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தென்னிலங்கையை தளமாகக் கொண்டியங்கும் நிதி நிறுவனங்களும் கம்பனிகளும் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களும் யாழ்ப்பாணத்தினையே இலக்காகக் கொண்டுள்ளனர்.

இதன் பயனாக யாழ்ப்பாணத்தில் புதிய வங்கிகள் பலவும் திறக்கப்பட்டுள்ள அதே வேளை பல புதிய கம்பனிகளும் தமது கிளைகளை அங்கு ஆரம்பித்துள்ளன.

ஆனாலும், மருத்துவத்துறை அபிவிருத்தியில் யாழ்ப்பாணத்தில் சடுதியான ஒரு முன்னேற்றமும் காணப்படவில்லை.

இந்நிலையிலேயே யாழ். குடாநாட்டு மக்களுக்கு சர்வதேச தரத்திலான சிகிச்சைகளை வழங்கும் நோக்கில் 'NCH' மருத்துவமனை நிர்மாணிக்கப்பட வுள்ளதாக டாக்டர் கீர்த்திசிறி எதிரிசிங்க தெரிவித்தார். இது முதலீட்டுச் சபையின் (BOI) முழு அங்கீ காரம் பெற்ற பாரிய திட்டமாகும்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய சிகிச்சை முறைகளுடனான சர்வதேச தரத்திலேயே இம் மருத்துவமனை நிர்மாணிக்கப்படவுள்ளது. 100 படுக்கை வசதிகளும் நவீன மருத்துவமனை சாதனங்களும் இங்கு அமைக்கப்படும். 30 வருட காலமாக வட மாகாண மக்களின் நன்மதிப்பைப் பெற்று இயங்கி வரும் சென்ரல் நேர்சிங் ஹோமின் 2 ஆம் கட்ட விசாலமான விஸ்தரிப்புத் திட்டமாக இது அமைகின்றது. குடாநாட்டு மக்கள் தமது மருத்துவ தேவைகளை அங்கேயே நிறைவேற்றிக் கொள்வதற்குரிய வாய்ப்புகள் இதனால் ஏற்பட்டுள்ளன.

மோதல்கள் முடிவடைந்து நாட்டில் அமைதியான சூழ்நிலை உருவாகியுள்ள நிலையில் தற்போது புதிய வாய்ப்புகள் உருவாகியுள்ளன. இதன்மூலம் கிடைத்துள்ள அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மக்களுக்கு சிறந்த சேவையாற்ற முடியும்.

யாழ்.குடாநாட்டின் பொருளாதார அபிவிருத்தி மீது அரசு கவனம் செலுத்தும் அதே வேளை வெளிநாடுகளும் யாழ்ப்பாணத்தில் முதலீடு செய்வதற்கு விரும்புகின்றன.

அரச சார்பற்ற நிறுவனங்கள் பல இங்கு பல திட்டங்களை உருவாக்கி அமுல்படுத்தி வருகின்றன. இந் நிலையில் யாழ். நகரில் உருவாக்கப்படும் இப் புதிய மருத்துவமனையானது நோயாளர்களுக்கு விசேட பராமரிப்பைக் கொண்டிருக்கும் அதேவேளை சர்வதேச தரப் பயிற்சிகளை பெற்ற தாதியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படுவர்.

அத்துடன் தாதியர் உள்ளிட்ட பதவி வெற்றிடங்களுக்கு ஆள்சேர்ப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதேவேளை தாதிகள் மருத்துவமனை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரேயே பயிற்சிகளைப் பெறவேண்டிய கட்டாயம் உள்ளதால் தாதியாக இணைந்து கொள்ள விரும்புவோர் முன்கூட்டியே தமது விண்ணப்பங்களை விண்ணப்பிக்க வேண்டும்.

இப்புதிய மருத்துவமனையில் வெளிநோயாளர் பிரிவு, சனலிங் பிரிவு, ஆய்வு கூடசேவைகள், ஸ்கேனர் சேவைகள் மற்றும் இதயப் பரிசோதனைகள் ஆகியவை சேவைகளாக இடம்பெறும். அத்துடன் இது வரை குடாநாட்டில் இல்லாத மருத்துவ சேவைகளை இம் மருத்துவமனை வழங்கவுள்ளது.

இந்த நேர்சிங் ஹோமானது CT ஸ்கான் பிரிவு. நரம்பியல் மற்றும் நரம்பியல் சத்திர சிகிச்சைப்பிரிவு (Special Neurology and Neurosurgical Unit), புனருத்தாரணப் பிரிவு (Rehabilitation Unit), கண் சிகிச்சைப் பிரிவு (Opthalmology Unit) காது, மூக்கு மற்றும் தொண்டைப் பிரிவு (ENT Unit), பல்வைத்தியப் பிரிவு (Dental Unit),பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சைப் பிரிவு (Plastic Surgery), சிறுநீரக சிகிச்சைப் பிரிவு (Nephrology), மகப்பேற்று வைத்தியப் பிரிவு (Maternity Home) மற்றும் முதியோருக்கான தனி வைத்தியப் பிரிவு (Nursing Home for elders) ஆகிய வற்றைக் கொண்டதாக அமையவுள்ளது.

அதேவேளை மருத்துவ சேவைக்கு அப்பால் பகல் நேர பராமரிப்பு நிலையமும் இங்கு நடத்தப்படவுள்ளது. இதற்காக பல அறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

**யோ.நிமல்ராஜ்**

அம்புலன்ஸ் சேவையும் வீட்டிலிருந்து நோயாளர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப் பயன்படுத்தப்படும். அத்துடன் நோயாளர்கள் மீது விசேட கவனம் செலுத்தப்பட்டு அவர்கள் பராமரிக்கப்படுவர்.

இந்த வைத்தியசாலையின் ஆரம்ப கட்டப் பணிகள் இம்மாதம் முதல் ஆரம்பிக்கப் படுகின்றன. ஒருவருட காலத்தில் இம் மருத்துவமனை கட்டி முடிக்கப்பட்டு சேவைகள் ஆரம்பிக்கப்படுமெனத் தெரிவித்தார்.

## அவுஸ்திரேலிய தேர்தலில் முக்கியத்துவம் பெற்றுள்ள இலங்கை அகதிகள் விவகாரம்

(கொழும்பு)

அவுஸ்திரேலிய பொதுத் தேர்தலில் குடிவரவு விடயமும் படகுகளில் தஞ்சம் கோரி வருகின்ற இலங்கை உட்பட்ட அகதிகளின் எண்ணிக்கையும் கடந்த இரண்டு ஆண்டுகளில் அதிகரித்துள்ள விடயமும் மிக முக்கிய விவகாரமாக அமைந்துள்ளதென்று கூறப்படுகிறது.

ஆப்கானிஸ்தானிலிருந்தும் இலங்கையிலிருந்தும் வரும் அகதிகளே அவுஸ்திரேலியாவுக்கு படகுகள் மூலமாக அதிகளவில் செல்கின்றனர்.

கடந்த ஒரு வருடத்தில் மட்டும் இவ்வாறாக அகதிகளாக சந்தேகிக்கப்படுவோரை ஏற்றிவந்த 80 கப்பல்கள் அவுஸ்திரேலியக் கடற்பரப்பில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

2008 இல் நூறு பேருக்கும் குறைவாக இருந்த கடல்வழியாக வருகின்ற ஆட்களின் எண்ணிக்கை 2009 இல் கிட்டத்தட்ட மூவாயிரமாகவும் இந்த ஆண்டு கிட்டத்தட்ட நான்காயிரமாகவும் அதிகரித்துள்ளது.

ஆளும் தொழிற்கட்சிகளின் கொள்கைகள் தோல்வியடைந்துள்ளன என்பதையே இது காட்டுகிறது என்பது எதிர்க்கட்சியான லிபரல் கட்சித் தலைவரின் வாதமாகும்.

ஆனால் எதிர்க்கட்சிகள் பெரிதுபடுத்தும் அளவுக்கு அகதிகள் பிரச்சினை நிஜத்தில் பெரிய பிரச்சினையாக இல்லை என்று தொழிற் கட்சி வேட்பாளரும் தற்போதைய பிரதமருமான ஜூலியா கில்லார்ட் கூறுகிறார்.

அவுஸ்திரேலிய மக்கள் நினைக்கும் அளவுக்கு அந்நாட்டு அகதிகள் வரவில்லை என அவுஸ்திரேலிய அகதிகள் சபை என்ற அமைப்பின் தலைவரான போல் பவர் கூறுகிறார்.

உலகில் வேறு வேறு இடங்களோடு ஒப்பிடுகையில், அவுஸ்திரேலியாவுக்குள் நுழைகின்ற தஞ்சம் கோருபவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு என்பதுடன் உலகில் தஞ்சம் கோருபவர்கள் அதிகம் நாடக்கூடிய இடங்களின் வரிசையில் அவுஸ்திரேலியா முப்பத்துமூன்றாவது இடத்தில்தான் இருப்பதாகக் கூறப்படுகிறது. (6-2)

## பிரபா கணேசன் அரசாங்கத்தில் இணைந்தமை நியாயமானது

### திகாம்பரம் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரபா கணேசன் அரசாங்கத்தில் இணைந்தது நியாயமானது எனவும் அது தமிழ் மக்களுக்காக எடுக்கப்பட்ட தீர்மானம் எனவும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் இணையாமல் தமிழ் மக்களுக்கு சேவையாற்ற முடியாது.ஐக்கிய தேசியக் கட்சி தமக்கும் ஜனநாயக மக்கள் முன்னணிக்கும் வழங்கிய உறுதிமொழிகளை மீறியதாகக் குறிப்பிட்ட அவர், தான் அரசாங்கத்தில் இணைந்தது தமிழ் மக்களுக்கு சேவையாற்றவே எனவும் எதிர்க்கட்சியில் இருந்தால் தமிழ் மக்களுக்கு குறைந்தளவிலான சேவையையே பெற்றுக் கொடுக்கமுடியும் எனவும் கூறியுள்ளார்.

அதேவேளை, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், பிரபா கணேசனை விமர்சிப்பது நியாயமற்றது எனத் தெரிவித்த அவர் ஐக்கிய தேசியக் கட்சி மனோ கணேசனை வெளியில் தூக்கி எறிந்தாலும் அவர் அந்தக் கட்சியை விட்டு வெளியேறமாட்டார் என குறிப்பிட்டுள்ளார். (6-2)

## ஈரானிடமிருந்து 2 மில்லியன் தொன் மசகு எண்ணெய் கொள்வனவு செய்யப்படவுள்ளது

(கொழும்பு)

ஒரு வருட காலத்திற்கு ஈரானிடம் இருந்து 2 மில்லியன் மெற்றிக் தொன் இலகுரக மசகு எண்ணெயைக் கொள்வனவு செய்வதற்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் 2011 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வரையில் ஈரானிடம் இருந்து மசகு எண்ணெயை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஈரானின் தேசிய எண்ணெய் நிறுவனத்திடம் இருந்து 2 மில்லியன் மெற்றிக் தொன் எண்ணெய் கொள்வனவு செய்யப் படவுள்ளது.

இந்த எண்ணெயை வட்டிகள் அற்ற கடனுதவியாக ஈரான் வழங்கும்.

மேலும் சவுதி அரேபியாவிடம் இருந்தும் 135,000 மெற்றிக்தொன் எண்ணெயை கொள்வனவு செய்ய நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

30 நாட்கள் வட்டிகள் அற்ற கடனுதவியை முன்னர் வழங்கிவந்த ஈரான் 2007 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷவின் ஈரானிய பயணத்தை தொடர்ந்து அதனை 120 நாட்களாக உயர்த்தியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(6-2)

## உதவிக் கல்விப் பணிப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார்

(யாழ்ப்பாணம்)

ஹொரணை கல்வி வலயத்தில் தமிழ் பிரிவில் உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமை புரிந்து வந்த எஸ்.அற்புதராஜா யாழ்.கல்வி வலயத்திற்கு அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளராக இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.கல்வி வலயத்தில் கடமை புரிந்த எஸ்.கிருஷ்ணவேணி தனது கடமையிலிருந்து ஓய்வு பெறுவதையடுத்தே இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (6-2)

# பங்குச் சந்தையில் முதலிடுவதற்கான அதிகாரம் ஊ.சே.நிதியத்துக்கு உண்டு

## மத்திய வங்கி தெரிவிப்பு

ஊழியர் சேம நிதியச் சட்டங்களின்படி,நாணயச் சபையானது, பொருத்தமானது எனவும்,அத்தகைய பிணையங்களை விற்பனை செய்யலாமெனவும் கருதுகின்ற அத்தகைய பிணையங்களில் முதலீடு செய்யலாம். இதற்கமைய ஊழியர் சேமலாப நிதியம்,வங்கித் தொழில், நிதியில் துறைகள் உள்ளிட்ட பங்குச் சந்தைகளில் முதலீடு செய்வதற்கான அதிகாரங்களை தெளிவான முறையில் கொண்டிருக்கிறது என இலங்கை மத்திய வங்கியின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஊ.சே. நிதிய முதலீடுகளில் 95 சதவீதத்திற்கும் கூடுதலானவை அரச பத்திரங்களில் காணப்படுவதுடன் இத்தகைய போக்கு அடுத்துவரும் சில ஆண்டுகளுக்கு தொடரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மைக் காலத்திலிருந்து, இலங்கையின் பங்குப் பரிவர்த்தனை உலகின் மிகச் சிறந்த செயலாற்றத்தினைக் கொண்ட சந்தைகளில் ஒன்றாகப் பாராட்டப்பட்டதுடன், பாரிய பங்கிலாபத்தையும் உருவாக்கியிருக்கிறது. இத்தகைய பின்னணியில்,ஊ.சே.நிதியத்தினால் முதலீடு செய்யப்பட்டுள்ள எமது நாட்டு மக்களின் சேமிப்புகளும் இத்தகைய பங்கிலாபங்களின் நன்மையை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே நாணயச் சபையின் நோக்கமாகும். கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலான காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டதைப் போன்றே,ஊழியர் சேமலாப நிதியம் அதன் முதலீட்டுப் பொறுப்புக்களையும் கடமைகளையும் அதன் உறுப்பினர்கள் அனைவருக்கும் சாத்தியமான அளவிற்கு உண்மையான வருவாய் வீதத்தினை வழங்குகின்ற வேளையில்,ஊ.சே.நிதியத்தின் செல்வங்களை பாதுகாத்துக் கொள்ளும் என்பதையிட்டு நாணயச் சபையானது பொது மக்களுக்கு உறுதியொன்றினை வழங்க விரும்பு கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணத்தில் முதலிட இந்திய முதலீட்டாளர் ஆர்வம்

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சர்வதேச வர்த்தகக் கண்காட்சி-2010 ஐத் தொடர்ந்து பல இந்திய முதலீட்டாளர் இங்கு முதலிட ஆர்வமாகவுள்ளனர். இவர்களில்சிலர் அதன் ஆரம்பகட்டப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

கட்டிட நிர்மாண பொருட்கள், நெசவுத்துறைசார் இயந்திர வேலைகள் மற்றும் உற்பத்தி துறைகளிலேயே முதலீட்டாளர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். யாழ்ப்பாணத்தில் வர்த்தகம் செய்வதற்கான நம்பிக்கை மட்டம் உயர்வாகக் காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் வர்த்தக வாய்ப்புகள் பிரகாசமாகக் காணப்படுவதாக யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றத் தலைவர் கே.பூரணச்சந்திரன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாண நகரத்தினுள் வர்த்தக அலுவலகத்திற்கான இடத்தினை பெற்றுக் கொள்வதில் சிரமம் காணப்படுவதாகவும், இதனால் நகரத்திற்கு வெளியிலும் வர்த்தகம் விரிவடைந்து செல்வதாகவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் 2 இலட்சம் பேர் வேலை வாய்ப்பற்று இருப்பதாகவும்,இது தொழில்துறைக்கு சிறந்த வாய்ப்பாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

# மஹிந்திரா நிறுவனம் இலங்கையில் ஹோட்டல்,நிதிச் சேவைகளில் நுழைகிறது

இலங்கையின் வாகனச் சந்தையில் வர்த்தகத்தை விஸ்தரித்துள்ள இந்தியாவின் முன்னணி நிறுவனமான மஹிந்திரா குழுமம், இலங்கையில் ஹோட்டல் மற்றும் நிதிச்சேவைகள் துறைகளிலும் கால் பதிக்கவுள்ளதாக அக்குழுமத்தின் பிரதித் தலைவரும் முகாமைத்துவ பணிப்பாளருமான ஆனந்த மஹிந்திரா தெரிவித்தார்.

உள்நாட்டில் உழவு இயந்திரங்கள் மற்றும் வாகனங்களின் விற்பனையை அதிகரிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் புதிய ரக வாகனங்களை விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மஹிந்திரா குழுமமானது ஐடியல் மோட்டோர்ஸ் மற்றும் டிமோ ஆகிய நிறுவனங்களின் ஊடாக இலங்கையில் தனது உற்பத்திகளை சந்தைப்படுத்தி வருகிறது.

இது குறித்து மஹிந்திரா குழுமப் பிரதித் தலைவர் மேலும் கூறுகையில்,இலங்கை எமது கேந்திர முக்கியத்துவம் மிக்கசந்தையாகும்.பல்வேறு துறைகளில் வர்த்தகத்தை மேற்கொண்டுவரும் நிறுவனம் என்றவகையில்,இங்கு முதலீடு செய்வதற்கான சிறந்த வாய்ப்பு காணப்படுகிறது.

எரிபொருள் சிக்கனம் ,கடின பாவனை போன்ற சிறப்பம்சங்களுக்காக மஹிந்திரா வாகனங்களுக்கு இலங்கையில் நல்ல சந்தை வாய்ப்பு காணப்படுகிறது. அத்துடன் மின் சக்தியில் இயங்கும் மஹிந்திரா ரேவா காரினை இங்கு அறிமுகப்படுத்துவது தொடர்பிலும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றோம்.

அது மட்டுமன்றி,பாரிய பொருளாதார முன்னேற்றத்தை நோக்கி அடியெடுத்து வைத்துள்ள இலங்கையில் உல்லாசப் பயணத்துறையிலும் அதற்கு அப்பாலும் பல்வேறு வாய்ப்புக்கள் இருப்பதைக் காண்கிறோம்.

இந்தியாவிலிருந்து விரைவாகவும் குறைந்த கட்டணத்திலும் வந்து செல்லக் கூடியதாக இருப்பதால் அதிகமான இந்தியர்கள் இலங்கைக்கு வந்து செல்கின்றனர். அல்லது அதற்கு ஆவலாய் உள்ளனர். இதனைக்கருத்தில்கொண்டே விருந்தோம்பல் சேவைகளை வழங்குவதற்கான ஹோட்டல் துறையில் கால் பதிக்க முடிபெடுத்தோம்.

மஹிந்திரா அன்ட் மஹிந்திரா நிறுவனமானது இந்தியாவில் நிதிச் சேவைகளை வழங்கி வருகிறது. அச்சந்தைகளினை ஒத்த பண்பு கொண்டதாக இலங்கைச் சந்தை காணப்படுவதால்,இலங்கையிலும் எமது நிதியியல் சேவைகளை ஆரம்பிக்கவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 111.62 | 113.18 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 173.46 | 177.00 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 142.32 | 145.66 |
| சுவிஸ் பிராங் | 107.55 | 110.16 |
| கனேடிய டொலர் | 106.81 | 109.53 |
| அவுஸ்திரேலிய டொலர் | 98.86 | 101.51 |
| சிங்கப்பூர் டொலர் | 82.16 | 84.01 |
| ஜப்பான் யென் | 1.30 | 1.33 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.42 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.58 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி




# பங்குச்சந்தை முதலீடுகளுக்கான அறிமுகம்

கடந்த ஞாயிறன்று வெளியான,கொழும்பு பங்குப் பரிவர்த்தனை-யாழ்பாணக் கிளையினரின் தொகுப்பின் தொடர்ச்சி இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

### 3. ஒதுக்கங்களை முதலாக்கம் செய்தல் (Capitalization of Reserves)

போதுமான அளவு இலாப ஒதுக்கங்களைக் (Reserves) கொண்ட கம்பனிகள் இலாப ஒதுக்கத்தின் பகுதியளவை முதலாக்கம் செய்கின்றன. இதன்போது ஏற்கனவேயுள்ள பங்குதாரர்களுக்கு, அவர்கள்கொண்டுள்ள உரிமைத்துவத்திற்கு ஏற்ப மேலதிக உரிமைத்துவம் (பங்குகள்) இலவசமாக ஒதுக்கப்படுகின்றன. இது முன்பு உபகாரப் பங்கு வழங்கல் (Bonus Issue) என அழைக்கப்பட்டது.

### 4. உரிமைப் பங்கு வழங்கல் (Rights Issue)

பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிகள் மேலதிக மூலதனத்தை திரட்டிக் கொள்ளும் நோக்குடன் ஏற்கனவேயுள்ள பங்குதாரருக்கு அவர்கள் கொண்டுள்ள பங்கு விகிதாசாரத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட விலையில் பங்குகளை ஒதுக்கி வழங்குகின்ற செயலொழுங்கு உரிமைப் பங்கு வழங்கல் எனப்படும். இங்கு விலையானது பொதுவாகப் பங்கின் சந்தை விலையினை விடக் குறைவாகக் காணப்படும்.

### 5. பங்குப் பகிர்வு (Share Splits)

கம்பனிகளின் மூலதனக் கட்டமைப்பில் (Stated Capital)எதுவித மாற்றத்தினையும் ஏற்படுத்தாது பங்குகளின் எண்ணிக்கையை குறித்த விகிதத்தினால் அதிகரித்தல் பங்குப் பகிர்வு எனப்படும். பங்குப் பகிர்வு,முதலீட்டாளர்கள் என்ற ரீதியில் சிறிய முதலீட்டாளர்களும் மிக உயர்ந்த சந்தை விலையினைக் கொண்ட கம்பனிகளின் பங்குகளில் முதலீடு செய்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதுடன்,பங்குகளின் திரவத்தன்மையும் அதிகரிக்கின்றன.

*இதற்கு மேலாக பொதுவாக சில நன்மைகளை நாம் பெற்றுக் கொள்ள முடியும்*

### திரவத்தன்மை(Liquidity)

மூலதனச்சந்தைப் பிணையங்கள் அதாவது பங்குகளைக் கொண்டுள்ளவர்கள் எந்நேரத்திலும் அவற்றை முழுமையாக அல்லது பகுதியளவினை விற்பனை செய்வதன் மூலம் பணமாக மாற்றிக்கொள்ளக் கூடிய தன்மை.அதாவது காலதாமதம் மற்றும் முதல் இழப்பு இன்றி பணமாக மாற்றக்கொள்ள கூடிய விசேட சிறப்பியல்பு.

### கட்டுப்பாடுகள் அற்ற முதலீட்டு முயற்சி (Free Investment)

முதலீட்டாளர்கள் மிகக் குறைந்த ஆரம்பத் தொகையுடன் பங்குகளில் முதலீடு செய்ய முடிதல். அதாவது ஒரே தடவையில் 1 முதல் 1 மில்லியன் வரையான பங்குகளை கொள்வனவு செய்ய முடியும். அதேபோல் வெளிநாட்டிலுள்ள உங்கள் உறவினர்களுடன் இணைந்தும் பங்குச் சந்தையில் முதலிடமுடியும். இவ்வாறாக முதலீடுகளை உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்தவாறு முகாமை செய்வதுடன் விசேட வரிச் சலுகைகளையும் பெறமுடியும்.

### குறித்த நாள் வியாபாரம் (Day Trading)

முதலீட்டாளர் குறித்த பங்குத் தரகர் ஊடாக ஒரு நாளிற்குள் குறித்த பங்குகளை கொள்வனவு செய்து விற்பனை செய்திருந்தால் அல்லது விற்பனை செய்திருந்தால் அல்லது விற்பனை செய்து கொள்வனவு செய்திருந்தால் கூடுதலான பரிமாற்றல் பெறுமதிக்கு மட்டுமே தரகுக்கட்டணம் அறவிடப்படும். இங்கு பரிமாற்றம் குறித்த நாளில் (9.30 am-2.30 pm)நிறைவேற்றியிருத்தல் வேண்டும்.

### பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டு வசதி Diversified Investments

முதலுக்கான நட்ட அச்சத்தினை இழிவுபடுத்தத்தக்க வகையில் பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டுச் செயல் முறைமையூடாக ஆபத்துக்களை பரவலாக்க முடிதல். அதாவது ஒரு துறை மட்டுமல்லாது பல்வேறுபட்ட துறைகளில் முதலீடு செய்து ஆபத்துக்களை பரப்புதல் *(தொடரும்)*

# பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | புள்ளி | அதிகரிப்பு/ குறைவு |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5563.00 | 447.21 |
| மிலங்கா விலைச்சுட்டி | 5863.00 | 118.41 |
| புரள்வு (ரூபா.மில்லியன்) | 11 875.56 | |

***உயர்வடைந்த பங்குகள்:*** அற்கின் ஸ்பென்ஸ்,லங்கா ஓரிக்ஸ் லீசிங் கம்பனி,பிறவுண் & கம்பனி ,ஜோன் கீல்ஸ் ஹோல்டிங், சிங்கர் சிறிலங்கா.
***சரிவைக் காட்டிய பங்குகள்:*** கார்ஷன்ஸ், த புக்கிட் தாறா, அற்கின் ஸ்பென்ஸ் ஹோட்டல் ஹோல்டிங் ,டிஸ்ரிலறிஸ் கம்பனி ,ஜோன் கீல்ஸ் ஹோட்டல்ஸ்.

# சி.டி.பி.,பங்குச்சந்தையில் பட்டியலிட நடவடிக்கை

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் தமது பங்குகளை பட்டியலிடும் நோக்கத்தினை CDB நிறுவனம் தனது அண்மித்த எதிர்காலத்திற்கான திட்டங்களில் உள்ளடக்கியுள்ளது.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட ஒரு நிறுவனமாக விளங்குவதன்மூலம் பங்குதாரர்களின் கட்டமைப்பை விஸ்தரித்தல்,எதிர்கால வளர்ச்சிக்கான மூலதனத்தை அதிகரித்துக் கொள்ளும் இயலுமையை அதிகரித்துக் கொள்ளல் மற்றும் பொதுப் பட்டியலிடப்பட்ட நிறுவனம் என்ற வகையில் தனது வெளிப்படைத் தன்மையை உயர்த்திக்கொள்ளுதல் போன்ற நிர்ணயிக்கப்பட்ட வரையறைகளை எதிர்கொள்வதற்கான ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு இணங்க பல்வேறு இலக்குகளை அடைவதற்கு சிடிபி நிறுவனம் எதிர்பார்ப்பதாக நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி மகேஷ் நாணயக்கார தெரிவித்தார்.

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் லிமிட்டட்டின் 2010 மார்ச் மாதத்தில் முடிபடைந்த நிதியாண்டுக்கான வரிக்கு முன்னரான இலாபம்(வருடாந்த) 71மில்லியனை தாண்டியுள்ள அதேவேளை,2010 மார்ச் 31இல் வரிக்குப் பின்னரான தேறிய இலாபம் (வருடாந்த) ரூ.64 மில்லியனை தாண்டியுள்ளது.

# டயலொக் வாடிக்கையாளருக்கு பரிசுகளை வெல்லும் வாய்ப்பு

எக்ஸ்ஸ்ரார் வெகன்ஸா (ExSTAR vaganza) மூலம் டயலொக் நிறுவனம் 5 மில்லியனுக்கும் அதிக பெறுமதியான பரிசுகளை வழங்குகிறது.

ஸ்ரார் பொயின்ட்ஸ்களுக்கான புதிய ஊக்குவிப்புத் திட்டமான இதில், தங்களின் கணக்கில் 10 ஸ்ரார் பொயின்ஸ்களுக்கு அதிகமாகக் கொண்டுள்ள எவரும் WIN என ரைப் செய்து 141இற்கு குறுந்தகவலை அனுப்புவதன் மூலம் அதிர்ஷ்டத்தைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.தினசரி ஒரு வெற்றியாளர் தேர்ந்தெடுக்கப்பட்டு 32"எல்.சி.டி.தொலைக்காட்சி வழங்கப்படும்.இதற்கு மேலதிகமாக 20 அதிர்ஷ்டசாலிகள் ரூ.1000 பெறுமதியான டயலொக் ரீலோட்களைப் பெற்றுக் கொள்வார்கள். செப்ரெம்பர் 5-ம் திகதி முடிபடையவுள்ள இவ் ஊக்குப்புத் திட்டத்தில் மேலும் பல பரிசில்களும் வழங்கப்படும் என டயலொக் நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர்.


# ஈழத்தவர் வரலாறு

12

## 2.வரலாற்றுதய காலத் தமிழ் மன்னர்கள்

### (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

கல்யாணிப் பிரதேச சிற்றரசு தேவநம்பியதீசனின் சகோதரன் (உதிய) என்பவனால் கைப்பற்றப்பட்டது. காஜரகமம், சண்டனாகமச் சத்திரிய மன்னர்களைத் தேவனம்பியதீசனின் சகோதரன் மாகாநாகன் அழித்துத் தனதாட்சியை நிறுவியுள்ளான். இவற்றிலிருந்து தேவநம்பியதீச மன்னனின் ஆதிக்க விரிவு புரியும். நாகதீவு (யாழ்ப்பாணக் குடா நாடு) இந்த மன்னனின் ஆதிக்கத்தை ஏற்றிருந்துள்ள போதிலும், உத்தரதேசத்தின் குறுநில மன்னர்கள் சிலர் இதனால் வெறுப்படைந்திருக்க வேண்டும்.




பிராமிய எழுத்துக்களில் அசோக கற்றூண்

அனுராதபுர மன்னனின் ஏகாதிபத்தியச் செருக்கும், அதற்கு மேலாக இந்துக்களாக விளங்கிய உத்தரதேசத்து மக்களைப் பௌத்தராக்கும் முயற்சியால் நாகதீவு மக்களில் ஒரு பகுதியினர் பௌத்த ராகியமையும் வெறுப்பினை ஏற்படுத்தியிருக்க வேண்டும். இந்துவாக விளங்கிய தேவனம்பியதீசனின் மேலாதிக்கத்தை ஏற்ற இச் குறுநில மன்னர்களால், பௌத்த தேவநம்பியதீசனின் வல்லாதிக்கத்தை ஏற்க முடியாது போனது. அவ்வாறு கிளர்ந்தவர்களில் சேனன், குத்திக்கன் என்ற இரு சிற்றரசர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

தேவநம்பியதீசனின் மரணத்தின் பின்னர் பல தசாப்தங்களாக, வடவிலங்கையைத் தம்மாதிக்கத்தின் கீழ் வைத்திருக்கச் சிங்கள மன்னர்களால் முடியவில்லை. மயூர சாம்ராச்சியத்தின் மாமன்னன் அசோகனின் படைப்பலமும் செல்வாக்கும் தேவநம்பிய தீசனுக்கு இருந்ததால், தேவநம்பியதீசன் கால உத்தரதேசத்துக்குறுநில மன்னர்களும் உரோகணப் பிரதேசச் சிற்றரசர்களும் அனுராதபுர மன்னனின் ஆணையை ஏற்றிருந்தனர். தேவநம்பியதீசனின் மரணத்தின் பின்னர் இந்நிலையில் மாற்றம் காணப்பட்டது. தேவநம்பியதீசன் பௌத்தமதப் பரவலிற்கும், விகாரைகளைக் கட்டுவதிலும், தன்செல்வத்தில் பெரும் பகுதியைச் செலவிட்டான். இராணுவ படைபலத்தை பெருக்குவதில் கவனம் செலுத்தவில்லை. அதனால் இந்த மன்னனின் மறைவின் பின்னர் உத்தரதேசத்துத் தமிழ் மன்னர்கள் அனுராதபுர அரசின் ஆணையை ஏற்காததோடு, அனுராதபுரத்திறகு எதிராகத் தண்டெடுக்கவும் தலைப்பட்டனர்.

தேவநம்பியதீசன் கி.மு.247 தொட்டு கி.மு.207 வரை ஆட்சிபுரிந்தான். அவனின் பின்னர் உத்தியன் (கி.மு.207 - 197),



திருப்பரங்குன்றத்தில் (தமிழ்நாடு) உள்ள தமிழ்ப்பிராமிக் கல்வெட்டு. இது இழ (=ஈழ) குடும்பிகன் ஒருவனைக் குறிப்பிடுகிறது.

மகாசிவன் (கி.மு.197- 187), சூரத்தீசன் (187 - 177) ஆகிய மன்னர்கள் அரச கட்டிலிலேறினர். சூரத்தீசன் என்ற சிங்கள மன்னன் அனுராதபுரத்திலிருந்து இலங்கையை ஆட்சி செய்த காலவேளையில், உத்தரதேசத்துக் குறுநில மன்னர்களான சேனன், குத்திக்கன் என்போர் அனுராதபுரத்துக்கு எதிராகப் படை நடாத்திச் சென்றுள்ளனர்.அனுராதபுர மேலாதிக்கத்திற்கு எதிராக நிகழ்ந்த முதலாவது தண்டெடுப்பாக இது வரலாற்றிலுள்ளது.

இவர்கள் இருவரும் எங்கிருந்து படை நடாத்தினர்? உத்தரதேசத்தின் பூநகரிப் பகுதியில் செழிப்பான ஓர் தமிழரசு நிலவியிருந்துள்ளது. அனுராதபுரத்தில் ஆட்சி செய்த தமிழ் மன்னர்களின் சாதனைகளை மறைத்தும் திரித்தும் கூறிய மகாவம்சம் இவர்களை ஆக்கிரமிப்பாளர், படையெடுப்பாளர், சோழமரபில் வந்தவர்கள், அக்கரையைச் சேர்ந்தவர்கள் எனக்கூறுகிறது. இதற்கு இவர்கள் அனைவரும் தமிழ் நாட்டிலிருந்து படையெடுத்து வந்து ஆட்சியைக் கைப்பற்றியவர்கள் என வரலாற்று ஆசிரியர்களால் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டிற்கும் இலங்கைக்குமிடையே வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலிருந்து நெருங்கிய வர்த்தகக் கலாசாரத் தொடர்புகள் இருந்து வந்துள்ளன என்பதில் சந்தேகமில்லை. இதைப் பாளி இலக்கியங்கள் மட்டுமன்றி சங்ககால இலக்கியங்களும், இலங்கை - தென்னிந்தியப் பிராமிக் கல்வெட்டுகளும், தொல்பொருட் சான்றுகளும் உறுதிப்படுத்துகின்றன. ஆனால் கி.பி.6 ஆம் நூற்றாண்டு வரையான தமிழ்நாட்டு வரலாற்று மூலகங்களில் இலங்கையுடனான அரசியல் தொடர்பு பற்றியோ, படையெடுப்புகள் பற்றியோ எதுவித குறிப்பும் காணப்படவில்லை. அத்துடன் அத்தகைய ஒரு படையெடுப்பை இலங்கை மீது மேற்கொள்ளக் கூடிய அளவுக்குப் பலமான அரசுகள் தமிழ்நாட்டில் இருந்ததாகக் கூறுவதற்கும் இல்லை.

மேலும், அனுராதபுரத்தில் ஆட்சிசெய்த தமிழ் மன்னர்களின் பெயர்களுக்கும் தமிழ்நாட்டில் ஆட்சிசெய்த மன்னர்களின் பெயர்களுக்குமிடையே அதிக ஒற்றுமை இருப்பதாகவும் தெரியவில்லை. (தொடரும்)

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

# பல மொழிகளுக்கு தமிழே மூல வரிவடிவம்

1

## செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை

முருகேசு பாக்கியநாதன் B.A

### நோக்கம்

தமிழ் மொழியின் சொல் வளத்தினாலும் அதன் வரிவடிவத்தினாலும் தோற்றம் பெற்றதுமான பல இந்திய மொழிகளுக்கும் அண்டை நாடான இலங்கையின் பெரும்பான்மை இன மொழியான சிங்கள மொழியினுக்கும் தமிழ் வரிவடிவமே அம்மொழிகளின் தோற்றத்திற்கு ஆதராமாகவும் மூல வரிவடிவமாகவும் இருந்தது என்பதனை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அதனை ஆராயும்போது தமிழின் தொன்மை, அதன் வரலாறு அதன் மொழி வரிவடிவத்தின் தோற்றமும் வளர்ச்சியும் அத்தோடு அம்மொழி வரிவடிவம் ஏனைய மொழிகளின் வரிவடிவத்தில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்தியது என்பதனை நோக்குவதே இக்கட்டுரையாகும்.

தமிழின் வரலாறு இற்றைக்குப் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு லெமூரியா தொடங்கி சிந்துவெளி நாகரிக காலத்திலிருந்து முழு இலங்கையிலும் மற்றும் முழு இந்தியாவிலும் செழித்தோங்கிய மொழியாகவே இருந்துள்ளது. லெமூரியா இன்று எம்முன் இல்லாமல் மறைந்து போயிருந்தாலும் தமிழ்மொழி பற்றிய உண்மையான வரலாறு 6000 ஆண்டுகளிலிருந்து சிந்துவெளியிலிருந்து எமக்குக் கிடைக்கப் பெறுகின்றது. இந்த வகையான தொன்மையும் வரலாறும் ஆதாரமும் கொண்டதான மொழிகள் உலகில் மிகச் சிலவே.

### தமிழும் திராவிடமும்

தமிழும் திராவிடமும் என்ற இரு பதங்கள் ஒரு கருத்தையே பிரதிபலிக்கின்றன. தமிழ் என்பதன் உச்சரிப்பே காலப் போக்கில் திரிபடைந்து திராவிட என்று மாறியதாக அறிஞர் பெருமக்கள் கொள்ளுவர்.

திராவிடம் என்ற சொற்பதத்தினை றெபேட் கால்டுவெல் அவர்களே 1856 இல் திராவிட மொழிகளுக்கான ஒப்பியல் இலக்கணம் என்னும் நூலில் முதன் முதலில் பயன்படுத்தினார். திராவிட மொழிக் குடும்ப மொழிகளாக தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு, கொடகு, துத,தோத, கோந்தி, கூய், ஓரான், ராஜ்மஹால் ஆகிய 12 மொழிகளைத் தெரியப்படுத்தினர். இக் குடும்பத்திற்கு தாய் மொழியாக தமிழேயென அறிய முற்பட்டுள்ளார்.

இதன்பின் நடைபெற்ற ஆராய்ச்சிகளின்போது பின்வரும் மொழிகளும் அதனுள் அடக்கப் பெற்றன. அவையாவன பிரகூய், கொலாமி, நாய்க்கி, குவி,கோண்டா, கட்பா, குரூக், ஒல்லாரி, கோயா, மோல்டா,பார்ஜி, கதபா, பெங்கோ, இருளா, கொடகு, குறவா, தோடா, படகா ஆகியவனவாகும். இம்மொழிகள் தாய்த் திராவிட மொழியிலிருந்து பேசப்பட்ட பிராந்திய மற்றும் இனக்குழுமங்களின் மொழிகளாக அறியப்பட்டுள்ளன. தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம்,துளு ஆகிய மொழிகளின் இலக்கண ஒப்புமைகள், சொல் ஒப்புமைகள் பற்றி ஏராளமான தரவுகளைத் தந்துள்ளார்.

கால்டுவல் கோடிட்டுக் காட்டியதை மேலும் ஆராய்ந்து மாந்த இன முதன்மொழி ஒன்றாகத்தான் இருந்திருக்க வேண்டும் எனவும் மிகு தொன்மை வாய்ந்த தமிழே அனைத்து மொழிக் குடும்பங்களுக்கும் (இந்தோ - ஆரிய மொழிகள் உட்பட) மூலமான மொழியாகக் கருதப்பட வேண்டும் என்ற கோட்பாட்டை மாறல் கார்த்திகேய முதலியார் 1913 இலும் கா. சுப்பிரமணியபிள்ளை 1920 களிலும், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் 1930, 1940களிலும் ஞா.தேவநேய பாவாணர் 1940-1980 களிலும் மிக விரிவாக ஆராய்ந்து நிறுவியுள்ளனர்.

### லெமூறியாவில் திராவிடன்

இன்றை ஸ்ரீ லங்கா அடங்கலாக பாண்டியத் தமிழ் பேரரசே கோலோச்சி தமிழர்களே ஆதிக்குடிகளாக இருந்துள்ளனர். இதற்கு முந்திய காலப்பகுதியிலேயே நாகர்கள் என்றழைக்கப்பட்ட மனித இனம் வாழ்ந்துள்ளதாக லெமூறியா பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகளின் மூலம் தெரிவித்துள்ளார்கள். இவர்களைப் பாம்பு மனிதர்கள் (Snake People) என அழைத்துள்ளார்கள்.இவர்கள் பற்றி அவர்கள் கூறும்போது பாம்பு மனிதர்கள் என்று அழைக்கப்பட்டவர்கள் மிக மிக ஆதிகாலத்தில் ஏறத்தாழ 10000 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்தவர்களாவர். அவர்களே லெமூறியாவின் தொன்மையான குடிகள். பாம்பு மனிதர்களே உலகில் பதிவுகள் பற்றிய அறிதலை விட்டுச் சென்றவராவர். பாம்பு என்பது ஒரு குறியீடே இது உலகியலில் அதி விவேகத்தினைக் குறிக்கும் குறியீடெனக் குறிப்பிட்டார்கள்.

ஆகவே பாம்பு மனிதன் என்று அவர்கள் குறிப்பிடுவது நாகர்களையே ஆகும். அவர்களே தமிழனின் பரம்பரையினர். அன்றே அவன் எழுத்தை அறிந்து வைத்து அதனைத் தமது பதிவுகளுக்குப் பயன்படுத்தியிருக்கிறான் என்ற ஒரு செய்தி இங்கிருந்து கிடைக்கின்றது.

லெமூறியாவின் எஞ்சியுள்ள பகுதிகளான தென் இந்தியா, இலங்கை, வடமேற்கு அவுஸ்திரேலியா ஆகிய இடங்களில் திராவிடர்களின் பரம்பரையினரே இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

குறிப்பாக பல்லாயிரம் கிலோ மீற்றர்களுக்கு அப்பால் வடமேற்கு அவுஸ்திரேலியாவில் வாழும் ஆதிக்குடிகள் பற்றி ஆராய்ந்த போது பெறப்பட்ட உண்மைகள் அதிசயிக்க வைத்தன.

அவுஸ்திரேலியாவின் வடமேற்குப் பகுதியில் தற்போதும் வாழும் கரிறியா என்னும் ஆதிக்குடிகள் ஆதித் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க முடியும் என எண்ணத் தோன்றுகின்றது. இதற்கு அவர்களது உருவத்தோற்றப்பாடு ஆதாரமாயுள்ளது. அத்தோடு அவர்களது மொழியிலும் திராவிட மொழியின் சாயலும் இலக்கண ஒலியன் ஒற்றுமைகள் உள்ளதாக கு.அரசேந்திரன் குறிப்பிடுகின்றார். குமரிக் கண்ட நிலத்தொடர்பு இருந்த காலத்திலேயே ஆதித்திராவிடர் குமரிக் கண்டத்திலிருந்து புலம்பெயர்ந்து உணவு தேடி வேட்டையாடும் நோக்கோடு வேறொரு பிரதேசத்திற்கு சென்றுள்ளார்கள். (தொடரும்)

## வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தை சொந்த இடத்தில் இயங்க நடவடிக்கை எடுக்கவும்

வலிகாமம் வடக்கு வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் நவோதயா பாடசாலையினை மீண்டும் அதன் சொந்த இடத்தில் இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேசபொதுமக்களும் பாடசாலை நலன் விரும்பிகளும் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அமைச்சரின் பணிமனைக்கு கடந்த வியாழன் அன்று வருகை தந்த பாடசாலை அபிவிருத்திச்சபைத் தலைவர் கனகராஜா தலைமையிலான நலன் விரும்பிகளும் பிரதேச மக்களுமே மேற்படி வேண்டுகோளை விடுத்தனர்.

அவ்வேண்டுகோள் தொடர்பாக மேலும் தகவல் தெரிவித்த அவர்கள் தற்சமயம் சுமார் ஆயிரத்து 300 மாணவர்கள் கல்வி கற்று வரும் நிலையில் தனியார் வீடுகளிலேயே பாடசாலை இயங்கிவருகின்றது.

தற்போது இயல்பு நிலைமை மீள திரும்பி வரும் நிலையில் வீட்டு உரிமையாளர்கள் தமது வீடுகளை மீண்டும் கோரி நிற்கின்றனர். இந்நிலை அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை மேற்கொண்டு பாடசாலையினை மீண்டும் அதன் சொந்த இடத்தில் இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டனர்.

இவர்களின் வேண்டுகோளின் பேரில் கூடிய கரிசனை செலுத்திய அமைச்சர் இவ்விடயங்களை கோரிக்கை மூலமாகத் தான் நான் தெரிந்துகொள்ள வேண்டும் என்று இல்லை. நான் பெருமளவு நாட்களை இங்கு மக்களுடன் தான் கழிக்கின்றேன் .20 வருடயுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்களை ஒரே நாளில் தீர்த்து வைக்க முடியாது என தெரிவித்ததுடன் அண்மைக்காலத்தில் கட்டம் கட்டமாக பெருமளவு உயர் பாதுகாப்பு வலயங்கள் விடுவிக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டினர்.

மேலும் எதிர்காலத்ததில் உயர் பாதுகாப்பு வலயங்கள் இருக்க முடியாது என்ற யாழ். கட்டளைத் தளபதியின் கூற்றினையும் எடுத்துக்காட்டியதுடன் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் கலந்துரையாடி உரிய தீர்வினை விரைவில் பெற்றுத்தருவதாகவும் உறுதியளித்தார். (6)

## வடக்கின் அபிவிருத்தித்திட்டங்கள் குறித்து இருநாட்கள் மாநாடு

(கொழும்பு)

வடக்கில் அரசாங்கம் மேற்கொண்டு வரும் அபிவிருத்தித்திட்டங்கள் மற்றும் அரச நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், கிராம சேவர்களுக்கு விளக்கமளிக்கும் இரு நாட்கள் மாநாடு யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் 6,7ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டினை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு ஏற்பாடு செய்துள்ளதுடன் நாடாளாவிய சகல மாவட்ட செயலாளர்களுக்கான மாநாடாகவும் யாழ். மாவட்ட பிரதேச செயலாளர்கள் கிராம சேவை அதிகாரிகளுக்கான மாநாடாகவும் இது ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன, பிரதிய மைச்சர் டிலான் பெரேரா மற்றும் அமைச்சின் செயலாளர், உயரதிகாரிகள் பலரும் இம்மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் 6ஆம் திகதி நாடாளாவிய மாவட்டச்செயலாளர்களுக்கான மாநாடாகவும் மறுநாள் செவ்வாய் கிழமை பிரதேச செயலாளர் மற்றும் கிராம சேவகர்களுக்கான மாநாடாகவும் இதனை ஏற்பாடு செய்துள்ளதாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார்.

இம்மாநாடு யாழ்ப்பாண மாவட்ட செயலகக் கட்டடத்தில் இடம்பெறுவதுடன் யாழ். மாவட்டத்தில் அரசாங்கம் மேற்கொள்ளும் அபிவிருத்திதிட்டங்கள் வடக்கின் அரச நிர்வாக குறைபாடுகள் மீள் குடியேற்றப் பிரதேசங்களின் குறை நிறைகள் தொடர்பிலும் விரிவாக ஆராயப்படும் என அவர் மேலும் தெரிவித்ததாக தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (6-2)

## நிரந்தர நியமனம் பெற்றுத் தருமாறு சமூக சேவைகள் போதனாசிரியர்கள் கோரிக்கை

(கொழும்பு)

சமூக சேவைகள் அமைச்சின் கீழ் இயங்கும் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் சேவையாற்றும் போதனாசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனத்தைப் பெற்றுத்தருமாறு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவனந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அமைச்சரின் பணிமனைக்கு வருகை தந்த யாழ். மாவட்டத்தில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் தற்காலிகமாக சேவையாற்றும் சுமார் 14 போதனாசிரியர்களே மேற்படி கோரிக்கையினை முன் வைத்தனர். இது தொடர்பாக மேலும் கருத்துத்தெரிவித்த அவர்கள் நீண்ட காலமாக தற்காலிக போதனாசிரியர்களாக பணிபுரியும் தாம் குடாநாடு தழுவிய ரீதியில் பலநூறு சுய தொழில் வல்லுநர்களை உருவாக்கியுள்ளோம்.

தற்போதைய பொருளாதார நிலைமையினையும் தமது குடும்ப நிலைமையினையும் கருத்தில் எடுத்து தமக்கு நிரந்தர நியமனத்தை தந்துதவ வேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர்.

தற்காலிகமாக சேவையாற்றும் போதனாசிரியர்களின் கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்த அமைச்சர் சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுடன் கலந்துரையாடி உரிய தீர்வினைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்துள்ளார். (6)

## ஆயுள்வேத வைத்திய சேவையை நடத்தக் கோரிக்கை

(பொற்பதி)

பருத்தித்துறை பிரதேச சபையில் இலவச ஆயுள்வேத வைத்தியசாலையினால் நடமாடும் சேவை ஒன்று வாரத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் மணற்காடு இடைத் தங்கல் முகாமில் இடம்பெற்று வந்தது.

இதனால் பலர் பெரியளவில் நன்மை அடைந்து வந்தனர். கடந்த 5 வாரங்களாக இந்த ஆயுள்வேத வைத்தியசாலையில் நடமாடும் சேவை இப்பகுதி வாழ் மக்களுக்கு வழங்கப்படவில்லை.

எனவே தொடர்ந்து இந்த நடமாடும் வைத்திய சேவை இப்பகுதியில் வழங்குவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (6)

## 22.08.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்


## நிகழ்வுகள்

✠1642 - இங்கிலாந்தின் முதலாம் சார்ள்ஸ் ஆங்கில நாடாளுமன்றத்தை "துரோகிகள்" என வர்ணித்தான். ஆங்கில உள்நாட்டுப் போர் ஆரம்பமானது.
✠1717 - ஸ்பானியப் படைகள் சார்டீனியாவில் தரையிறங்கினர்.
✠1770 - ஜேம்ஸ்குக் தனது ஆட்களுடன் அவுஸ்திரேலியாவின் கிழக்குக் கரையை அடைந்தான்.
✠1780 - கப்டன் ஜேம்ஸ் குக்கின் கப்பல் (HMS Resolution) இங்கிலாந்து திரும்பியது. (ஹவாயில் குக் கொல்லப்பட்டான்).
✠1798 - ஐரியக் கிளர்ச்சிக்கு ஆதரவாக பிரெஞ்சுப் படைகள் அயர்லாந்தில் தரையிறங்கினர்.
✠1831 - வேர்ஜீனியாவில் நாட் டர்னர் தனது தாக்குதலை ஆரம்பித்தான். 50 வெள்ளையினத்தினரும், பல நூற்றுக்கணக்கான கறுப்பின அமெரிக்கர்களும் கொல்லப்பட்டனர்.
✠1848 - நியூ மெக்சிகோ ஐக்கிய அமெரிக்காவுடன் இணைக்கப்பட்டது.
✠1860 -பிரித்தானியக் கடற்படையின் உதவியுடன் கரிபால்டியின் படைகள் சிசிலியில் இருந்து இத்தாலியின் பெரும்பரப்பினுள் நுழைந்தனர்.
✠1864 - 12 நாடுகள் இணைந்து ஹென்றி டியூனாண்ட் தலைமையில் ஜெனீவாவில் செஞ்சிலுவைச் சங்கத்தை ஆரம்பித்தார்கள்.
✠1875 - சக்காலின் மற்றும் கூரில் தீவுகள் தொடர்பாக ரஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் சென் பீட்டர்ஸ்பேர்க்கில் உடன்பாடு எட்டப்பட்டது.
✠1910 - கொரியா - ஜப்பான் இணைப்பு ஒப்பந்தம் கைச்சாத்தானது. இரண்டாம் உலகப் போர் முடியும் வரையில் கொரியா ஜப்பானின் ஆட்சியின் கீழ் இருந்தது.
✠1911 - பாரிசில் களவெடுக்கப்பட்ட மோனாலிசா ஓவியம் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டது.
✠1914 -முதலாம் உலகப் போர்: பெல்ஜியத்தில், பிரித்தானியாவும் ஜேர்மனியும் முதன் முதலில் நேரடியாகப் போரில் ஈடுபட்டனர்.
✠1926-தென்னாபிரிக்கா, ஜோகானஸ்பேர்க்கில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது.
✠1932 - தொலைக்காட்சி சேவையை முதன் முதலாக பிபிசி சோதித்தது.
✠1941 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மன் படைகள் ரஷ்யாவின் சென் பீட்டர்ஸ் பேர்க்கை அடைந்தனர். லெனின்கிராட் மீதான முற்றுகை ஆரம்பமானது.
✠1942 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனி மீது பிரேசில் போரை அறிவித்தது.
✠1944 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் ஒன்றியம் ருமேனியாவைக் கைப்பற்றியது.
✠1949 - கனடாவில் 8.1 அளவு நிலநடுக்கம் பதிவாகியது.
✠1962 - பிரெஞ்சு அதிபர் சார்ள்ஸ் டி கோல் மீதான கொலை முயற்சி தோல்வியடைந்தது.
✠1972 - ரொடீசியா ஒலிம்பிக் அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்டது.
✠1978- சண்டினீஸ்டா படைகள் நிக்கராகுவாவின் தேசிய அரண்மனையைக் கைப்பற்றினர்.
✠1989 - நெப்டியூனின் முதலாவது கோள் கண்டுபிடிக்கப்பட்டது.
✠1991-சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பிராவ்தா பத்திரிகை மூடப்பட்டது.

### பிறப்புகள்

✠1877 - கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி (இ. 1947)

**1639- பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியினர் நாயக்கர் களிடம் இருந்து வாங்கிய நிலத்தில் மதராஸ் நகரத்தை (தற்போதைய சென்னை) அமைத்தார்கள்.**



# வடக்கு-கிழக்கில் சிங்கள குடியேற்றங்களைத் தடுக்க சர்வதேச சமூகம் முன் வரவேண்டும்

## தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணி அறிக்கை

இலங்கைத்தீவில் 1505ஆம் ஆண்டு வரை தமிழ்த் தேசம் தனது இறைமையை செவ்வனே பிரயோகிக்கக்கூடிய ஒரு தேசமாக விளங்கியது. அதன் பின்னர் மூன்று ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியாளர்களாலும் அதனைத் தொடர்ந்து சிங்கள ஆட்சியாளர்களாலும் தமிழ்த் தேசம் தனது இறைமையை பயன்படுத்த முடியாதவாறு அடக்குமுறைக்கும் ஆக்கிரமிப்புக்கும் உள்ளாக்கப்பட்டது.

தமிழ்த் தேசம் மீளவும் தனது இறைமையை நிறுவிக்கொள்வதற்காக ஐரோப்பியர்களுக்கு எதிராக போராடி வந்துள்ளது. தொடர்ந்து சிங்கள ஆட்சியாளர்களின் அடக்குமுறையில் இருந்து விடுபடுவதற்காக தந்தை செல்வா தலைமையில் நடைபெற்ற அகிம்சைப் போராட்டமும் பின்னர் நடைபெற்ற ஆயுதப் போராட்டமும் மிகவும் கொடூரமான முறையில் இராணுவ ரீதியாக நசுக்கப்பட்டுள்ளது.

ஆயுதப் போராட்டம் நசுக்கப்பட்ட பின்னர் முன்னெப்போதும் இல்லாதளவில் தமிழ்த் தேசத்தை அதன் தனித்துவமான நிலப்பரப்பு, மொழி, குடித் தொகைப் பரம்பல், பண்பாடு, பொருளாதாரம் என்பவற்றை திட்டமிட்டு அழிப்பதற்கான பெருமெடுப்பிலான நடவடிக்கைகள் அரசினால் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

ஒரு தேசத்தின் இருப்பின் அடிப்படைகளாக அமைவது அந்தத் தேசத்தின் நிலமும், மக்களுமாகும். நிலம் என்பது வரையறுக்கப்பட்டதும் பெறுமதிவாய்ந்ததுமான ஒரு தேசிய மூலவளம். ஒரு தேசத்தின் பண்பாட்டுத் தனித்துவம் பொருளாதார வாழ்வு, மொழி, வரலாறு என்பவற்றை அத்தேசத்தின் மண்ணில் இருந்து பிரித்துப் பார்க்க முடியாது.

தொடர்ச்சியான தாயக நிலப்பரப்பில், தனித்துவமான மொழி, பண்பாடு, பொருளாதாரம், வரலாறு என்பவற்றின் அடிப்படையில் தம்மைத் தாமே ஆட்சி செய்வதற்கான இறைமையை கொண்ட மக்கள் கூட்டத்தை உள்ளடக்கியது தேசம் எனப்படும். தேசம் என்பதற்கான மேற்கூறிய வரையறைகள், தேவைப்பாடுகள் அனைத்தையும் பூர்த்தி செய்வதாக தமிழ்த் தேசம் விளங்குகின்றது.

மேற்கூறியவாறு தேசம் என்பதற்கான வலிமையான தகைமைகளை தன்னகத்தே கொண்டுள்ள தமிழ்த் தேசத்தின் வலிமைமிக்க அந்தஸ்த்தை இல்லாது அழிப்பதற்காக சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர் தேசத்திலுள்ள நிலங்களை அபகரித்து திட்டமிட்ட சிங்கள மயப்படுத்தும் நடவடிக்கைகளில் முனைப்புக்காட்டி வருகின்றனர்.

1935 இல் இருந்து இன்றுவரை இலங்கைத்தீவில் சிங்கள ஆட்சியாளர்கள் (Government ) மாறிமாறி ஆட்சிப் பீடம் ஏறியிருந்தாலும் சிங்கள தேசத்தின் நிலையான அரசுக் கொள்கையாக (State Policy) தமிழர் தேசத்தில் நிலப்பரப்பும், அதில் சிங்களமயமாக்கும் குடியேற்றங்களும் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. முதலில், தமிழ்த் தேசத்திற்கும் சிங்களத் தேசத்திற்கும் இடையிலான எல்லையில் அமைந்துள்ள அனுராதபுரம், பொலநறுவை ஆகிய பிரதேசங்களில் சிங்களமயமாக்கும் குடியேற்றங்களை அமைத்தனர். இதன் வெற்றியைத் தொடர்ந்து 1949/1950களில் மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதியில் கல்லோயா சிங்களமயமாக்கல் குடியேற்றத் திட்டம், திருகோணமலை மாவட்டத்தின் தென் பகுதியில் அல்லை கந்தளாய் சிங்களமயமாக்கல் குடியேற்றத்திட்டங்கள் என்பவற்றை ஏக காலத்தில் மேற்கொண்டது.

தொடர்ந்து 1980களில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கிழக்குப் பகுதிகளான கொக்கிளாய், கொக் குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, பதவியா ஆகிய கிராமங்களில் வாழ்ந்த தமிழர்களை விரட்டியடித்த பின்னர் அங்கு சிங்கள மயமாக்கல் குடியேற்றங்களையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கெவுளியாமடு உட்பட மட்டு, அம்பாறை, திருமலை மாவட்டங்களில் பல சிங்கள மயமாக்கல் குடியேற்றங்களையும் மேற்கொண்டது. இதன் மூலம் தமிழ்த் தேசத்தில் தமிழர்களை சிறுபான்மையினராக்கும் செயற்திட்டத்தினை சிங்கள அரசு தீவிரப்படுத்தியது. உதாரணமாக இலங்கையின் உத்தியோக பூர்வமான குடிசன மதிப்பீடு 1871இல் மேற்கொள்ளப்பட்டபோது திருகோணமலை மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 19ஆயிரத்து 449. இதில் 17 ஆயிரத்து 625 பேர் தமிழ் பேசும் மக்களாயும் (12 ஆயிரத்து 852 தமிழ், 4ஆயிரத்து 773 முஸ்லிம்கள்), 519 பேர் சிங்களவர்களாயும் இருந்தனர். எனவே 1871 இல் மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 91% சதவீதம் தமிழ் பேசும் மக்களாயும் இருக்க சிங்களவர்கள் 3% சதவீதமாக மட்டும் இருந்தனர். 1901ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின் போது திருகோணமலை மாவட்டத்தில் வாழ்ந்த சிங்களவர்

## அபிவிருத்தி என்ற போர்வையில் முழுவீச்சில் சிங்களக் குடியேற்றம்

களின் தொகை ஆயிரத்து 203 பேர் மட்டுமே. அதேவேளை அப்போதிருந்த நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் சிங்களவர்கள் சிறுபான்மையினராக இருந்ததுடன் மாவட்டத்தின் மொத்த சனத் தொகையில் 4% சதவீதமாக மட்டுமே காணப்பட்டனர்.

ஆனால் 1981ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் போது திருகோணமலை மாவட்டத்தின் மொத்த சனத்தொகையான 2 இலட்சத்து 55 ஆயிரத்து 948 பேரில், 85 ஆயிரத்து 500பேர் சிங்களவர்களாயும், 75 ஆயிரத்து 039 பேர் முஸ்லிம்களாயும் 93ஆயிரத்து 135 பேர் தமிழர்களாயும் இருந்தனர். இதன்படி மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 33.4% சதவீதம் சிங்களவர்களாயும், 65.7% சதவீதம் தமிழ் பேசும் மக்களாயும் காணப்பட்டனர். அதேவேளை திருகோணமலை மாவட்டத்தில் காணப்பட்ட ஒன்பது உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுள் நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் சிங்களவர்கள் பெரும்பான்மையினர் ஆக்கப்பட்டுள்ளனர்.

மேலும் தம்பலகாமம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தமிழர்களிலும் (29.7%) பார்க்க சிங்களவர்களின் எண்ணிக்கை (31..7%) உயர்வாக ஆக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 1871இல் திருகோணமலை மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 3% சதவீதமாக மட்டுமே இருந்த சிங்களவர் தொகை, 1981ல் 33.4% சதவீதமாக அதிகரித்த அதே காலப்பகுதியில் மொத்த சனத்தொகையில் 66.1% சதவீதமாக இருந்த தமிழ் மக்களது வீதாசாரம் 36.4% சதவீத மாக வீழ்ச்சியடைந்தது. நேரடியாகவும் மறைமுகமாகவும் இம் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்த சிங்கள மயமாக்கல் குடியேற்றங்களின் விளைவாகவே இம் மாவட்டத்தின் இனவிகிதாசாரம் இவ் வகையில் மாற்றம் பெற்றது. இவையெல்லாம் 1950களில் இருந்து விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் என்ற பெயரிலும், 1970களில் இருந்து நகர அபிவிருத்தித்திட்டங்கள் என்ற பெயரிலுமே அரங்கேற்றப்பட்டன.

ஆயுதப் போராட்டம் தீவிரமாக இடம் பெற்ற காலப்பகுதியில் சிங்களக் குடியேற்ற நடவடிக்கைகளை அரசாங்கத்தினால் முன்னெடுக்க முடியாது மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

ஆனால் இன்று ஆயுதப் போராட்டம் நசுக்கப்பட்டதைத் தொடர்நது சிங்களக் குடியேற்ற நடவடிக்கைகளும், நிலப்பறிப்புக்களும், சிங்கள முதலீட்டாளர்களுக்கு காணிகள் வழங்குவதும் அபிவிருத்தி என்ற போர்வையில் முழுவீச்சில் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. இராணுவ நடவடிக்கை மூலம் சிங்கள இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட பிரதேசம் சிங்களவர்களுக்கே சொந்தம் என்ற ஆதிக்க மனோநிலையுடன் சிங்கள மயமாக்கலை அரசு மேற்கொண்டுவருகின்றது. இன்று இச் செயற் பாடுகள் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின் றது.

யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் செறிவாக இருப்பதால் உடனடி சிங்கள குடியேற்றங்கள் சாத்தியமில்லை என்பதால் பொருளாதார ரீதியாக சிங்கள மயமாக்கும் முயற்சிகள் தீவிரம் பெறுகின்றன.

யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்தி என்ற போர்வையில் அரச தேவைகளுக்காகவும் அபிவிருத்திப் பணிகளுக்காகவுமென வன்னிப் பெருநிலப்பரப்பிலுள்ள காணிகளை சிங்கள முதலீட்டாளர்களுக்கு அரசு தாரைவார்த்துக் கொடுக்கின்றது.

முறிகண்டிப் பிள்ளையார் ஆலயப் புனிதப் பகுதியில் உணவு விடுதிக்கான மாடிக் கட்டம் ஒன்றினை அமைப்பதற்கான காணி சிங்களவர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளது. வன்னிப் பெருநிலப்பரப்பு விடுதலைப் புலிகளின் ஆளுகைக்கு உட்பட்டு இருந்த காலத்தில் அவர்களது பயன்பாட்டில் இருந்ததாக கூறித் தமிழ் மக்களுக்குச் சொந்தமான வீடுகள், காணிகள், விவசாய நிலங்கள் இராணுவத்தினரால் பலாத்காரமாக கையகப்படுத்தப்பட்டுள்ளன.

உயர் பாதுகாப்பு வலயங்கள், சிங்கள இராணுவக் குடியிருப்புக்கள் என்ற போர்வையில் தமிழர்களுடைய வாழ்விடங்கள் தொடர்ந்தும் அரசினால் பறிக்கப்பட்டு வருகின்றது. உதாரணமாக முறி கண்டி, கொக்காவில், அக்கராயன் போன்ற பிரதேசங்களில் பல்லாயிரக்கணக்கான இராணுவக் குடியிருப்புக்களை ஏற்படுத்துவ தனூடாக இலட்சக் கணக்கான சிங்களவர்களை குடியேற்றும் முயற்சிகள் அசுர வேகத்தில் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து கிழக்கு மாகாணம் இலங்கை அரசாங்கத்தினால் கைப்பற்றப்பட்ட பின்னர் அபிவிருத்தி என்ற போர்வையில் பல்லாயிரக்கணக் கான ஏக்கர்களுக்கு மேற்பட்ட காணிகளை கையகப் படுத்தி சிங்கள மயமாக்குவதற்கான நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வன்னியில் மீள் குடியமர்ந்த மக்களுககு இராணுவ நெருக்குவாரங்கள் தொடர்ந்த படியே உள்ளதுடன், அவர்கள் அடிப்படை வருமானம் ஏதுமற்றவர்களாக அவல வாழ்வு வாழ்கின்றனர். மீள்குடியமர்ந்தவர்கள் தமது வாழ்க்கையை அந்த மண்ணில் தொடர்ந்து தக்கவைக்க தேவையான வகையில் குடியிருப்பு வசதிகள், மருத்துவ வசதிகள் , குடிநீர் வசதிகள், போக்குவரத்து வசதிகள், பாடசாலை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப் படவில்லை.

அத்துடன் வெளிமாவட்டத்திலிருந்து கடமைக்குவரும் ஆசிரியர்களுக்கும், அரச உத்தியோகத்தர்களுக்கும் சீரான போக்குவரத்து ஒழுங்குகள், தங்குமிட வசதிகள் இல்லை. ஊடகவியலாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், தமிழ் மக்களின் நலனில் அக்கறையுள்ள அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள் சுதந்திரமாக சகல பகுதிகளுக்கும் சென்றுவர முடியாத நிலை காணப்படுகின்றது.

மக்களின் மீள்குடியமர்வு தொடர்பான விடயங்களில் இராணுவத்தினரின் அதிகரித்த தலையீடு காணப்படுவதுடன் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்படாமல் கடுமையான இராணுவ நிர்வாகம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

உலக நாடுகளிடமிருந்து கோடிக்கணக்கான உதவிகளை பெற்றுக் கொண்டுள்ள போதும் மனிதர்கள் வாழமுடியாத மோசமான வாழ் நிலையை வன்னியில் மீள்குடியமர்ந்துள்ள தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியுள்ள அரசு மக்களை அச்சுறுத்தும் நோக்கிலேயே வன்னிப் பெருநிலப்பரப்பிலுள்ள மக்கள் வாழ் விடங்களிலும், விவசாய நிலங்களிலும், பொது இடங்களிலும் இராணுவ முகாம்களை அமைத்து அதிகள வான இராணுவத்தினரை நிலைகொள்ள வைத்துள்ளது.

இச் செயற்பாடுகள் மூலம் அவர்களை மீண்டும் மறைமுகமாக தாமாகவே வெளியேற வைப்பதும் அவ்வாறு மீள் குடியேறாதவாறு தமிழர்களைத் தடுத்து அவர்களது வாழ்விடங்களில் சிங்களக் குடியிருப்புக்களையும், சிங்கள மயமாக்கும் பொருளாதார வலயங்களையும் உருவாக்குவதுமே அரசின் உள்நோக்கமாகும்.

இந்நோக்கங்களை மூடி மறைத்து, சர்வதேச சமூகத்திடம் நிதி உதவி பெறுவதற்காகவே அரச அமைச்சர்களும், அதிகாரிகளும் மாறி மாறி வன்னிக்கு படையெடுத்த வண்ணம் உள்ளனர்.

இந்த ஆபத்தான நிலையை எமது மக்கள் சரியான முறையில் புரிந்துகொள்ள வேண்டும். தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் நிலப்பறிப்பையும், சிங்கள மயமாக்கலையும் தடுப்பதற்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவு தேவையாக உள்ளது.

இந்த ஆதரவை திரட்டுவதற்கு தாயகத்திலுள்ள மக்களும் புலம் பெயர்ந்த தமிழ் மக்களும், தமிழகத்திலுள்ள தமிழ் உறவுகளும் விழிப்புணர்வுடன் ஒற்றுமையாகச் செயற்பட முன்வருமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

# இருபதாம் நூற்றாண்டு இலங்கை கல்வியில் அரசியல் அழுத்தங்கள்

## இலங்கையின் கல்வி வளர்ச்சிப் போக்குகள்

மேற்கூறப்பட்ட அட்டவணை மூலமாக மாகாண ரீதியில் 1921ஆம் ஆண்டு எழுத்தறிவு நிலையை விட 1946 ஆம் ஆண்டு எழுத்தறிவு நிலை கூடுதலாக காணப்பட்டது.

1946ஆம் ஆண்டுக்கு முன்னர் நகரப் பகுதிகளில் வாழ்ந்த சிறு தொகையினரே கல்வியில் ஆர்வம் காட்டி வந்தனர். பின்னர் சிறப்புக்குழுவினரின் சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்பட்டதன் விளைவாக நகரப் பகுதிகளில் மட்டுமன்றி கிராமப் பகுதிகளிலும் வாழ்ந்த பெருந்தொகை மக்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்ததுடன் தமது தாய்மொழியை எழுத,வாசிக்க வேண்டிய அறிவை குறிக்கும் எழுத்தறிவு நிலை சிறப்பாகக் காணப்பட்டது.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்பாக கல்வித்துறையிலே ஏற்பட்ட முக்கிய அபிவிருத்தி அரசாங்கத்தின் கட்டுப்பாடு படிப்படியாக அதிகரிக்கப்பட்டமையாகும். தீவில் கல்வித்துறை சார்ந்த எல்லா அபிவிருத்தி அம்சங்களிலும் கல்வி அமைச்சின் அதிகாரமும் செல்வாக்கும் வலுப்படுத்தப்பட்டது.

1931ஆம் ஆண்டில் 4 ஆயிரத்து 119 பாடசாலைகளில் ஆயிரத்து 498 பாடசாலைகளும் 21 ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிகளில் இரண்டு மட்டுமே அரசினால் நேரடியாக நடத்தப்பட்டன.

1947இல் 4ஆயிரத்து 980 பாடசாலைகளில் 2ஆயிரத்து 880 பாடசாலைகளும் அநேகமான ஆசிரிய பயிற்சிக்கல்லூரிகளும் அரசினால் நடத்தப்பட்டன.

1951இன் 5ஆம் இலக்க கல்விச் சட்டப்படி தீவில் உள்ள எல்லாப் பாடசாலைகளும் கல்வி அமைச்சின் அதிகார வரம்பிற்குட்படுத்தப்பட்டன. சுதந்திரம் அடைந்த பின்பாக இலங் கையின் அரசியல் துறையிலே ஏற்பட்ட மாற்றங்கள் கல்விக் கொள்கையில் பெருமளவில் பாதிப்பை ஏற்படுத்தின.

பிரித்தானியரின் ஆட்சிக்காலப்பகுதியில் காணப்பட்ட கல்வி மாற்றங்களின் தன்மைகளில் இருந்து இம்மாற்றங்கள் வேறுபட்டனவாகவும் அர சியல் வளர்ச்சிப்போக்கினை பாதித்த செயற்பாடுகள் கல்விக்கொள்கையிலும் பிரதிப்பலிப்பை ஏற்படுத்தலாயின.

கல்விக்கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் கல்விக்குரிய வசதிகளைப் பெருக்கிய தோடு அரசின் கல்விக்கான செலவை அதிகரிப்பதாகவும் அமைந்தன. இலவசக் கல்வி அழிக்கப்பட்டு 20 ஆண்டுக்குப் பின் அதாவது 1965ஆம் ஆண்டில் பாடசாலைகள் 9ஆயிரத்து 481ஆக அதிகரித்தன. இவற்றுள் 8ஆயி ரத்து 289 பாடசாலைகள் அரசின் நேரடி நிர்வாகத்திற்கு உட்பட்டிருந்தன.

அரசாங்க பாடசாலைகளில் 6ஆயிரத்து 564 சிங்களப்பாடசாலைகளும் ஆயிரத்து 274 தமிழ்ப்பாடசாலைகளும் 451 முஸ்லிம் பாடசாலைகளும் அடங்கியிருந்தன. எல்லாப் பாடசாலைகளிலும் மொத்தமாக 24 இலட்சம் மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.1965ஆம் ஆண்டில் காணப்பட்ட சனத்தொகை ஒரு கோடியே 13 இலட்சம் ஆகும். மொத்த சனத்தொகையில் 21 வீதமானோர் கல்வியைக் கற்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும் .

1943ஆம் ஆண்டின் சனத்தொகையில் மாணவர் தொகை 13 வீதமாக காணப்பட்டது. எனவே 1965ஆம் ஆண்டில் 21 வீதமாக அதிகரிக்கப்பட்டமைக்கு கல்வி வசதிகளும் வாய்ப்புக்களும் அளிக்கப்பட்டமையே காரணம் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. உயர் கல்வியைப் பொறுத்த வரையில் 1946ஆம் ஆண்டில் ஆயிரத்து 302 மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் கல்வியைக் கற்றனர்.

ஆனால் 1965ஆம் ஆண்டில் 10 ஆயிரத்து 723 மாணவர்கள் கல்வியைப் பயின்றனர். இவ்வாறாக அதிகரிப்பு ஏற்படக் காரணம் கல்விக்கொள்கையில் அரசினால் ஏற்படுத்தப்பட்ட அழுத்தங்களே செல்வாக்கைச் செலுத்தியுள்ளன எனலாம்.

காலப்போக்கில் நாட்டில் ஏற்பட்ட சமூக, பொருளாதார மாற்றங்கள் கல்விக் கொள்கையிலும் சீர்திருத்தங்களுக்கான தேவை யை ஏற்படுத்தின. பொதுவாக கல்விச் சீர்திருத்தங்கள் பல்வேறு இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு முன்மொழியப்பட்டன.

அந்த வகையிலே இலங்கை சுதந்திரம் அடைந்த பின் 1950ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட கல்விவெள்ளை அறிக்கையின் மூலம் பல கல்விச் சீர்திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன.

1. 5-14 வயது வரை கல்வியைக் கட்டாயப்படுத்தலும், பிள்ளைகளை பாடசாலைக்குத் செல்ல வற்புறுத்தலும் கொண்டு வரப்பட்டது.

2. 1947ஆம் இலக்க 26ஆவது சட்டத்தில் 7ஆம் பிரிவில் அரச உதவி வழங்கப்படும் பாடசாலைகளுக்கு, வழங்கப்படும் உதவிப் பாடசாலை நிர்வகிப்பவரின் சமயத்தைச் சேர்ந்த பெற்றோர்களின் பிள்ளைகள் எண்ணிக்கைக்கு ஏற்ப தீர்மானிக்கப்படவேண்டும் என்பது நீக்கப்பட்டு உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை நிறுவுவதற்கு இருந்த தடை நீக்கப்பட்டது.

இக்காரணத்தினால் மிஷனெரி சமயக் குழுக்களுக்கு தத்தமது சமயப் பாடசாலைகளை விரிவுபடுத்தவும் அவைகளுக்கு பௌத்த இந்து சமயத்தைச் சேர்ந்த பெற்றோர்களின் குழந்தைகளைச் சேர்த்து அதன் ஊடாக சமயத்தைப் பரப்புவதற்கும் வழி பிறந்தது.

3. ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் ஆசிரியர் கலாசாலைகளின் தரத்தை உயர்த்துதல்

4. இலவசக் கல்வியுடன் தொடர்பில்லாத தனியார் பாடசாலைகளை ஒரு பதிவாளரின் கீழ் நிர்வகித்தல்

5.சகல தனியார் பாடசாலைகளையும் பதிவு செய்தல்.

6.வெளிநாடுகளுக்கும் ,இலங்கைக்கும் ஆசிரியர்களைப் பரிமாறிக்கொள்ளும் முறையில் கவனம் செலுத்துதல் .

7. ஆங்கில சுயமொழிப் பாடசாலைகளுக்கு உதவி வழங்கும் நிபந்தனைகளை பரிசீலித்துப் பார்த்தல்.

அத்துடன் இக்கல்வி வெள்ளை அறிக்கையின் மூலமே அனைத்துப் பாடசாலை சிறார்களுக்கும், நண்பகல் உணவு நிகழ்ச்சித்திட்டம் விரிவாக்கப்பட்டது. மேலும் 1951 ஆம் ஆண்டில் கல்விச் சேவையை விஸ்தரிக்கும் நோக்குடன் வானொலியில் கல்விச் சேவை் ஒலிபரப்பு ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இவ்வாறாக ஆணைக்குழுக்களின் சிபாரிசுகளின் விளைவாக கல்விக் கொள்கையில் குறிப்பிடத்தக்க அளவு மாற்றங்கள் ஏற்பட்டன. இடைநிலைக்கல்வியின் இறுதி வரை தாய்மொழியில் கல்வி வழங்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

பாடசாலைகளில் மதியபோசனம் மீண்டும் 1956ஆம் ஆண்டு ஒக்டோபர் முதலாம் திகதி தொடக்கம் வழங்கப்பட்டமையினால் பாடசாலைகளில் மாணவர் வரவு அதிகரித்தது. அத்தோடு 8ஆம் வகுப்பில் விஞ்ஞான புலமைப்பரிசில் திட்டம் ஒன்றை ஆரம்பித்து திறமையான மாணவர்களை தெரிவு செய்து விஞ்ஞானம் கற்பதற்கு சிறந்த கல்லூரிகளில் அனுமதித்தமை மிகவும் முக்கியமான தொன்றாகும்.

முன்னர் சிரேஷ்ட பாடசாலைகள் என அழைக்கப்பட்ட சகல மகாவித்தியாலயங்களிலும் மாணவர்களின் நன்மை கருதி விஞ் ஞானக்கூடங்கள் நிறுவப்பட்டன. 1958ஆம் ஆண்டில் சிங்களமொழி அரச கருமமொழியாக்கப்பட்டது.

8

இக்காரணத்தால் தாய் மொழியான சிங்களத்தைக் கற்பவர்களுக்கு அரச நிறுவனங்களிலும், திணைக்களங்களிலும் பல்வேறு தொழிலுக்கான வசதி வாய்ப்புகள் அதிகரித்தன. அத்துடன் உயர் கல்வியை தாய் மொழியிலே பெற்றுக் கொள்ள விரும்பிய மாணவர்களின் எண்ணிக்கையும் விரைவாக அதிகரித்தது. பொதுப் போதனா திணைக்க ளம் நிறுவப்பட்ட காலம் தொடக்கம் அரசு சமய பாடசாலைகளை தொடர்ந்து உதவி அளித்து வந்ததுடன் அரசும் பாடசாலைக ளையும் ஸ்தா பித்தது.

19ஆம் நூற்றாண்டில் இறுதிக் காலப்பகுதியில் கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள் ஆகிய பாடசாலைகளை நிறுவுவதில் தமக்குள் ஒருவரோடு ஒருவர் போட்டியிட்டுக்கொண்டிருந்தனர். அதன் காரணமாக சமயம் சார்ந்த பாடசாலைகளில் எண்ணிக்கையும் பெருகியது. இப்பாடசாலைகள் அளித்த கல்வி முறையிலும் வேறுபாடு காணப்பட்டது.

1930 ஆண்டைத் தொடர்ந்து வந்த 10

**நாகேஸ்வரி விஜயகாந்தன்**

ஆண்டுகளில் இறுதிப்பகுதியில் பொதுநல அரசில் வாழும் எல்லா மக்களுக்கும் கல்வியில் சம வாய்ப்புக்கள் அளிக்கப்படவில்லை என சமய நிறுவனங்கள் , ஆசிரிய சங்கங்கள், பத்திரிகைகள் என்பவற்றினால் கண்டனங்கள் எழுப்பப்பட்டன.

மறுபுறத்தில் கல்வி மீதான செலவு அதிகரித்தமையைக்கண்டு இத்திடீர் ஏற்றத்தை கட்டுப்படுத்த அரசாங்கம் விளைந்தது. இதன் விளைவாக நடைமுறையில் இருந்த பாடசாலை முறையை பற்றி அறிக்கை சமர்ப்பிக்கவும் அதன் முன்னேற்றம் கருதி விதப்புரைகள் செய்யவும் ஒரு குழு நியமிக்கப்பட்டது.


எனவே கட்டணம் அறவிடும் ஆங்கிலம் அல்லது இரு மொழி பாடசாலை யும் கட்டணம் அறவிடாத சிங்களம் அல்லது தமிழ்மொழிப் பாடசாலையும் என சமுதாயத்தில் படித்தவர்களிடையே பிளவை ஏற்படுத்திய இருவகை பாடசாலைகள் இருந்தமை அன்று நிலவி வந்த பாடசாலை முறைமையிலே ஒரு தோல்வி என்பதை குழுவின் அறிக்கை சுட்டிக்காட்டியது. (தொடரும்)

# அரசாங்கத்திடமிருந்து மக்கள் எதனையும் எதிர்பார்க்க முடியாது

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திடம் இருந்து மக்கள் எத னையும் எதிர்பார்க்க முடியாது என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரி வித்துள்ளார்.



அரசாங்கத்தினால் வழங்கப்பட்டவாக் குறுதிகள் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜாஎலவில் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். மக்களின் உரிமைகளையும் சலுகைகளையும் வென்றெடுப்பதற்காக ஐக்கிய தேசியக்கட்சி தொடர்ச்சியாக போராடும் என அவர் தெரி வித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னர் வழங்கப்படுவதாக வாக்குறுதி அளிக்கப்பட்ட எந்தவொரு சலுகையும் இதுவரையில் வழங்கப்படவில்லை என குறிப்பிட்ட அவர் அரசாங்கம் ஏன் தொடர்ச் சியாக மக்களை ஏமாற்றி வருகின்றது என கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்தியாவசிய பொருட்களுக்கானவிலை களை குறைப்பதாக அரசாங்கம் தெரிவித்த போதிலும் பொருட்களுக்கான விலை தொடர்ச்சியாக உயர்வடைந்து செல்வதாக குறிப்பிட்டுள்ளதுடன் நாட்டின் கல்வித்துறை மற்றும் சுகாதாரத்துறையும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித்தலைவர் கருஜயசூரிய,பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, ஜயலத் ஜெய வர்தன ஆகியோர் இந்த எதிர்ப்பு போராட்டத் தில் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. (6-2)

# அதிக சக்திவாய்ந்த தொலைத்தொடர்பு கருவிகளை மறைத்துக்கொண்டு சென்றவருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

அதிசக்தி வாய்ந்த தொலைத் தொடர்புக் கருவிகள் மற்றும் திசையை அறியும் கருவிகளை விடுதலைப்புலிகளுக்கு வழங்குவதற்காக அவற்றை தொலைக்காட்சிப்பெட்டி ஒன்றுக்குள் மறைத்து கொண்டு சென்ற சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் தம்மிகா இலங்கா திலக்க நேற்று முன்தினம் உத்தர விட்டுள்ளார்.

இரகசியப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இராஜேந்திரன் விஜேகுமார் என்ற சந்தேக நபரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சட்டவிரோதமாக அதி நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய கருவிகள் வடபகுதிக்கு கொண்டு செல்லப்பட்டமை தொடர்பாக விசாரணை நடத்துமாறு பொலிஸ்மா அதிபர் பிறப்பித்த உத்தரவுகளுக்கமைய நடத்தப்பட்ட விசாரணைகளுக்கமையவே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட அதிநவீன கருவிகள் அரசாங்க பகுப்பாய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பான அறிக்கைகள் இதுவரை கிடைக்கவில்லை எனவும் இரகசியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முன் வைக்கப்பட்ட வாதங்களை கவனத்தில் கொண்ட மேலதிக நீதவான் இந்த சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு விசாரணைகளின் அறிக்கையை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டார். (6-2)

# நல்லூர் யமுனாவீதிப் பாலம் யாழ்.மாநகர சபையால் புனரமைப்பு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம்,நல்லூர் யமுனா வீதிப் பாலத்தின் புனரமைப்பு வேலைகள் யாழ். மாநகர சபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மாநகர சபை முதல்வரின் செயலாளர் பு.பற்குணராசாவின் மேற்பார்வையில் யாழ். மாநகர சபை பணியாளர்களால் மேற்படி பால வேலைகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-51)

# கவிதைக் கலசம்

## இமயம் தொட...

உன்னைக் கொல்லவரும்
எதிரியாயினும்
பொறுமையுடன்
புன்னகையைப் பரிசளித்துப்பார்
தோழமையுடன் விடைபெறுவான்
பொறுமை எனும் ஆயுதம்
உன்னிடம் இருந்தால்தான்
நீ மனிதன்.

மாவை. நா.கஜேந்திரா

## சங்குநாதம்

### கைக்கூ....

**மௌனம்**
அர்த்தங்களை
அறிந்திட இயலாத
ஊரிய மொழி



**கண்ணீர்**
இரத்தத்தை விடக்
கனமான
தூய திரவம்

**காதல்**
தெய்வீகக் கோப்பை
பருகிடும்
சைத்தானின் போதை

ஸ்ரீ.கேதிகா
யா/தும்பளை
சிவப்பிரகாச ம.வி

### ஏக்கம்



நான் பிறந்த போது
சிகப்பாய் இல்லையே
என்று என்சுற்றம்
ஏங்கியது!
நான் வளர்ந்தபோது
உடல் பெருக்கவில்லையே
என்று என் சுற்றம்
ஏங்கியது!
படிக்கும் போதும்
நன்றாகப் படிக்கவில்லையே
என்றும் என் சுற்றம்
ஏங்கியது!
வறுமையில் வாடியபோது
வேலையில்லையே என்றும்
என் சுற்றம் ஏங்கியது!
இன்று யாவும் பெற்று
உயர்ந்த போதிலும்
என்சுற்றம் என்னைப்பார்த்து
ஏங்குகிறதே.......!

பொலிகையூர்
பொன்.சுகந்தன்

### ஆண்டவனே! நீ இருந்தால்

விதி வழிதான் வாழ்க்கை என்றால்
இறைவா நீ இங்கேதற்கு
ஊரெல்லாம் பல கோவில்
அவையெல்லாம் உனக்கேதற்கு
பூஜைகளும் விழாக்களும்
புண்ணிய நற்கருமங்களும்
புவியதனில் செய்வதிலே
அர்த்தமென்ன நாம் கண்டோம்
கண்ணகிபோல் வாழும் பெண்கள்
கண்ணீரில் மிதக்கின்றனர்.
மாதவி போல் வாழ்பவர்கள்
மனம் விட்டு சிரிக்கிறார்கள்
நேர்வழியில் வாழ்பவர்கள்
துன்பத்தில் ஆழ்கின்றார்.
குறுக்கு வழிப் பணம் தேடும் -அவர்
-கும்மாளம் அடிக்கின்றார்.
ஆண்டவனே நீ இருந்தால்
அகிலமிதில் வந்துவிடு
வாழ்வாங்கு வாழ்பவர்கள்
வாழ வழி செய்துவிடு.

குப்பிளான் ஊரவன்

### சொற்பனம்

தூங்கும்போது – என்
தூக்கத்தின் நிம்மதியை கெடுத்து
உள்ளத்தில் விரக்தியை ஏற்படுத்தி – என்
உணர்வுகளை உறங்கவைத்து
உறக்கத்தில் திகிலை ஏற்படுத்தி – என்
இதய அறைகளை மெல்ல திறந்து கொண்டு –என்
அருகில் வருகிறது சொற்பனம்
இடிபோல் என்னுள் வந்துபாயும் சொற்பனங்கள்– என்
இதயத்தை ஒரு கணம் அதிரவைத்து
மனதை ஒருமுறை சீண்டிப்பார்த்து – என்னோடு
மல்லுக்கட்ட வருகிறது சொற்பனம்
துவண்டுபோன என் மனதை – மீண்டும்
துருவித் துருவி வம்புக்கிழுத்து
சோகக் கதைகள் மனதில் புகுத்தி – என்னை
சோகக் கடலில் மூழ்கடித்து
கண்களிலிருந்து கண்ணீர் ஆற்றை பெருகவைத்து
அதிலிருந்து தான், இன்பத்தை நுகர்ந்து – என்
வாழ்க்கையோடு ஒரு முறை விளையாடி
வேடிக்கை பார்க்கிறது சொற்பனம்

ந.சதீஸ்
கந்தர்மடம்

### சுதந்திரம்

இனங்காணப்பட்ட
என்
உணர்வுகளுக்குள்
இன்னும் –நீ
உறங்கிக் கொண்டிருக்கின்றாய்..
கணங் கொல்லப்பட்ட
இரவுகளால்...
கணமும் –நீ...
காவு கொள்ளப்படுகின்றாய்...

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

## மௌனத்தின் தேடல் – 33



### வாழ்க்கை

இறைவன் படைத்த
உலகினிலே
மனிதன் வாழுகின்றான்
மனிதன் வடித்த
சிலைகளிலே
இறைவன் வாழுகின்றான்.

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

### மோதகப் பிரியனே

மோதகப் பிரியனே விநாயகா?
நீயே இப்படி உறங்கினால்
எம்மை அசுரர்களிடமிருந்து
யார் தான் காப்பது.

பொ.இளவரசி
பருத்தித்துறை

### பக்தி வைராக்கியம்

மண்ணினில் நீமிட்ட
மணற் சிற்பக் கோலம்
மண்ணோடு மண்ணாகிப்
போனாலும்
மனதினில் நீமிட்ட
பக்தியின் கோலம்
உன்னைவிட்டு
மறையாது என்றும்.

இந்திரா
குப்பிளான்

இறைவா அவல் கடலை சுண்டல்
சாப்பிட்ட உனக்கு
அவலப்படும் மக்களின் நிலையறியா
வந்திங்கு உல்லாச புரியில்
நீயுறங்கும் நிலை கண்டு
தமிழினமே தலை குனிந்து
நின்றதுவோ இப்பாரினிலே

து.ஆதவன்
சிறுப்பிட்டி மேற்கு

### இறுதி வேண்டுதல்

கணபதியே! காணுமப்பா
உன் சயனம்
பால் கொண்டு உன்னை
அபிஷேகம் செய்தும்
பயன் ஏதும் இல்லை என்று
அடைபட்ட அந்நாளில்
எம் கண்ணீரோடு சேர்த்து
உதிரத்தால் அல்லவா
அன்று அபிஷேகம் செய்தோம்
இருந்தும் என்ன பயன்
இன்றும் இழிவுடன் தான்
இருக்கிறது எம் இனம்
இனியாவது உன் சயனத்தை விட்டு
சங்காரம் எடு
எம் இனத்தை காப்பாற்ற-?

உல. ரமேஸ்குமார்
மருதங்கேணி வடக்கு

### தேடல்

கடற் கரை காற்றினிலே
சித்தி விநாயகனே
நித்தமும் நித்திரையோ
உன் அருள் வேண்டி
காத்திருக்கும் என்னையும்
பாராயோ

சி.தர்ஷனா
கைதடி வடக்கு

### காட்சி

கடற்கரையோரம் கரையும்
கலாசாரத்தைக் காக்க
கணபதியே வந்தாயோ?
ஆற்றங்கரை அலுத்துவிட
கடற்கரைக் காட்சிகாண
கணபதியே வந்தாயோ

பற்றூரான்
பருத்தித்துறை

### தழைக்கும் தமிழ்

தாய் தந்தை
உலகமடா உனக்கு
உணர்வற்றுக் கிடக்கின்றாய்
ஏனடா! இன்று
தமிழன்! தலை நிமிர்ந்து
வாழ உன் உதவி
இன்று தேவையடா – அது
என்றும் தேவையடா

வீ.கயேந்திரன்
நெல்லியடி

### அகக்கோயில்

மண் மீது கட்டிய மணல் சிற்பம்
என்றோ ஓர் நாள்
மழையோ... அலையோ...
வந்து காவிச் செல்லலாம்
ஏன்...?சிலவேளை
மனித விஷமிகளால்
கூடச் சிதைக்கப்படலாம்!
ஆனால் – நீ
அகமெனும் கோவிலிலே
ஆண்டவனுக்காகக் கட்டிய
அழகிய அன்பு மாளிகையை
இயற்கையாலென்ன–அந்த
இறைவனே நினைத்தால்கூட
எளிதிலே அழிக்க முடியாது.

குறிஞ்சிக்கவி
குப்பிளான்

### மாற்றம்

கலாசாரப் பெண்களை
அரசமரத்தடியில்
இருந்து பார்த்த காலம்
மாறிப்போய்
கடற்கரைக்கு வரும் கவர்ச்சிப்
பெண்களை கண்டு மகிழவா
இங்கே வந்தீர் உமை மகனே

அ.பிரசன்னா

சங்குநாதம்

## மௌனத்தின் தேடல்- 34



அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை


ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 27.08.2010 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# தெல்லியூரில் வீற்றிருந்து அடியார்க்கு அருளாட்சி புரியும் துர்க்கையம்மன்



துர்க்கை அம்பாள் கண்கண்ட தெய்வமாக இன்று காட்சி தருகின்றாள். மாவிட்டபுரம், கீரிமலை போன்ற பழமை வாய்ந்த புண்ணியத் திருதலங்களுடன் பூர்வீக தொடர்பு கொண்டது தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம். பத்து ஆண்டுகள் காசியில் பெருந்தவம் பூண்டு சக்தி உபாசகராக இருந்து துர்க்கை வழிபாடு செய்த தவஞானியால் ஸ்தாபிக்கப்பட்டது.

துர்க்கை அம்பாள் சங்கு சக்கரம் ஏந்திய திருக்கரங்களோடு அகில உலகத்தையும் அருளாட்சி புரியும் அற்புதத் தெய்வம். துர்க்கை அம்பாளுக்கு முகபத்திர வேலைப்பாடுகளோடு அமைந்த திராவிட மரபுத் தேர் 1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்தச் சித்திரத்தேரை உருவாக்கிய பெருமை சிற்பச் சக்கரவர்த்தி, கலாகேசரி ஆ.தம்பித்துரை அவர்களையே சாரும். ஈழ நாட்டிலே உள்ள பல கோயில்களின்பெருந்தேர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர்.

ஒருகோயிலில் நடைபெறும் தேர்த் திருவிழா என்பது சமுதாய மேம்பாட்டுவிழா. தேரின் தத்துவம் கீழ் ஏழு உலகம், மேல் ஏழு உலகம் அண்டத்தோடு ஒப்பிட்டு விசாரம் செய்யப்படுகின்றது. தேரில் அமைந்துள்ள கலையம்சங்கள்

## இன்று தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய தேர்த்திருவிழா

யாவும் சைவ மக்களின் வாழ்வோடு கலந்தவையாகும். இறைவன் சூரிய சந்திரர்களைச் சில்லாகவும் சரம், அசரம் ஆகியவற்றை உறுப்புக்களாகவும் நான்கு வேதங்கள் நான்கு குதிரைகளாகவும் மேருவை வில்லாகவும் விஷ்ணுவை அம்பாகவும், அக்கினியை அம்பின் கூராகவும், பிரமதேவரை சாரதியாகவும், திரிபுர சங்காரத்தின் உண்மைப் பொருளை உணர்த்தி ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் அழித்தல் இரதோற்சவத்தின் சிறப்பாகும்.

வானுயர் இராஜகோபுரத்துடன் காட்சி தரும் துர்க்காதேவி திருக்கோயில்,

*"கோபுரஞ்சூழ் மணிமாடக் கோயில் கண்டேன்*
*குனித்த பல அலங்கார வளைவு கண்டேன்*
*தேவர்களும் உவந்தேத்தும் ஸ்தூபி கண்டேன்*
*திருமுறைகள் வேதமொடு ஒலிக்கக் கண்டேன்*
*ஏவல்புரி ஏந்திழையார் எழிலும் கண்டேன்*
*இளைஞர் பணி சரியை வழி இயற்றக் கண்டேன்*
*பாவலர்கள் பண்ணாரப் பாடக் கண்டேன்*
*பராபரையின் சந்நிதியில் யாவும் கண்டேன்"*

என்பது தேவர்கள் உலகில் வாழும் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரின் அனுபவமாகும். இன்று துர்க்காதேவி திருக்கோவிலின் தேர்விழாவிலே துர்க்கை அம்பாளைத் தரிசிக்க வருகை தரும் பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்கும் திருவருள் புரிய வேண்டுதல் செய்வோமாக.

*கா.சிவபாலன்*

# ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

வியாபாரிமூலை இன்பர் சிட்டி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மஹோற்சவத்தையொட்டி நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வில் இன்று மாலை 7 மணிக்கு "மும்மூர்த்திகளுக்கும் அதிபதியான பெருமான்" என்னும் விடயம் பற்றி சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியர் சைவப்புலவர் சி.கமலநாதன் சொற்பொழிவாற்றவுள்ளார். (6-35)

❖ ❖ ❖

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வடக்கு அருள்மிகு ஆதிசிவ வீரபத்திர சுவாமி ஆலய அலங்கார உற்சவத்தையொட்டி நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வில் இன்று "அப்பாலும் அடி சார்ந்தார்" எனும் விடயம் பற்றி ஆசிரியர் ச. மார்க்கண்டு சொற்பொழிவாற்றவுள்ளார். (6-29)

# மஹோற்சவம்

யாழ். வண்ணை பிறவுண் வீதி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய மஹோற்சவம் கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ்வுற்சவத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறமும் 28ஆம் திகதி சனிக்கிழமை காலை தேர்த்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (6-4)

★ ★ ★

வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதன் பெருமாள் ஆலய மஹோற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா நடைபெறும்.

தினமும் காலை உற்சவங்கள் 9 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு நிறைவுறும். மாலைத்திருவிழாக்கள் மாலை 3 மணிக்கு ஆரம்பமாகி 6 மணிக்கு நிறை வெய்தும்.

இதில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி புதன்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்த உற்சவமும் அதிகாலை 5 மணிக்கு பூசையுடன் ஆரம்பமாகும் என ஆலய பரிபாலன சபை யும் விழா ஏற்பாட்டாளர்களும் அறிவித்துள்ளனர். (6-2)

# பயிற்சிப்பட்டறை

முன்பள்ளி மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் வடக்கு மாகாண சபையின் கீழ் உள்ள கல்வி வலயங்களின் இருந்து முன்பள்ளி உதவிக்கல்வி பணிப்பாளர் ஒருவருக்கும் ஆரம்பக் கல்வி பயிற்றப்பட்ட ஆசிரியர் ஒருவருக்குமான நான்கு நாட்கள் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 28 ,29 ,30, 31ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள வடமாகாண கல்வி அமைச்சின் முகாமைத்துவ மண்டபத்தில் இப்பயிற்சி நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாகாண கல்விப்பணிப்பாள வி.இராசையா அறிவித்துள்ளார். (6-19)

# வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து 29 கையடக்கத்தொலைபேசிகள் மீட்பு

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையின் பெண்கள் பிரிவிலிருந்து 29 கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறைச்சாலையின் குளியலறையிலிருந்தே குறித்த 29 கையடக்கத்தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலை அதிகாரிகள் நடத்திய திடீர் சோதனையின் போது இந்த கையடக்கத்தொலைபேசிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்படுகிறது.

குளியலறையின் ஓர் மூலையின் மிகவும் நுட்பமான முறையில் பொலித்தீன் பைக்குள் இந்த கையடக்கத் தொலைபேசிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தாகத் தெரிவிக்கப்படுகிறது. அண்மைக்காலமாக சிறைச்சாலைகளிலிருந்து பெருமளவிலான கையடக்கத்தொலைபேசிகள் மீட்கப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-2)


# சிரஞ்சீவி அன்னதான மண்டபமும் அறநெறிப் பாடசாலை திறப்புவிழாவும்



நிகழும் மங்களகரமான விகிர்தி வருஷம் ஆவணித் திங்கள் 7 ஆம்நாள் (23.08.2010) திங்கட்கிழமை திருவோண நட்சத்திரமும் அமிர்தசித்த யோகமும் கூடிய நண்பகல் 12.05 மணிக்கு தெய்வேந்திர முகூர்த்தமும் உடைய சுபவேளையில் திறப்பு விழா நடாத்துவதற்கு ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயப் பெருமானின் திருவருள் கூடியுள்ளது.

எனவே இத்திறப்பு விழாவினிலே அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இ.சுந்தரேஸ்வரக் குருக்கள்
ஆலய ஆதீனகர்த்தா.

(சி/906)


# பதவியேற்பு விழா

(சுன்னாகம்)

சுன்னாகம் றோட்டறக்ட் கழகத்தின் 15 ஆவது தலைவர் பதவியேற்பு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியிலுள்ள வாழ்வகத்தில் நடைபெறவுள்ளது. (6)


නෝත්සී ලිමටඩ
நோத்சீ லிமிடெட்
NORTHSEA LTD

# விற்பனைக்கு

கண்ணாடி இழை மீன்பிடிப் படகுகள் நியாய விலையில் விற்பனைக்கு உண்டு.

18 1/2' சுப்பர் போட்
17 1/2' சீநோர் படகு என்பன

அத்துடன் கண்ணாடி இழைப் படகுகள் திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

நோத்சீ லிமிடெட்
மீன்பிடி வலைத்தொழிற்சாலை,
குருநகர் , யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 021 2222733

மேலதிக விபரங்களுக்கு:- காரியாலய நேரத்தில் தொடர்பு கொள்ளவும் .மு.ப.8.00 -பி.ப.4.00

(2221)











இணுவையூர் ரசிகப்பிரியா சபாவின் இரண்டாவது ஆண்டு இசைவிழா அண்மையில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் கலையரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், யாழ். பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் கலாநிதி என்.வி.எம்.நவரத்தினம் மங்கள விளக்கேற்றுவதையும் சங்கீதவித்துவான் எ.கே. கருணாகரனுக்கு பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் அருகில் இணுவையூர் சபாமன்றத் தலைவர் வி.கே.குகானந்தன் நிற்பதையும் தமிழகத்தில் இருந்து வருகை தந்த சங்கீத ரத்னா நெடுமறம் சி.முத்தழகு இசைக் கச்சேரி நிகழ்த் துவதையும் படங்களில் காணலாம்.

# காதல் சொல்ல வந்தேன்

திரை விமர்சனம்



கல்லூரியில் முதலாமாண்டு படிக்கும் பாலாஜிக்கு, மூன்றாமாண்டு படிக்கும் மேக்னா மீது காதல். காதலுக்கு இருக்கும் ஒரே வில்லன் வயது. மேக்னா, பாலாஜியை தம்பியாக நினைத்துப்பழக, பாலாஜிக்கு வெறித்தனமான காதல் . பாலாஜியின் காதலை ஏற்கவும்முடியாமல் அவனது அன்பை புறக்கணிக்கவும் முடியாமல் தவிக்கிறார் மேக்னா.

இறுதியில் இதற்கான தீர்வு என்ன என்பது தியேட்டர் சீக்ரெட். புதுமுகம் பாலாஜி துறுதுறு வென்றிருக்கிறார். மேக்னா மீது முதல் பார்வையிலேயே காதல் பூத்ததும் ஓடிச்சென்று, முன்பு காதலித்த பெண்ணுக்கு போன் பண்ணி, 'அன்னிக்கு என் காதலை நீ ஏத்துக்கிட்டிருந்தா இப்படி ஒரு சூப்பரான பொண்ணை நான் காதலிச்சிருக்க முடியாது' என்று நன்றி சொல்வதில் ஆரம்பிக்கிறது கலகல கபடி.

மேக்னாவைக் காதலிக்கும் சீக்கிய மாணவனை ரூம்போட்டு தங்கவைத்துவிட்டு மேக்னாவுக்கு பிராக்கெட் போடும் இடங்கள் அனைத்தும் டொப் கீயர் காமெடி. ' நீ ரொம்ப நல்லா வருவடா' என்று வாழ்த்திக்கொண்டே சீக்கிய மாணவன், ஏமாறும்போதும், பில்ட்டப் பேக்ரவுண்ட் மியூசிக்கில் வில்லன் லுக் விடும் மாணவன், கடைசியில் மழலை குரலில் கீச்சிடும்போதும் நோய்விட்டுப்போகும் அளவுக்கு சிரிக்க வைக்கிறார்கள்.

சீக்கிய மாணவனின் தற்கொலை நாடகத்தை தடாலடியாக திசைமாற்றும் பாலாஜியின் கலாட்டா நினைத்து நினைத்து சிரிக்க வைக்கும் . குண்டு நண்பன் சபேஷ் கார்த்திக் அவ்வப்போது காமெடி குண்டுபோட்டு அதிரவைக்கிறார். இப்படியாக ஜாலி எக்ஸ்பிரசாகபோகும் படம் பின்பகுதியில் கதைக்குள் புகுந்து விடுவதால் ஜாலி காலியாகிறது. வயது வித்தியாசம் , அக்கா, தம்பி என்று ஆயிரம் சொன்ன பின்னரும் பாலாஜி, மேக்னா பின்னால் சுற்றுவது ஒரு கட்டத்தில் சலிப்பூட்டுகிறது.

இடியப்ப சிக்கலாகியிருக்கும் காதலுக்கு இயக்குநர் புத்திசாலித்தனமாக ஒரு தீர்வைச் சொல்லப் போகிறார் என்று பார்த்தால் எதிர்பார்த்த முடிவையே கொடுத்து அனுப்பிவைக்கிறார்.

புதுமுகங்களுக்கே உரித்தான, கமரா பயமில்லமாமல் யதார்த்தமாக நடித்திருக்கிறார் பாலாஜி. சின்னப்புள்ளத்தனமான காதலை வெறித்தனமாக உணர்த்தும்சிக்கலான கரக்டரை சிக்கலின்றிச் செய்திருக்கிறார். தன்மீதான வெறுப்பில் ஊருக்குச் சென்றுவிட்ட மேக்னாவை அவர் ஊருக்கே சென்று மன்னிப்புக் கேட்டு அழைத்து வந்துவிட்டு" நீ இல்லாம என்னால இருக்க முடியல . அதான் பொய் சொல்லி கூட்டிட்டு வந்தேன் என்று சொல்வதும்' எல்லோரும் உன்னை காதலிச்சு தொல்லை கொடுப்பாங்கன்னுதான், நான் காதலிக்கிறதா பொய் சொன்னேன்' என்று சொல்லிவிட்டு அடுத்த நொடியிலேயே" ஐ லவ் யூ' சொல்வதுமான சின்ன சின்ன வில்லத்தனத்தில் கவனம் ஈர்க்கிறார்.

மேக்னா சுந்தர் அசப்பில் நயன்தாரா போன்று இருப்பதாக கிளம்பிய வதந்தியை உண்மையாக்குகிறார்.

தோற்றத்தில் மட்டுமல்ல, ஹேர் ஸ்டைல், அனைத்திலும் அவர்சாயல். பாலாஜியுடன் வெள்ளந்தியாக பழகும்போதும், அவர் காதலை ஏற்றுக்கொள்ளமுடியாமலும் அவரது அன்பை தவிர்க்க முடியாமலும் தவிக்கும்போதும் நடிப்பில் ஸ்கோர் பண்ணுகிறார்.

யுவனின் இசையிலும் பாடல்களிலும் இளமை வாசனை. நா. முத்துக்குமாரனின் வரிகளில், " என்ன என்ன ஆகிறேன்..." சுகமான காதல் தாலாட்டு. ராணாவின் ஒளிப்பதிவு காதலை அழகாகச் சொல்கிறது. நட்பா, காதலா என்ற பழகிப்போன பட்டிமன்றமாக இருந்தாலும் வயது வித்தியாசம் என்ற புதிய தலைப்பில் விளையாடியிருக்கிறார் பூபதி பாண்டியன். நடுவராக இருந்து நெற்றிப் பொட்டில் அடித்த மாதிரி தீர்ப்புச் சொல்லாமல் எஸ்கேப் ஆகியிருப்பதுதான் பொருத்தமாக இல்லை.


# அசினைத் தொடர்ந்து ப்ரியாமணியா?

இலங்கையில் நடந்த ரெடி ஷூட்டிங்கில் கலந்துகொண்டதால் அசினுக்கு தென்னிந்திய நடிகர் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்து வரும் நிலையில், சல்மான் கானின் வான்டட் படத்தின் இரண்டாம் பாகத்தில் ப்ரியாமணி நடிக்கிறார் என செய்திகள் வெளியாகியுள்ளன.



போக்கிரி படத்தை சல்மான்கானை வைத்து வான்டட் என்ற பெயரில் இந்தியில் இயக்கினார் பிரபுதேவா. படம் ஹிட். அப்போதே வான்டட் படத்தின் இரண்டாம் பாகம் எடுக்கப்படும் என தயாரிப்பாளர் தரப்பில் கூறப்பட்டது.

இது குறித்து ப்ரியாமணியிடம் கேட்டதற்கு வான்டட் இரண்டாம் பாகத்தில் நடிக்க கேட்டு என்னை இதுவரை யாரும் அணுகவில்லை. அப்படி கேட்டால் உடனடியாக ஒப்புக்கொள்வேன் என்றார். ஏற்கனவே சல்மானின் படங்களை தென்னிந்தியாவில் வெளியிடத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் ப்ரியாமணியின் இந்த பதில் சர்ச்சை எழுந்துள்ளது.




# அஜித்தின் மங்காத்தா லேட்டஸ்ட் தகவல்




அஜித்தின் மங்காத்தா படம் பற்றிய லேட்டஸ்ட் தகவல் வெளியாகியுள்ளது. அஜித் அடுத்து எந்தப் படத்தில் நடிப்பார் என்ற கேள்விக்கு விடை கிடைக்கவே பல மாதங்கள் ஆன நிலையில் வெங்கட்பிரபு இயக்கத்தில் மங்காத்தா படத்தின் பூஜை கடந்த 2ஆம் திகதி நடைபெற்றது. தலயின் அடுத்த படம் மங்காத்தா என்று ரசிகர்கள் கொண்டாடி வரும் நிலையில் மங்காத்தா பற்றி தினம் தினம் புதுப்புது தக வல்கள் வெளியாகி வருகின்றன. பூஜை போட்ட கையோடு விறுவிறு வென டிரைலரை எடுத்து முடித்திருக்கும் டைரக்டர் வெங்கட்பிரபு, அப் படத்தின் டிரைலரை ரசிகர்க ளுக்கு காட்சிப் படுத்தியுள்ளார்.

இந்நிலையில் மங்காத்தாவில் முக்கிய கரக்டரில் தெலுங்கு நடிகர் நாகர்ஜூனா நடிக்கவிருப்பதாக புதிய தகவல் வெளியாகியுள்ளது. இந்த படத்தை தெலுங்கிலும் இயக்கத் திட்டமிட்டிருக்கும் வெங்கட்பிரபு, தெலுங்கில் நாகர்ஜூனாவை ஹீரோவாக்குகிறார். தமிழில் நாகர்ஜூனா நடிக்கும் கரக்டரில் , தெலுங்கில் அஜித் நடிக்கப் போகிறாராம். சமீபத்தில் வெளியான மணிரத்னத்தின் ராவணன் படத்தில் விக்ரம் - அபிஷேக் பச்சன் நடித்ததைப் போல மங்காத்தாவில் அஜித்தும் -நாகர்ஜூனாவும் மாறிமாறி நடிக்கப்போகிறார்கள்.

# பாட்ஷா 2 பராக்... பராக்!

எந்திரன் அலை இன்னும் ஓயவில்லை. அதற்குள், தனது ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சியைத் தருகிறார் ரஜினி.

ஆம், மிக விரைவில் "பாட்ஷா2" படத்துக்காக தீவிரமாக இறங்கத் திட்டமிட்டிருக்கும் அவர், அதற்கான அடிப்படை வேலைகளை ஆரம்பித்துவிட்டார்.

எந்திரன் படம் முழுவதும் முடிவடைந்த நிலையில், ரஜினி அடுத்த படம் நடிக்கப் போகிறாரா அல்லது அரசியலுக்கு வரப் போகிறாரா என்று அவரது ரசிகர்கள் யோசிக்கத் தொடங்குவதற்குள் "பாட்ஷா -2" க்காக களமிறங்கியிருப்பது கவனிக் கத்தக்கது.



சில மாதங்களுக்கு முன்பு ஆர்.எம். வீரப்பன் இல்லத் திருமண விழாவில் கலந்துகொண்ட ரஜினி, "என்னால் பலன் அடைந்தவர் பலர் நஷ்டமடைந்த சிலரில் ஆர்.எம். வீரப்பனும் ஒருவர். பாட்ஷா போன்ற படத்தை ஆர்.எம். வீரப்பனால் மட்டுமே மீண்டும் தயாரிக்க முடியும்... என்று பேசினார். அந்தப் பேச்சுதான் பாட்ஷா 2க்கான அச்சாரமாக இருந்திருக்கிறது. அதைத் தொடர்ந்து, கதை விவாத ங்களும் நடந்திருக்கிறது. எந்திரன் படத்தின் ஒடியோ ரிலீஸ், டப்பிங் வேலைகள் என வேலைகள் இருந்ததால் பாட்ஷா -2 படத்துக் கான கதை விவாதத்தில் ரஜனி கலந்து கொள்ளாமல் இருந்தார்.

இப்போது, எந்திரன் படத்தின் அனைத்தும் வேலைகளும் முடிவடைந்துவிட்டதால் ரஜனி யும் கதை விவாதத்தில் கலந்து கொள்கிறார்.

சில தினங்களுக்கு முன்பு நடந்த கம்பன் விழாவில், ஆர். எம். வீரப்பனுடன் கலந்துகொண்டார் ரஜனி. அப்போதுதான் ரஜனியின் அடுத்த படத்தின் தயாரிப்பாளர் இவரே என்பது தெளிவானது. பாட்ஷா 2வின் இயக்குநர் ஹரி என்பது முடிவாகியிருக்கிறது. இதைத் தீர்மானித்த வரும் ரஜினியே. இதற்கு, ஒகே சொல்லிவிட்டது சத்யா மூவிஸ்.

வழக்கமாக , சத்யா மூவிஸ் படம் என்றால் அப்படத்தின் கதையை நிர்ணயிப்பதும் இறுதி செய்வதும் சத்யா மூவிஸ் கதை இலாகாதான் . பாட்ஷா 2 வை பொறுத்தவரை கதை, திரைக்கதை, வசனம் மற்றும் இயக்கம் எல்லாமே ஹரிதான். சிங்கம் படத்தின் மூலம் ஹரியின் வேகத்தையும் திறமையையும் கண்டுகொண்டதாலேயே அவருக்கு கதை அமைப்பது உள்ளிட்ட அனைத்துப் பொறுப்புக்களையும் வழங்கி இருக்கிறார் ரஜனி.

எந்திரன் வெளியான இரண்டு வாரங்களில் இமயமலைக்கு புறப்படும் ரஜனி, சென்னை திரும்பியதும் மகள் சௌந்தர்யாவின் திருமணம், "சுல்தான் தீவாரியார்" பட க்ளைமாக்ஸ் வேலைகள் உள்ளிட்ட முக்கிய பணிகளை முடித்துவிட்டு, பாட்ஷா 2க்காக கால்ஷீட் கொடுக்க முடிவு செய்துள்ளாராம். ஆனால், அதற்குள் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கிவிட்டது சத்யா மூவிஸ் அலுவலகம்.

# கமல்ஹாசனை வாழ்த்தி ஒரு சினிமா பாடல்



நடிகர் கமல்ஹாசன் திரையுலகில் கால்பதித்து 50 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் அவருக்கு பல்வேறு அமைப் புக்களும் பாராட்டு விழாவை நடத்தி கௌரவித்து வருகின்றன. இந்நிலையில் புதிதாக உருவாகி வரும் சினிமாவில் கமல்ஹாசனை வாழ்த்தி ஒரு பாடலையே உருவாக்கியிருக்கிறார் கள்.

புதுமுகங்கள் நடிக்க, டைரக்டர் சரவணப் பெருமாள் இயக்கும் புதிய படம்" பரமக்குடி 1வது வார்டு' இப்படத்தில் 4 பாடல்கள் இடம் பெறுகின்றன. அதில் ஒரு பாடல் பரமக்குடியின் வரலாற்றை பிரதிபலிக்கும் விதமாகவும், கமல்ஹாசனை வாழ்த்தும் வகையிலும் அமைந்துள்ளது.

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
~ ஒளவையார்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# விலைக்கட்டுப்பாடு தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்

# அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அண்மைக் காலமாக யாழ்.குடாநாட்டில் பொருட்களின் விலைக் கட்டுப்பாடு தொடர்பில் பலரிடையே நிலவிவரும் தெளிவின்மையை அகற்றி நுகர்வோரிடையேயும், வர்த்தகரிடையேயும் விழிப்புணர்வை ஏற்படுத்த பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் நேற்று அமைச்சரின் பணிமனையில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இதன்போது, யாழ்.குடாநாட்டு வர்த்தக சங்கப் பிரதிநிதிகளும் யாழ்.அரசஅதிபர் இமெல்டாசுகுமாரும் கலந்துகொண்டனர்.

விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளினால் அண்மைக் காலமாக யாழ்.குடாநாட்டு வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனைகள் நடத்தப்பட்டு வருவதால் இவ்விடயம் தொடர்பில் குடாநாட்டு வர்த்தகர் சங்கத்தினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது கவனத்திற்கு கொண்டுவந்தனர்.

இதனையடுத்து வர்த்தக மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சுடன் தொடர்பு கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நுகர்வோர் பாதுகாப்புச் சபை அதிகாரிகள், வர்த்தகர்கள், காவல்துறை அதிகாரிகள், அரச அதிபர், மேலதிக அரச அதிபர் ஆகியோரைக் கொண்டு ,பொருட்களின் விலைக் கட்டுப்பாடு தொடர்பிலான தெளிவினை நுகர்வோருக்கும், வர்த்தகர்களுக்கும், ஏனைய துறையினருக்கும் ஏற் படுத்தும் முகமாக நாளை உயர்மட்டக் கலந்துரையாடல் ஒன்று இடம் பெறவுள்ளது.

அதேநேரம், மரக்காலைகளுக்கான அனுமதிப்பத்திரங்கள், மருந்தகங்களில் பணி புரிவதற்கான மருந்தாளர்களுக்கான பயிற்சிகளை வழங்குதல் போன்ற விடயங்கள் தொடர்பிலும் அன்றைய தினம் விசேட கலந்துரையாடல்களை அமைச்சர் உரிய தரப்பினருடன் மேற்கொள்ளவுள்ளார். (ந)

## சரத் பொன்சேகாவுக்கு ஓர் அன்பு மடல்

ஜெனரல் சரத்பொன்சேகாவுக்கு அன்பு வணக்கம். தங்களுக்கு கடிதம் எழுதும் ஆர்வம் நீண்டகாலமாக இருந்தாலும் இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பு முழுமையாக வெளிவந்த பின்னர் கடிதத்தை எழுதலாம் என நினைத்திருந்தேன்.

எனினும் என் நினைப்புக்கு இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பு அவகாசம் தர மறுத்துவிட்டது.

ஆம், தங்களின் 'ஜெனரல்' பதவியை ரத்துச் செய்யுமாறு அத் தீர்ப்பு அமைந்துள்ளதால், இக்கடிதத்தை உடனடியாக எழுத முற்பட்டேன் ஜெனரல் சரத்பொன்சேகா என்று இறுதியாகவேனும் அழைத்துவிட வேண்டும் என்ற விருப்பத்தைத் தவிர, வேறு எதுவும் கடிதம் எழுதும் அவசரத்திற்குக் காரணமல்ல.

ஜெனரல் என்று அழைப்பதில் உங்களுக்கு உண்டாகும் விருப்பத்தின் காரணம் யாதோ என்றால்,

உங்கள் ஜெனரல் பட்டத்தில் பளிச்சிடும் ஒவ்வொரு பதக்கங்களின் வரிசையிலும் தமிழர்கள் மீது நீங்கள் நடத்திய தாக்குதலின் தழும்புகள் இருப்பதை தாங்கள் உணர்ந்திருக்க மாட்டீர்கள்.

நீங்கள் நினைத்திருந்தால்—வேண்டாம் விட்டுவிடுங்கள் என்று கூறியிருந்தால், எத்தனையோ தமிழ் இளைஞர்கள் இன்றும் உயிரோடு இருந்திருப்பர்.

சிலவேளை அவர்கள் உங்களுக்காக இறைவனைப் பிரார்த்தித்திருப்பார்கள்.

என்ன செய்வது அந்த ஆத்மாக்களின் அவலத்தின் ஒலிதான் உங்களை இருட்டறையில் வைத்து சித்திரவதையின் சிறப்பை உணர்த்தி நிற்கின்றது.

உடன்பிறந்தே கொல்லும் வியாதி என்ற தத்துவம் தமிழில் உண்டு. அதுபோல தாமே தமக்கு பகை என்ற தத்துவமும் தங்கள் வாழ்வில் அமுலுக்கு வந்துவிட்டது.

இனி, நடப்பதைக் கண்டுகொள்ள வேண்டியதுதான். இருப்பினும் எங்கு போய் முறையிட்டாலும் நீதி கிடைக்காது என்று நீங்கள் கூறினீர்களே அந்த வார்த்தை உண்மையில் என் நெஞ்சைத் தைத்துக் கொண்டது.

உங்களிடம் முறையிட்டவர்களின் மனுக்களை –உங்கள் முன் கண்ணீர்விட்டு அழுத தமிழ் அன்னையர்களின் அவலத்தை–காணாமல் போன உறவுகளை தேடி அலையும் பரிதாபத்தை நீங்கள் கண்டு கொண்டிருந்திருப்பீர்களாயின்,

அது தொடர்பில் நடவடிக்கை எடுத்து நீதியை நிலைநாட்டி இருந்திருப்பீர்களாயின், நிச்சயம் உங்களுக்கு இறைவன் உதவுவான். அதேநேரம் உங்களால் நீதி வழங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் ஏராளமாக இருந்தும் அதனை நீங்கள் புறந்தள்ளி இருந்ததால் அதன் இரட்டிப்பை அறுவடை செய்வதிலிருந்து தாங்கள் தப்ப முடியாது.

எதுவாயினும் பட்டினத்தார் கூறிய 'தன் வினை தன்னைச்சுடும் ஓட்டப்பம் வீட்டைச்சுடும்' என்ற தத்துவத்தை இக்கடித மூலமாக உங்களுக்கு தருவதோடு,

இந்த தத்துவம் அவர்களுக்கும் பொருந்தும் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

நன்றி.

## ஸ்ரீ.சு. கட்சியின் யாழ்ப்பாண அமைப்பாளராக இராமநாதன்

(கொழும்பு)

யாழ்ப்பாண மாவட்டம் மற்றும் திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் தொகுதி ஆகியவற்றுக்கான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் அமைப்பாளராக ஏ.இராமநாதன் நியமிக்கபட்டுள்ளார். மூதூர் தொகுதியின் அமைப்பாளராக அப்துல் மஜீட் நியமிக்கப்பட்டுள்ளார். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று அலரி மாளிகையில் வைத்து சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மகிந்தராஜ பக்ஷ வினால் கையளிக்கப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அமைப்பாளராக நியமிக்கப்பட்ட பிரபல வர்த்தகர் ஏ.இராமநாதன் கடந்த பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிட்ட அங்கையனின் தந்தையார் எனவும் ஜனாதிபதி டீ.பீ.விஜயதுங்கவின் ஆட்சி காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளராக விளங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந)

## சீனாவில் 6 வயது சிறுமி பங்கு முதலீட்டாளர்

(பீஜிங்)

சீனாவை சேர்ந்த 6வயது சிறுமி, 62,500 பங்குகளுக்கு உரிமையாளராகிய சாதனை படைத்துள்ளார். ஷாக்ஜிங் நகரைச் சேர்ந்த ஜிய்ஜியாங் சன்பிளவர் லைட் எனர்ஜி என்ற நிறுவனத்தின் செயலாளராக இருந்த குறித்த சிறுமியின் தந்தை கடந்த ஆண்டில் இறந்ததையடுத்து அந் நிறுவனத்தில் அவரது பெயரில் இருந்த பங்குகள், மகள் வூக்யூனிஸின் பெயருக்கு மாற்றப்பட்டன.

அதன்மூலம், ஆறே வயதில் பங்கு உரிமையாளரான வூக்யூனிஸின் பங்குகளின் சந்தை மதிப்பு பல கோடி ரூபாய். இதற்கு முன் 2.2 இலட்சம் பங்குகளுடன் கோடீஸ் வரியாக இருந்த 13 வயது சிறுமிதான், சிறிய வயதில் பங்கு உரிமையாளர் என்ற பெயர் பெற்றிருந்தாள். (6)

## மழைக்கால நிலை இன்றும் தொடரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் பலபகுதிகளிலும் நேற்று பரவலாக மழை பெய்தது. இம் மழைகால நிலையானது இன்றைய தினமும் நீடிக்கும் என திருநெல்வேலி வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த 20 ஆம் திகதி நள்ளிரவு முதல் நேற்று பிற்பகல் 2.30 மணிவரை 101.2 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தென்மேல் பருவக்காற்றினால் இலங்கையைச் சூழவுள்ள வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலை காரணமாக நாடுபூராகவும் இடியுடன் கூடிய மழை பிற் பகலிலும் இரவிலும் ஏற்படக்கூடிய சாத்தியம் நிலவுவதாகவும் அத்துடன் நாட்டின் சில இடங்களில் 100 மில்லிமீற்றிலும் கூடிய மழை வீழ்ச்சி கிடைப்பதற்குரிய சாத்தியக் கூறு உள்ளதாகவும் தென்மேல் திசையை நோக்கிய காற்று பலமாக வீசக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6-2)

# குறுகிய பாதையா? அகன்ற பாதையா?

புகழொடு பெரிய ஆண்மையும் விரும்புகின்றவர் புகழ் தேடும் வழியிலும் குடிப்பெருமைக்கு ஒவ்வாத செயல்களைச் செய்யமாட்டார்.

ஆம், மண்ணில் பிறக்கும் ஒவ்வொரு வரும் விண்ணுக்குரிய உயரிய நிலையில் வாழவேண்டும். வாழ்வில் சிறப்பெய்த வேண்டும். எல்லோரும் புகழக்கூடிய நிலையில் வாழவேண்டும் என்று எண்ணுகின்றனர். இந்த எண்ணத்தில் எந்தத் தவறுமே இல்லை. இப்படி எண்ணுவது சாலச்சிறந்ததே.

ஆனால் இந்த உயர்வையும், பெருமையையும், புகழையும் அடையதேர்ந்து கொள்கின்ற பாதைதான் கேள்விக்குறியா கவும் கேலிக்கைக்குரியதாகவும் போய்விடுகி ன்றது.

வரலாற்றை புரட்டும்போது, குறுகிய வழியில் முன்னேறியவர் எவ்வளவு சீக்கிரம் சறுக்கினார்கள், நேரிய வழியில் முன்னேறியவர்கள் எவ்வளவு தூரம் நிலைத்து நின்றவர்கள் என்பது தெளிவாகும்.

ஆம், இன்றைய நற்செய்தி நம்மிடம் இந்தக் கேள்வியை முன்வைக்கிறது. மீட்படைய குறுகிய பாதையா? நேரிய பாதையா?

இந்தக் கேள்வி இன்றைய நற்செய்தியின் முதற்பகுதியில் ஒரு மனிதன் இயேசுவை வினவிய் கேள்வியின் அடிப்படையில் எழுந்தது? 'ஆண்டவரே மீட்புப் பெறுபவர் சிலர் மட்டும் தானா?' என்பதுதான் அந்தக்கேள்வி.

அவன் கேட்டதும் பொருத்தமானதாகத்தான் இருந்தது. காரணம் யூத சமயத்திலே ஒருவன் சட்டத்தை கடைப்பிடித் தாலே மீட்படைவான் என்ற ஒரு அசட்டுத்தனமும், அசாத்திய நம்பிக்கையும் யூதர்களிடத்தில் இருந்து. எனவே மனிதனைவிட சட்டத்திற்கே அவர்கள் மிகுந்த மதிப்பளித்தனர், சட்டத்தை வைத்துக் கொண்டு ஆண்டவரின் மீட்பை விலை பேசினர். இங்கு சட்டத் தைக் கடைப்பிடிப்பவன் யூதன் மட்டும்தான். அப்படி யென்றால் அவனுக்கு மட்டும்தான் மீட்பு உண்டு. மற்ற அனைவருக்கும் சட்டம் இல்லை. எனவே அவர்களைப் பாவிகள் என்று ஒதுக்கி வைத்தனர். இங்கு தவறு என்னவென்றால் சட்டத்தை வைத்துக் கொண்டு மனிதனை ஒதுக்கியது; அடிமைப்படுத்தியது, புறவினத்தான், பாவி என்று பட்டம் சூட்டி கேவலப்படுத்தியதுதான்.



இங்குதான் ஆண்டவர் இயேசு சாட்டையடிப்போல் ஒரு புதிய கருத்தை முன்வைக்கின்றார். 'இறுக்கமான வழியாக நுழைய வருந்தி முயலுங்கள், ஏனெனில் பலர் உள்ளே செல்ல முயன்றும் இயலாமற்போகும்.'

ஆம், சாதனைகளில் அல்ல, சோதனைகளைத் தாங்கிக் கொண்டு வெற்றி காண் பதில்தான் உண்மையான மகிழ்ச்சி உண்டு. அகலமான பாதை பார்ப்பதற்கு அழகாக இருக்கும். ஆனால் அதள பாதாளத்தில் தள்ளிவிடும். குறுகிய பாதை பார்ப்பதற்கு கரடு முரடாக இருக்கும். ஆனால் ஆண்டவன் இல்லத்திற்கு அழைத்துச் செல்லும். உன்னுடைய பாதை என்ன?

## பரமபிதா காட்டிய பாதை

ஜோன் ரொபேர்ட்

IDD

அழைப்பு
இப்போது நிமிடத்திற்கு
ரூ. 5/- இலிருந்து

Chat
Suntel

# மிகக் குறைந்த கட்டணங்களில் மிகத் தெளிவான IDD அழைப்புக்கள்

யாழ்ப்பாண மக்களுக்கு (பிரதேசக் குறியீடு 021) சண்டெல் Chat மூலம் இப்போது கவர்ச்சிகரமான புதிய நன்மை வழங்கப்படுகிறது. இங்கு பட்டியலிடப்பட்டுள்ள நாடுகளிலுள்ள 2 IDD இலக்கங்களுக்கு நீங்கள் மிகத் தெளிவான அழைப்புகளை எடுக்கலாம்.

2 IDD இலக்கங்களைப் பதிவுசெய்ய 1484ஐ டயல் செய்து, அறிவுறுத்தலைப் பின்பற்றுங்கள். இந்த இலக்கங்கள் நிலையான அல்லது மொபைல் இலக்கங்களாக இருக்கலாம்.

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

IDD கட்டண அட்டவணை

| நாடு | சண்டெல் சுப்பர் IDD | |
|---|---|---|
| | நிலையான | மொபைல் |
| அவுஸ்திரேலியா | ரூ.6 | ரூ.18 |
| பஹ்ரெயின் | ரூ.12 | ரூ.18 |
| கனடா | ரூ.5 | ரூ.5 |
| சீனா | ரூ.5 | ரூ.5 |
| சைப்பிரஸ் | ரூ.10 | ரூ.10 |
| பிரான்ஸ் | ரூ.6 | ரூ.18 |
| ஜேர்மனி | ரூ.6 | ரூ.20 |
| இந்தியா | ரூ.6 | ரூ.6 |
| இத்தாலி | ரூ.6 | ரூ.22 |
| ஜப்பான் | ரூ.7 | ரூ.18 |
| ஜோர்தான் | ரூ.12 | ரூ.12 |
| குவைத் | ரூ.15 | ரூ.20 |
| லெபனான் | ரூ.12 | ரூ.20 |
| மலேசியா | ரூ.7 | ரூ.9 |
| ஓமான் | ரூ.20 | ரூ.30 |
| கட்டார் | ரூ.20 | ரூ.22 |
| சவுதி அரேபியா | ரூ.10 | ரூ.20 |
| சிங்கப்பூர் | ரூ.5 | ரூ.10 |
| சுவிற்சர்லாந்து | ரூ.7 | ரூ.24 |
| தாய்லாந்து | ரூ.6 | ரூ.6 |
| ஐக்கிய இராச்சியம் | ரூ.5 | ரூ.20 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | ரூ.20 | ரூ.20 |
| ஐக்கிய அமெரிக்கா | ரூ.5 | ரூ.5 |

Suntel
உங்கள் சேவை வழங்குநர்

SAATCHI & SAATCHI

# இறுதிவரை போராடி பாகிஸ்தான் வெற்றி இங்கிலாந்து அணி தொடரில் முன்னிலை

(லண்டன்)

கடும் போராட்டத்தின் பின் பாகிஸ்தான் அணி மூன்றாவது டெஸ்டில் 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணியை வீழ்த்தியது.

எனினும் 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணி 2:1 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

இதில் முதலிரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி தொடரில் 2:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலையில் மூன்றாவது போட்டி கடந்த 18ஆம் திகதி லண்டன் கென்னிங்ரொன் ஓவலில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 233 ஓட்டங்களை எடுத்தது.

இதில் பிறிர் ஆட்டமிழக்காமல் 84 ஓட்டங்களையும் பிரோட் 48 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் வாகப் றியாஷ் 5 விக்கெட்டுக்களையும் மொகமெட் ஆசிப் 3 விக்கெட்டுக்களையும் அமீர், அஜ்மல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 308 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அசார் அலி ஆட்டமிழக்காமல் 92 ஓட்டங்களையும் மொகமெட் யூசுப் 56 ஓட்டங்களையும் உமர் அக்மல் 38, யசீர் ஹமிட் 36 றியாஷ் 27 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சுவான் 4 விக்கெட்டுக்களையும், அன்டர்சன், பிரேட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ப்பின் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினார்.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 75 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையிலிருந்த இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 221 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் நான்காம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் 222 ஓட்டங்களை எடுத் து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் குக் 110 ஓட்டங்களையும் திரோட் 36, பீற்றர்சன் 23 ஓட்டங்களையும் எடுத்தார்கள்.

பந்துவீச்சில் மொகமட் அமீர் 5 விக்கெட்டுக்களையும் சயிட் அஜ்மல் 4 விக்கெட்டுக்களையும் றியாஷ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 148 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு முதலாவது ஓவரிலேயே யசீர் ஹமீட் பூச்சியத்துடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து இணைந்த பர்காத், சல்மான் பட் சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கினார்.

இதில். இம்ரான் பர்காத் 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க பாகிஸ்தான் அணி 57 ஓட்டங்களை எடுத்து இரண்டாவது விக்கெட்டை இழந்தது.

தொடர்ந்து களமிறங்கிய யூசுப், சல்மான் பட்டுடன் இணைந்து பொறுப்பான இணைப்பாட்டத்தை வழங்கினார்.

எனினும் அணித்தலைவர் சல்மான் பட் 48 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க பாகிஸ்தான் அணி 103 ஓட்டங்களை எடுத்து 3ஆவது விக்கெட்டையும் இழந்தது.

தொடர்ந்து அசார் அலி 05, மொகமட் யூசுப் 33 ஓட்டங்களுடனும் கம்ரான் அக்மல் பூச்சியத்துடனும் ஆட்டமிழக்க பாகிஸ்தான் அணி 132 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட்டுக்களையிழந்தது.

எனினும் உமர் அக்மலின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் பாகிஸ்தான் அணி இரண்டாவது இன்னிங்ஸில் 41.4 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களையிழந்து 148 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இதில் உமர் அக்மல் 16, அமீர் 04 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் சுவான் 3 விக்கெட்டுக்களையும் அன்டர்சன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்ற போதும் இங்கிலாந்து அணி தொரடரில் 2:1 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது.

இப் போட்டியில் ஆட்டநாயகனாக பாகிஸ்தான் அணியின் மொகமெட் அமீர் தெரிவானார்.

இத் தொடரில் 4ஆவதும் இறுதியுமான டெஸ்ட் எதிர்வரும் 26ஆம் திகதி லோட்ஸில் ஆரம்பமாகிறது.

## தரம் 5 புலமைப் பரீட்சை

## வன்னி மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுவிட்டன

வன்னி கல்வி வலயங்களிற்கு உட்பட்ட பாடசாலைகளில்தரம்-5புலமைப்பரிசில்பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான விண்ணப்பப் பத்திரங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா தெரிவித்துள்ளார்.

வன்னிப் பிராந்தியத்திலுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் மற்றும் வவுனியா வடக்கு கல்வி வலயங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளைச்சேர்ந்ததரம்-5பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் சிலருக்கு அனுமதிப்பத்திரங்கள் கிடைக்கவில்லை என இலங்கை ஆசிரியர்சங்க பொதுச் செயலாளர் ஜோசப்ஸ்டாலின் பரீட்சைகள் ஆணையாளருக்குதெரியப்படுத்தியிருந்தார்.

அத்துடன் இன்று பரீட்சை நடைபெறவுள்ள நிலையில் பரீட்சை அனுமதிப் பத்திரங்களை உடனடியாக வழங்குமாறு அவர் பரீட்சை ஆணையாளரைக் கேட்டிருந்தார். இது தொடர்பில் வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளில் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளது.

எனினும் கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்கவில்லை.

கிடைக்கப்பெறாத மாணவர்களுக்குரிய பரீட்சை அனுமதிப்பத்திரம் நேற்றிரவு தொலைநகல் மூலம் பரீட்சைத்திணைக் களத்திலிருந்து பெறப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் பல மாணவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கவில்லை குறித்த மாணவர்களின் பெற்றோர்களிடையே உரிய விழிப்புணர்வு இன்மையால் பிள்ளைகள் பாதிப்படைந்துள்ளனர் என வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)


காரைநகர் தோப்புக்காடு

வள்ளி, தேவசேனா சமேத ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில்

மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2010



நிகழும் விகிர்தி வருடம் ஆவணித் திங்கள் 03 ஆம் நாள் (2010.08.19) வியாழக்கிழமை பூர்வாங்க கிரியைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. 22.08.2010 பி.ப 2.00 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெற்று 23.08.2010 திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாகி 9.10 மணியளவில் ஸ்த்தூபி அபிஷேகமும் 9.30 மணியளவில் **மகாகும்பாபிஷேகமும்** நடைபெறவுள்ளது. இக்கிரியைகள் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ கு.சண்முகராஜக் குருக்கள் தலைமையில் சிவஸ்ரீ பா.பாலகிஷ்ணக்குருக்கள் பிரதிஷ்டா குருவாகவும் பிரம்மஸ்ரீ ச.மதுசூதனச்சர்மா சாதசாச்சாரியாராகவும் தேவஸ்தான குரு பிரம்மஸ்ரீ கு.சரவணபவானந்த சர்மா அவர்களின் வழிகாட்டலில் தலைசிறந்த சிவாச்சாரியார்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற முருகப்பெருமானின் திருவருள் கைகூடியுள்ளது.

அத்தருணம் முருகப்பெருமானின் அடியார்கள் ஆலயத்திற்கு வருகை தந்து மஹாகும்பாபிஷேகத்தை கண்ணுற்று முருகப்பெருமானின் இஸ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அனைவரும் வருக

முருகப்பெருமானின் திருவருள் பெறுக

சுபம்

2010.08.22

தோப்புக்காடு — இங்ஙனம்

காரைநகர் (2232) ஆலய பரிபாலனசபை


# பரமேஸ்வராக் கல்லூரி நிறுவுனர் தின நிகழ்வு

## ஒழுங்கமைப்புக் கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியின் ஸ்தாபகர் தினம் எதிர்வரும் 30-ந் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் காலை 9.45 மணிக்கு இடம் பெறும்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில்,

உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க பிரதம விருந்தினராகவும், கௌரவ விருந்தினர்களாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினரும் கொழும்பு ஸ்ரீ பொன்னம்பல வாணேசர் ஆலய அறங்காவலருமான டி.எம்.சுவாமிநாதன், வடக்கு மாகாண கல்வி அமைச்சரின் செயலாளர் எல்.இளங்கோவன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

இந்நிகழ் வையொட்டிய ஒழுங்கமைப்புக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு திருநெல்வேலி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெறும் எனவும், இக்கூட்டத்தில் பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர்களைக் கலந்து கொள்ளுமாறும் கல்லூரியின் பழைய மாணவர் சங்க யாழ்.கிளைத் தலைவர் கனக. நமனாதன் கேட்டுள்ளார். (ந)


சித்தாவைத்தியம்

வாதம், நரம்புத்தளர்ச்சி, மெலிவு, உடற்பருமன், நீரிழிவு, சிறுநீரக குறைபாடுகள், கெற்பவாயு, பாலியற் குறைபாடு, குளோக்கோமா, கோரியாசிஸ், இளநரை, பொடுகு, தொய்வு, அதி இரத்த அமுக்கம், கிரந்தி, கரப்பன், வெள்ளைபடுதல் போன்ற நோய்களுக்கு சிகிச்சை பெறலாம். டாக்டர் க.பாலசுப்பிரமணியம் அவர்களை 25,26,27ம் திகதிகளில் சுன்னாகத்தில் சந்திக்கலாம்.

தொலைபேசி இலக்கங்கள் :-
0777047371/0771005971
0779773664

கு.சிவானந்தன்
வங்கி ஒழுங்கை,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

(2230)

## யாழ்.பல்கலை மாணவன் டெங்கிற்குப் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வந்த வன்னியைச் சேர்ந்த இ.விஜேந்திரன் என்ற மூன்றாம் வருட முகாமைத்துவ பீட மாணவன் டெங்கு நோயினால் நேற்று மாலை மரணமடைந்துள்ளார்.

முல்லைத்தீவு முள்ளியவளையைச் சேர்ந்த இந்த மாணவன் கடந்த சில நாள்களின் முன்பாக டெங்கு நோய் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அவரது இரத்தம் டெங்கு கிருமிகளால் பாதிக்கப்பட்ட பொழுது A+ இரத்தம் இல்லாத நிலையில் உயிரிழந்துள்ளார்.

தடுப்பு முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டுப் பல்கலைக்கழகத்திற்குக் கல்வி கற்க வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

# இலங்கையின் மனித உரிமை மீறலை ஐ.நா. சபை விசாரிக்க வேண்டும்

## மன்னிப்புச் சபை கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்றிருக்கும் பாரதூரமான மனித உரிமை மீறல் குற்றங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபை கட்டாயம் சுதந்திரமான முறையில் புலனாய்வு விசாரணைகளை நடத்த வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

கடந்த 19 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்ட சர்வதேச மனிதாபிமான தினத்தை முன்னிட்டு வெளியிட்டிருக்கும் அறிக்கை ஒன்றிலேயே சபை இவ்வாறு கோரியுள்ளது.

மனிதாபிதானப் பணியாளர்கள் 17 பேர் 2006 ஆம் ஆண்டு மூதூரில் படுகொலை செய்யப்பட்டமையையும் இம் மனிதாபிமான பணியாளர்களின் உறவினர்கள் நீதி கிடைக்கும் என்று இன்னமும் காத்திருக்கின்றமையையும் நினைவுகூர்ந்து இவ் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இப் படுகொலைகள் குறித்து இன்னமும் முறையான விசாரணைகள் நடத்தப்படவேயில்லை.

இலங்கையில் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் குறித்து முறையான விசாரணைகளை நடத்தக் கூடிய வகையில் செயற்றிட்ட முறைமை கிடையாது எனவும் இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குக் காணாமல் போதல்கள் உட்பட இம் மனித உரிமை மீறல்களை விசாரிக்கக் கூடிய வகையில் சுதந்திரமோ, அதிகாரமோ கிடையாது என்றும் மனித உரிமை மீறல் குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்த இலங்கை தவறுகின்றது என்றும் இவ்அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-5)

## 13 ஆவது திருத்தச் சட்ட...

முறைக்குச் சாத்தியமாகும். அதற்காக 13-வது திருத்தச் சட்ட மூலமே ஒட்டுமொத்த இனப் பிரச்சினைக்குமான தீர்வாக அமையாது என்றார்.

இச் செயலமர்வில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார, நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் எம்.சந்திரகுமார், பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் செயலாளர் நாயகம் தி.சிறிதரன், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த எம்.முஸ்தபா ஆகியோருடன் ஜனாதிபதிச் சட்டத்தரணி கலாநிதி ஐயம்பதி விக்கிரமரட்ண, பேராசிரியர்களான ஏ.எம். நவரட்ண பண்டார, ரஞ்சித் அமரசிங்க, அசோக எஸ்.குணவர்த்தன ஆகியோரும் பங்கு கொண்டனர். (ந-5)


## மணமகள் தேவை

பிரித்தானிய (லண்டன்) பிரஜாவுரிமை பெற்ற 34 வயது அவிட்ட நட்சத்திரம் உடைய அழகிய இந்து வேளாளர் மணமகனுக்கு (தற்போது இங்கு வந்துள்ளார்) ஆங்கில அறிவுள்ள அழகிய மணமகள் தேவை.

தொடர்பு:- 077 9496985 / 021 222 9425 / 021 321 7915 (C-912)


## புலிகளின்...

படிக்கை கைச்சாத்திடப்படும் வரையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் படைத் தளபதிகளிடம் கருத்துக் கோர வில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவினைப் பிழையான வழியில் இட்டுச் செல்ல ஒஸ்ரின் பெர்னாண்டோ முயற்சிக்கின்றார்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு முதல் நாளில் படைத் தளபதிகளை நாடாளுமன்றத்திற்கு அழைத்து உடன்படிக்கை குறித்து அறிவிக்கப்பட்டது.

கடற்படைத் தளபதியின் ஊடாகத் தாம் யுத்த நிறுத்த உடன்படிக்கை குறித்த தகவல்களை அறிந்து கொண்டதாக ஒஸ்ரின் பெர்னாண்டோ வெளியிட்ட கருத்து முற்றிலும் பிழையானதாகும். (ந-5)

## ஜி.எஸ்.பி. வரிச் சலுகை...

காணப்படுகின்றது.

எனவே சலுகைத் திட்டத்தை நீடிப்பது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என ஒன்றியத்தின் உயரதிகாரி தெரிவித்துள்ளார்.

2005 ஆம் ஆண்டு நிபந்தனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தினால் பேச்சுவார்த்தைகளில் இணைந்து கொள்வதாக இலங்கை அரசாங்கம் அண்மையில் அறிவித்திருந்தது.

புதிய நிபந்தனைகள் விதிக்கப்பட்டாலும் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது. (ந-5)

## மாற்றுக் கொள்கையாளர்...

தலைவர் சோமவன்ச அமரசிங்க, ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவர் மனோ கணேசன் மற்றும் புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண ஆகியோர் இந்த விடயம் குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களில் சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. யுத்த வெற்றியின் நிழலில் தொடர்ச்சியாக அரசாங்கத்தினால் குளிர்காய முடியாது.

தனிப்பட்ட ஓர் குடும்பம் அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்ளும் நோக்கில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக தெரிவித்த அவர், சர்வதேச நிறுவனங்கள், மாணவர்கள், ஊடகங்கள் என பல்வேறு தரப்பினர் மீதும் அரசாங்கம் அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விடுவதாகக் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு...

இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா மீண்டும் தனது நிலைப்பாட்டை உறுதிப்படுத்தியுள்ளதாக செய்திகள் வெளிவரும் இவ் வேளையில், இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா ஒக்டோபர் மாதம் இலங்கை வருவது முக்கிய திருப்பு முனையாக அமையும் என நம்பப்படுகின்றது.

இதேவேளை வன்னிப் பிரதேசத்தில் மீள் குடியேற்றம் மேற்கொள்ளப்படும் முறைகள் குறித்து ஆராய இந்திய விசேட தூதுவர் விரைவில் இலங்கைக்கு வருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பெரும்பாலும் முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பாலு மற்றும் உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் ஆகியோரில் ஒருவரே விசேட தூதுவராக இலங்கைக்கு வருவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த மாதத்திற்குள் விசேட தூதர் இலங்கைக்கு அனுப்பப்படுவார் என இந்திய வெளியுறவுத்துறைச் செயலாளர் நிருபமாராவ் அண்மையில் தகவல் தெரிவித்திருந்தார்.

இதேவேளை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்திருந்த தகவல் ஒன்றில் இலங்கைக்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் அதிகாரி ஒருவரே வருவார் என தெரிவித்திருந்தார்.

இலங்கையின் இனப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையிலான முனைப்புக்களைக் காட்டினால் மாத்திரமே தமிழக சட்ட சபைத் தேர்தலில் தமது தோழமைக் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு காங்கிரஸ் கட்சியினால் உதவ முடியும் என்ற கருத்து தமிழகத்தில் நிலவுகின்றது.

தமிழக முதலமைச்சர் கருணாநிதி, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்கவேகிருஷ்ணாவின் இலங்கை விஜயம் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)


## கண்ணீர் அஞ்சலி



திருமதி

**பூபாலசிங்கம் பாக்கியம்**

எங்கள் ஆருயிர் நண்பன் **பூபாலசிங்கம் அன்பழகன்**

அவர்களின் அன்புத் தாயார்

திருமதி **பூபாலசிங்கம் பாக்கியம்**

அவர்களின் திடீர் மரணச் செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அவர்களின் பிரிவால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாதகல் (2234) **அன்பு நண்பர்கள்**



அனுமதிகள் இன்று முதல்

2010 மூன்றாந்தவணை அனுமதி

தரம்:4 முதல் தரம்: 11 வரை கற்கும் புதிதாக இணையும் மாணவர்களுக்கு இன்று முதல் புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

அவ்வாறே.. (பெற்றோருடன் வாருங்கள்)

GR:6,7,8 ENGLISH MEDIUM

பாடசாலைகளில் எமது மாணவர்கள் முன்னிலையில்

யாழ் நகரின் தனித்துவ ஆசிரிய குழாம்

உங்கள் பிள்ளை தரம்:4இல் கற்ற படிமுறைகளோடு பல்கலைக் கழகம் செல்ல, ஒழுங்கு கட்டுப்பாட்டுடன் கல்வியைத் தொடர, உங்கள் கற்பனை நிஜமாக இன்றே உங்கள் பிள்ளையை இணையுங்கள்

**சயன்ஸ் அக்கடமி**

அரியாலை. ⟷ இரு இடங்கள் ⟷ நல்லூர்.

ஸ்ரான்லி கல்லூரி முன்பாக. நல்லூர் கோயில் முன்பாக

எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெற்றோரே!

அமைதியான சூழலில் சீரான நேரஒழுங்கில்



## நியூ சிற்றி றேடர்ஸ்

சொனி, பனசொனிக், சொனிக்கா றேடியோ, கசற் றேக்கோடர், சொனி, பனசொனிக் 14", 21" கலர் ரீவி, டிஸ் ரீவி, ரிசிவர், சொனி, பனசொனிக், LG DVD பிளேயர், கார் றேடியோ, அம்பிலிவயர், வவல்ஸ், வூவர்ஸ் ஆகியவற்றை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளவும், அவற்றைச் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்.

நியூ சிற்றி றேடர்ஸ்,
319A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 3226 (C-907)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.